

THE LATE SIR HENRY COTTON.

காலஞ்சென்ற ஸர் ஹென்ரி காட்டன்.

# ஜனோபிமானி

(முன்பு 'பிழைக்கும் வழி' யென்று வழங்கியது.)

**THE PEOPLE'S FRIEND.**

FORMERLY KNOWN AS THE 'PRACTICAL LIFE.'

ஜி. எ. வைத்யராமன், பி. எ., பத்ராதிபர். — G. A. VaidyaRaman, B. A., EDITOR.

புஸ்தகம் 7. Vol. 7. — ராக்ஷஸவருஷ, ஐப்பசிமீ, OCTOBER, 1915. — ஸஞ்சிகை 14. No. 14.


## The People's Friend.

An illustrated Tamil monthly devoted to public welfare and popular education.

The 'People's Friend' is subscribed for by Government for use in the agricultural stations and by several Local Boards and Municipalities for the use of the teachers and pupils in the schools under their control.

RATES OF SUBSCRIPTION POST FREE.

| | *Inland* | | | | *Foreign.* | | |
|---|---|---|---|---|---|---|---|
| | Rs. | A. | P. | | Rs. | A. | P. |
| Per annum ... | 4 | 0 | 0 | ... ... | 6 | 0 | 0 |
| Single copy ... | 0 | 6 | 0 | ... ... | 0 | 8 | 0 |
| Sample copy | 0 | 6 | 0 | ... ... | 0 | 8 | 0 |

RATES OF ADVERTISEMENT.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 Page | ... | 5 | 0 | 0 | per month. |
| ½ do | ... | 2 | 8 | 0 | do |
| ¼ do | ... | 1 | 4 | 0 | do |
| $\frac{1}{16}$ do | ... | 1 | 0 | 0 | do |

The above rates are all *net* and subject to no discount whatever. Orders should be accompanied with advance.

**Notice to Contributors:**—The Editor solicits contributions on subjects relating specially to agriculture, trade, industry and popular, scientific and technical education. Articles should be written in plain colloquial Tamil on one side of the paper only and on half margin. Accepted articles will be paid for on publication. It will be understood that the publishers may, at their discretion republish in book form articles which have been paid for at the time of publication in the journal.

No money should be paid to any Agent. All remittances and letters should be addressed to the Publishers, Messrs G. A. VaidyaRaman & Co., 3 & 4, Kondi Chetty Street, George-town, Madras.

## ஜனோபிமானி.

பொது ஜனங்களின் அறிவைப் பரவச்செய்து அவர்களுடைய க்ஷேமத்துக்காக உழைத்துவரும் ஒரு மாஸாந்தரத் தமிழ்ப பத்ரிகை.

விவஸாயப் பண்ணைகளின் உபயோகத்துக்காக கவர்ன்மெண்டாரும், ஸ்கூல்களில் உபாத்யாயர்கள் மாணாக்கர்கள் இவர்களுடைய உபயோகத்துக்காக பல லோகல் போர்டுகளும் முனிஸிபாலிட்டிகளும் 'ஜனோபிமானி'யை வாங்கிவருகிறார்கள்.

தபால் சார்ஜ் உள்பட சந்தா விவரம்.

| | உள் நாடு. | | | | அந்ய நாடு. | | |
|---|---|---|---|---|---|---|---|
| வர்ஷம் 1-க்கு ... | 4 | 0 | 0 | ... | 6 | 0 | 0 |
| தனிப்ரதி ... | 0 | 6 | 0 | ... | 0 | 8 | 0 |
| மாதிரி காபி ... | 0 | 6 | 0 | ... | 0 | 8 | 0 |

சந்தாப்பணத்தை ஒரு ஏஜெண்டினிடத்திலும் கொடுக்கக்கூடாது. ஸகல பணத்தையும் எங்களுக்கு நேரில் அனுப்பிவிடவேண்டும்.

விளம்பர விகிதங்கள்.

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 1 பக்கத்திற்கு | மாஸம் | ஒன்றுக்கு | 5 | 0 | 0 |
| ½ ,, | ,, | ,, | 2 | 8 | 0 |
| ¼ ,, | ,, | ,, | 1 | 4 | 0 |
| $\frac{1}{16}$ ,, | ,, | ,, | 1 | 0 | 0 |

வ்யாஸம் எழுதுபவர்கள் கவனிக்கவேண்டியவை.

விவஸாயம், வ்யாபாரம், கைத்தொழில் விஷயங்களைப்பற்றி வ்யாஸங்கள் தேவை. அவைகள் ஒப்புக்கொள்ளப்பட்டால் ப்ரசுரமானதும், எழுதினவர்களுக்கு தக்க ஸம்பாவனைசெய்யப்படும். ஒவ்வொரு வ்யாஸத்தையும் கடுதாசியின் ஒரேபக்கத்தில் ஒருபாதியை விட்டு மறுபாதியில் மட்டும் எழுதவேண்டும். பேசும் தமிழ்தான் தேவை. கடினமான தமிழ் உதவாது.

ஸம்பாவனை செய்திருக்கும் வ்யாஸங்களை நாங்கள் எங்கள் இஷ்டப்படி எந்த விதம் வேண்டுமானாலும் மறுபடி ப்ரசுரிக்க அதிகாரமுண்டு என்பதை நேயர்கள் அறியவேண்டும்.

ஜி. எ. வைத்யராமன் அண்ட் கம்பெனி,
3 & 4, கொண்டி செட்டித் தெரு,
ஜார்ஜ் டவுன், மதராஸ்.

ஜனாபிமானி.

புஸ்தகம் 7.] ராக்ஷஸ ஐப்பசிமீ. [ஸஞ்சிகை 14.

## VILLAGE PANCHAYATS IN MADRAS.

## சென்னை ராஜதானியில் க்ராமப் பஞ்சாயத்துகள்.

ஐந்தாறு வர்ஷங்களுக்கு முன்னால் இந்திய ராஜாங்க நிர்வாக முறைகளைப்பற்றிப் பரிசீலனை செய்த அதிகாரப் பிரிவினைக் கமிட்டியார், ஸ்தல ஸ்வய ஆட்சியைப்பற்றி பல ப்ரேரணைகள் செய்தார்கள். இந்தியா கவர்ன்மெண்டார் 1910-ம் வர்ஷத்தில் அந்த ப்ரேரணைகளை மாகாண கவர்ன்மெண்டுகளுக்கு அனுப்பி, அவைகளை அவைகளுடைய அபிப்ராயங்களைத் தெரிவிக்கும்படி கேட்டுக்கொண்டார்கள். மாகாண கவர்ன்மெண்டுகள் தங்களுடைய அபிப்ராயங்களைத் தெரிவித்ததன்மேல், இந்தியா கவர்ன்மெண்டார் சில மாஸங்களுக்கு முன்னால் ஸ்தல ஸ்வய ஆட்சியை இன்னவிதத்தில் அபிவ்ருத்தி செய்யவேண்டுமென்றும், இன்னின்ன விஷயங்களில் மாகாண கவர்ன்மெண்டுகள் தங்களுடைய யுக்தப்போல் செய்யலாமென்றும் தெரிவித்து ஒரு தீர்மானம் வெளியிட்டார்கள். அந்தத் தீர்மானத்தின் முக்யமான பாகங்களை சென்ற மே, ஜூன் மாஸத்து 'ஜனாபிமானி'யில் வெளியிட்டோம். சென்னை கவர்ன்மெண்டார், மேற்சொன்ன தீர்மானத்தை அனுஸரித்து பஞ்சாயத்துகள் விஷயமாய் ஒரு உத்தரவு ப்ரசுரித்திருக்கிறார்கள். அதன் ஸாராம்சத்தை இங்கு எழுதுகிறோம்.

அதிகாரப் பிரிவினைக் கமிஷனின் அபிப்ராயம் — அதிகாரப் பிரிவினைக் கமிட்டியார் க்ராமங்களின் வேலைகளை நிர்வகிக்க க்ராமப் பஞ்சாயத்துகள் ஸ்தாபிக்கவேண்டுமென்று தெரிவித்திருக்கிறார்கள். அப்படி பஞ்சாயத்துகள் ஸ்தாபிக்கவேண்டுமென்றதன் நோக்கமென்னவென்றால், ராஜாங்க அதிகாரங்களை பற்பல ஸ்தாபனங்களுக்குப் பிரித்துக் கொடுப்பதோடு, ஜனங்களை அரசாட்சி வேலையில் சேர்த்துக்கொள்வதே. அந்தக் கமிட்டியார் மேற்சொன்ன பஞ்சாயத்துகளை முற்காலத்தில் இந்தியாவிலிருந்து வந்த பஞ்சாயத்துகளைப்போல் ஸ்தாபிக்கவேண்டுமென்று அபிப்ராயப் படுவதாகத் தெரிகிறது. ஆனால் அவைகளைக் கொஞ்சம் கொஞ்சமாகவும், சாச்வதமல்லாத தற்கால ஏற்பாடுகளாகவும் ஸ்தாபிக்க வேண்டுமெனவும், அவைகளை அந்தந்த ஊர்களுக்கு ஏற்றவைகளாக இருக்கும்படி அமைக்க வேண்டுமெனவும், அவைகளை ரொம்ப ஜாக்ரதையோடும், பொறுமையோடும், அபிவ்ருத்தி செய்யவேண்டுமெனவும், அவைகள் கடைத்தேறுமா, கடைத்தேறுவா வென்பது ஜில்லா அதிகாரிகள் அனுதாபத்துடன் அவைகளுக்காக உழைக்கிறார்களா என்பதைப் பொறுத்திருக்குமெனவும் மேற்படி கமிட்டியார் அபிப்ராயப்பட்டிருக்கிறார்கள்.

மேலும் அவர்கள் சொல்லுவதாவது: ஒவ்வொரு க்ராமத்துக்கும் ஒரு பஞ்சாயத்திருக்க வேண்டும். அதன் மெம்பர்களை மற்ற ஸ்தல ஸ்தாபனங்களில் நடப்பது போல் எலெக்ஷன் பண்ணி தெரிந்தெடுப்பதுபோல் தெரிந்தெடுக்காமல், ஒரு ஸபையாய்ப் பார்த்துத் தெரிந்தெடுக்க வேண்டும். க்ராமமுன்ஸிப் லாயக்குள்ளவராயிருந்தால், அவரையே பஞ்சாயத்துக்கு சேர்மனாக நியமிக்க வேண்டும். சிறு ஸிவில, க்ரிமினல் கேஸுகளை விசாரிக்க பஞ்சாயத்துகளுக்கு அதிகாரம் கொடுக்கவேண்டும். கிணறுவெட்டுதல், ரஸ்தாக்கள் போட்டு நிர்வகித்தல், பாடசாலைகள், சந்தைகள்,

க்ராம ஸுகாதாரம் ஆகிய இவைகளை கவனித்து இவைகளுக்காக செலவுசெய்ய பஞ்சாயத்துகளுக்கு அதிகாரம் கொடுக்கவேண்டும். ஆனால் அவைகளுக்கு புதிதாக வரிகள்போட அதிகாரம் கொடுக்கக்கூடாது. க்ராமப் பஞ்சாயத்துகளுக்கு வேண்டிய பணத்துக்கு, சில ஸெஸ் பண்டிலிருந்து பணம் கொடுத்தும், சந்தைகளில் வரி வஸூல் செய்யவும், ஸிவில் வ்யாஜ்யங்களில் பீஸ் வாங்கவும் அநுமதிகொடுத்தும், லோகல்போர்டுகளிலிருந்து இவைகளுக்கு க்ராண்டுகள்கொடுக்க ஏற்பாடுசெய்தும் உதவிசெய்யவேண்டும். இந்தப் பஞ்சாயத்துகள் ஜில்லா போர்டுகளுக்காவது தாலுக்கா போர்டுகளுக்காவது கீழ்ப்பட்டிருக்கக் கூடாது. இப்போதுள்ள லோகல்பண்ட் யூனியன் பஞ்சாயத்துகளை எடுத்துவிட்டு, அவைகளுக்கு பதிலாக க்ராம பஞ்சாயத்துகள் ஸ்தாபிக்கவேண்டும். எந்த க்ராமத்துக்காவது பட்டணங்களின் லக்ஷணமிருந்தால், அவைகளுக்கு சிறியதாக ஒரு முனிஸிபல் கௌன்ஸில் அல்லது பட்டணத்துப் பஞ்சாயத்து ஸ்தாபிக்க வேண்டும். இவைகள் அதிகாரப் பிரிவினை கமிட்டியாரின் அபிப்ராயங்கள்.

இந்தியா கவர்ன்மெண்டின் அபிப்ராயம்.—இந்தியா கவர்ன்மெண்டார் ராயல்கமிஷனின் ப்ரேரணைகளை மாகாணகவர்ன்மெண்டுகளுக்கு அனுப்பினபோது, அவர்கள் (இந்தியா கவர்ன்மெண்டார்) பஞ்சாயத்து ஸ்தாபிப்பதில் கெடுதிகள்நேரிடாதபடி ஜாக்ரதையோடு முயற்சிசெய்துக்கொள்ள வேண்டுமென்றும், இந்த முயற்சிகளை ஜில்லா அதிகாரிகளின் மேற்பார்வையில் நடத்தவேண்டுமென்றும், எந்த க்ராமங்களின் நிலைமை பஞ்சாயத்து ஸ்தாபிப்பதற்கு ஸௌகர்யமாயிருக்குமோ அந்த க்ராமங்களில் பஞ்சாயத்துஸ்தாபிக்க வேண்டுமென்றும், க்ராமங்களில் கக்ஷி ப்ரதிக்கக்ஷிகள் இருந்தால், இருகக்ஷியாருக்கும் மனஸ்தாபம் ஏற்படுமாகையாலும், ஒருக் கக்ஷியாருக்கு முக்யமாய் பஞ்சாயத்துக் கோர்ட்டுகளில அதிகாரம் கிடைத்தபோது அந்தக் கக்ஷியார் மற்றக் கக்ஷியாரைக் கஷ்டப்படுத்துவார்களாகையாலும், அவ்வித கெடுதல்களை நீக்கும் பொருட்டு ஐந்தாறு க்ராமங்களை ஒன்றாய்ச் சேர்த்து அவைகளுக்குப் பொதுவாய், ஒரு பஞ்சாயத்து ஸ்தாபிக்கவேண்டுமென்றும், சிறு ஸிவில் க்ரிமினல் கேஸுகளை பஞ்சாயத்துகள் விசாரிக்கும்படி விடவேண்டுமென்றும், ஆனால் எந்த ஜில்லாக்களில் க்ராமமுன்ஸிப் கோர்ட்டுகள் திருப்திகரமாக நடந்து வருகின்றனவோ அவைகளில், க்ராமமுன்ஸிப் கோர்ட்டுகளைத் தள்ளிவிட்டு பஞ்சாயத்துக் கோர்ட்டுகள் ஏற்படுத்துவதில ரொம்ப ஜாக்கிரதையாயிருக்க வேண்டுமென்றும் தெரிவித்தார்கள். மேலும் கமிஷனுடைய மற்ற ப்ரேரணைகளை அவர்கள் ஆதரிப்பதாயும், ஆனால் ஏற்கனவே ஸ்தாபிக்கப்பட்டு நடந்து வரும் லோகல்பண்ட்யூனியன் பஞ்சாயத்துகளை நிறுத்திவிடக்கூடாதென்றும், அந்தந்த ஊர்ச் செலவுகளுக்கு பஞ்சாயத்துகள் வரி போட்டுக் கொள்ள கொஞ்சம் அதிகாரம் கொடுக்கலாமென்றும் தெரிவித்தார்கள்.

மாகாண கவர்ன்மெண்டுகள் தங்களுடைய அபிப்ராயங்களை இந்தியா கவர்ன்மெண்டுக்கு அனுப்பின பிறகு, இந்தியா கவர்ன்மெண்டார் இந்த வர்ஷத்தில ஸ்தலஸ்வய ஆட்சியைப்பற்றிய தீர்மானத்தை வெளியிட்டார்கள். அதில் க்ராமப்பஞ்சாயத்தைப்பற்றி ப்ரஸ்தாபம் செய்தபோது, பஞ்சாயத்து என்பது இந்தியாவில் அநேக பாகங்களில் ஜனங்களுக்கு நன்றாய்த் தெரிந்ததென்றும், தாழ்ந்த ஜாதிகளுக்குள் ஜாதி விஷயங்களைப்பற்றித் தீர்மானிக்க பஞ்சாயத்துகள் இருந்து வருகின்றனவென்றும், இன்னும் அநேக இடங்களில் லோகல் பண்ட் யூனியன்கள், க்ராம ஸுகாதாரக் கமிட்டிகள், கல்விக்கமிட்டிகள், க்ராமப் பஞ்சாயத்துகள் முதலியவைகள் இருக்கின்றனவென்றும், ஆகையால் இவைகளை ஆதாரமாக வைத்துக்கொண்டு

பஞ்சாயத்துகள் ஸ்தாபிக்கலாமென்றும், எந்த இடங்களில் பஞ்சாயத்துகள் ஸ்தாபிக்கலாமென்று தோன்றுகிறதோ அங்கே, மாகாண கவர்ன்மெண்டுகள் ஒப்புக்கொள்ளும் முறைகளில் பரீக்ஷார்த்தமாக பஞ்சாயத்துகள் ஸ்தாபிக்க வேண்டுமென்றும் தெரிவித்தார்கள்.

**பஞ்சாயத்துகளைப்பற்றிய சில பொதுவான கோள்கைகள்.**—இந்தியா கவர்ன்மெண்டார் பஞ்சாயத்துகள் ஸ்தாபிக்கும் விஷயத்தைபற்றி மாகாண கவர்ன்மெண்டுகள் தங்கள் யுக்தம் போல் தீர்மானிக்கட்டுமென்று சொல்லிவிட்டு, சில பொதுக் கொள்கைகளைத் தெரிவித்திருக்கிறார்கள். அந்தக் கொள்கைகளாவன:—

1. பரீக்ஷார்த்தமாகப் பஞ்சாயத்துகள் ஸ்தாபிப்பதில் ஜனங்கள் ஸம்மதிக்கிற க்ராமங்களிலும், க்ராமங்களை விடப்பெரியதான ப்ரதேசங்களிலும் சிலவற்றைத் தெரிந்தெடுத்து அவைகளில் பஞ்சாயத்துகளை ஸ்தாபிக்கவேண்டும்.

2. பஞ்சாயத்துகள் ஸம்பந்தமாகச் சட்டஞ் செய்யவேண்டியிருந்தால், அந்தச் சட்டத்தின் நிபந்தனைகளை பஞ்சாயத்துகள் இஷ்டப்பட்டால் அனுஷ்டானத்துக்குக் கொண்டுவரலாமென்றிருக்கவேண்டும். பஞ்சாயத்தின் அதிகாரங்களும் கடமைகளும் ஒவ்வொரு க்ராமத்திலும் ஒரே மாதிரியாய் இருக்க வேண்டியதில்லை. அப்படி இருப்பதும் கூடாது.

3. எந்த ப்ரதேசத்திலாவது நீதி செலுத்தும் அதிகாரங்களும் நிர்வாக அதிகாரங்களும் கொடுக்க வேண்டுமானால், அவைகளை ஒரே பஞ்சாயத்து ஸபைக்குக் கொடுக்கவேண்டும்.

4. ஏற்கனவே ஸ்தாபிக்கப் பட்டுள்ள க்ராம ஸுகாதார கமிட்டிகளையும், கல்விக் கமிட்டிகளையும் பஞ்சாயத்துகளோடு சேர்த்துவிடவேண்டும்.

5. நீதி வயவஹாரங்களில் பஞ்சாயத்துகளுக்கு இன்ன அதிகாரங்கள் உண்டென்பதை ஏற்படுத்தும்போது, அந்த அதிகாரங்களை பஞ்சாயத்துகள் இஷ்டப்பட்டால் மட்டும வகிக்கும் படி சட்டம் அமைக்கவேண்டும். கக்ஷிக்காரர்கள் தங்கள் வழக்குகளை பஞ்சாயத்தாரிடம் விசாரிக்கக் கொண்டுவருவதற்காக அவர்களுக்கு ஸ்வல்பமான கோர்ட் 'பீஸ்', சீக்ரமாக வழக்குகளை முடிவு செய்தல் முதலிய ஸாதகங்கள் செய்து கொடுக்கவேண்டும்.

6. பஞ்சாயத்துகள், வேண்டுமானால் மாகாண கவர்ன்மெண்டின மேற்பார்வைக்கு உள்பட்டு, வரிகள் போட சட்டம் ஏற்படவேண்டும்.

7. பஞ்சாயத்துகளுக்கும் மற்ற நிர்வாக ஸ்தாபனங்களுக்கும் உள்ள ஸம்பந்தம் இன்னதென்பதை வ்யக்தமாக தீர்மானிக்கவேண்டும். ஜில்லா போர்டுகளும் தாலுக்கா போர்டுகளும் பஞ்சாயத்துகளுக்குப் பண உதவி செய்தால் அந்த போர்டுகள் பஞ்சாயத்துகளின் நிர்வாக நடவடிக்கைகளை மேற்பார்வை செய்யலாம்.

**சென்னை கவர்ன்மேண்டின அபிப்ராயம்**—சென்னை கவர்ன்மெண்டார் அதிகாரப் பிரிவினைக் கமிஷனுடைய ப்ரேரணைகளையும், இந்தியா கவர்ன்மெண்டாருடைய ப்ரேரணைகளையும் கவனித்துப்பினவருமாறு அபிப்பிராயப் பட்டிருக்கிறார்கள். சென்னைராஜதானியில் யூனியன் பஞ்சாயத்துகள் என்று சொல்லப்படும் க்ராமப் பஞ்சாயத்துகள் ஸ்தாபிப்பதற்கு மதராஸ் லோகல் போர்ட்ஸ் ஆக்ட், 5-வது அத்யாயம் இடங்கொடுக்கிறது. அவைகளுக்கு சில அதிகாரங்களையும் கடமைகளையும் கொடுப்பதற்கும் இடங்கொடுக்கிறது. பஞ்சாயத்துகளுக்கு இன்ன வேலைகளும் கடமைகளும் கொடுக்கலாமென்பது ஷை ஆக்ட் 141-வது ஸெக்ஷனில் சொல்லப்பட்டிருக்கிறது. அவையாவன. (1) பொதுரஸ்தாக்களுக்கு விளக்குப்போடுவது; (2) பொதுரஸ்தாக்கள், சாக்கடைகள், குளங்கள், கிணறுகள், ஆகிய இவைகளையும் மற்ற பொதுஸ்தலங்களையும் சுத்தப் படுத்துதல்; (3) ஆஸ்பத்திரிகள், மருந்துச்சாலைகள், பள்ளிக்கூடங்கள் ஆகிய இவைகளை ஸ்தாபித்து நடத்துதல்; (4) ரஸ்தாக்கள் போடுகல்,

சாக்கடைகள் கட்டுதல், இவைகளை நிர்வகித்தல் ; (5) கிணறுகள், குளங்கள் வெட்டுதல் ; அவைகளைப் பழுதுபார்த்தல் ; ஜலாதார ஸம்பந்தமான மற்ற வேலைகளைச் செய்தல் ; (6) பொது ஜனங்களின் ஸுகாதார ஸம்பந்தமான மற்ற வேலைகளைச்செய்தல. சென்னை கவர்ன்மெண்டார் மேற்சொன்ன ஸெக்ஷனில் குறிப்பிட்ட வேலைகளுள் பஞ்சாயத்துகள் செய்யக்கூடிய, க்ராம ஸௌக்யததுக்கேற்ற பலவேலைகள் அடங்கியிருக்கின்றனவென்றும், அதிகாரப் பிரிவினைக் கமிஷன் சொல்லுகிறபடி இநதப் பஞ்சாயத்துகளை நிறுத்திவிட இஷ்டப்படவில்லை யென்றும், தற்போது கிட்டத்தட்ட 400-பஞ்சாயத்துகள் வரையில் இருக்கின்றனவென்றும், அப்படித் தள்ளிவிடுவதானது சென்ற முப்பது வர்ஷங்களாகச் செய்துவந்த வேலையைத்தள்ளி விடுவதாகுமென்றும், ஆனால் இபபோதுள்ள பஞ்சாயத்து ஏற்பாட்டை ரொம்பவும் சீர் திருத்தக்கூடுமென்றும், சொல்லுகிறார்கள்.

யூனியன்களிலுள்ள குறைகளும், அவைகளை நிவர்த்திக்கும் வழிகளும் :—(1) யூனியன்களின் அமைப்பு.—லோகல் போர்ட்ஸ் ஆக்டின்படி ஸ்தாபிக்கப்பட்ட பஞ்சாயத்துகள் இதுவரையில் முற்றிலும் த்ருப்திகரமாக நடந்து வாரததற்கு சில காரணஙகள் இருக்கின்றன. அவைகளை இனிமேல் நீக்கிவிடக்கூடும்.

யூனியன் பஞ்சாயத்துகளுக்கு போதுமான வரும்படி கிடைக்கும்படி செய்வதற்காக இரண்டு அல்லது அதற்கதிகமான க்ராமங்களை ஒன்றாய்ச் சேர்ப்பது வழக்கமாயிருந்து வருகிறது. ஒன்றுக்கொன்று ஸம்பந்தமில்லாமல் தனித்தனியாயும தூரமாயும் உள்ள க்ராமங்களை ஒன்றாய்ச் சேர்தது யூனியனாக ஸ்தாபித்தால், சிலவிடங்களில் பஞ்சாயத்தார்கள் ரொம்ப முக்யமான க்ராமத்தின் ஸௌகர்யத்தைப்பற்றி அதிகமாகக் கவனிக்க ஹேதுவாகிறது. மற்ற க்ராமங்களைப்பற்றி பஞ்சாயத்துகள் அதிகமாக கவனிப்பதில்லை. இதனால் இந்த மற்ற க்ராமங்கள் தாங்கள் கொடுக்கும் வரிகளுக்கேற்ப ஸௌகர்யங்களை அடைவதில்லை. ஆகையால் இவைகளிலுள்ள ஜனங்கள் அத்ருப்தியடைகிறார்கள். ப்ரத்யேகமாயுள்ள இரண்டு அல்லது அதறகதிகமான க்ராமங்களைச் சேர்ப்பது இயற்கையானதல்ல ; ஏனென்றால் ஒரே க்ராமத்திலுள்ள ஜனங்களிடம் எப்படி ஒற்றுமையுணர்ச்சி இருக்குமோ, அப்படிப்பட்ட உணர்ச்சி பல தனி க்ராமங்கள் சேர்ந்த பஞ்சாயத்தினிடம் இராது. ஆகையால் இனிமேல் ஒவ்வொரு ப்ரத்யேகமான ரெவின்யூ க்ராமத்துக்கும், அதைச் சேர்ந்த உள் க்ராமங்களை அதோடு சேர்த்துக்கொண்டு, ப்ரத்யேகமாப் யூனியன் பஞ்சாயத்து ஸ்தாபிக்கவேண்டு மென்றும் அப்படி ஒரு தனி க்ராமத்துக்கு பஞ்சாயதது ஸ்தாபிப்பதுகூடாதென்பதற்குத் தகுந்த காரணங்களிருந்தால் மட்டும் இரண்டு மூன்று க்ராமங்களை ஒன்று சேர்க்கலாமென்றும் சென்னை கவர்ன்மெண்டார் தெரிவித்திருக்கிறார்கள்.

(2) ஆபீஸ் கட்டிடமும், ஸிப்பந்திச் செலவும்:—அநேக இடங்களில் யூனியன்களுக்குக் கிடைக்கும வரும்படியில் பெரும்பாகம் யூனியன்களுக்கு ஆபீஸ் கட்டுவதற்கும், ஆபீஸ் ஸிப்பந்திச் செலவுக்கும் போய்விடுகிறது. சென்னை கவர்ன்மெண்டார், ஆபீஸ் நடத்துவதற்கு கட்டிடங்கள் கட்டவேண்டு மென்றாவது, அல்லது கட்டிடங்களை வாடகைக்கு எடுத்துக்கொள்ள வேண்டு மென்றாவது பஞ்சாயத்துகளைக் கட்டாயப்படுத்தக் கூடாதென்றும், க்ராம பஞ்சாயத்தார் தங்களுடைய மீட்டிங்குகளை க்ராமப் பள்ளிக்கூடத்தி லாவது, சாவடியிலாவது, க்ராம முன்ஸிபினுடைய வீட்டிலாவது, அல்லது ஸௌகர்யமான வேறு எந்தக் கட்டிடத்திலாவது நடத்திக்கொள்ளலா மென்றும், பஞ்சாயத்துக்காகத் தனியாக குமாஸ்தக்கள் நியமிக்க வேண்டியதிலலை யென்றும், 'க்ராம

உபாத்யாயர், கர்ணன், போஸ்ட்மாஸ்டர் முதலியவர்களை மீட்டிங்குகளினுடைய நடவடிக்கைகளை எழுதவும் மற்ற எழுத்துவேலைகளை செய்யவும் வைத்துக்கொள்ளலாமென்றும் சொல்லுகிறார்கள்.

வரிகளை வஸூல் செய்வதற்கு, பஞ்சாயத்தார் வேண்டிய சிப்பந்திகளை, தங்களுக்கு ஸௌகர்யமான சம்பளத்தில் நியமித்துக்கொள்ளலாம். வரி வஸூலுக்கு க்ராம உத்யோகஸ்தர்களையும் வைத்துக்கொள்ளலாம். வஸூலான தொகையில் நூற்றுக்கு இவ்வளவு என்று ஒரு விகிதம் ஏற்படுத்தி அந்த விகிதப்படி க்ராம உத்யோகஸ்தர்களுக்கு ப்ரதி ப்ரயோஜனம் கொடுக்கலாம். ஆனால் இப்படிச் செய்வதற்கு, க்ராம உத்யோகஸ்தர்களும், டிவிஷனல் ஆபிஸரும் ஸம்மதிக்கவேண்டும்.

3. வரிபோடுவதிலும், செலவு செய்வதிலும் நிர்ப்பந்தங்கள் இருப்பது.-சிலயூனியன்கள் ஜனங்களுக்குப் பிடிக்காமல்போவதற்கு ஒரு காரணம் வரிபோடும் விஷயத்திலும், பணத்தை செலவு செய்யும் விஷயத்திலும் அவைகளுக்கு ரொம்ப நிர்ப்பந்தங்களிருப்பதேயென்று சொல்லலாம். இதுவிஷயத்தில் கவர்ன்மெண்டார் சில ஸௌகர்யங்கள் செய்யத் தயாராயிருப்பதாகச் சொல்லுகிறார்கள். லோகல் போர்ட்ஸ் ஆக்டில் சொல்லியிருக்கும் வரையறைக்கு மேற்படாமல், வேண்டிய பணத்துக்குத் தகுந்தபடி பஞ்சாயத்துகள் தங்களுடைய யுக்தம்போல் வரி விதிக்கலாம். ஷை ஆக்ட் 141-வது ஸெக்ஷனில் சொல்லியிருக்கிற பாபத்துகளில் எந்தச் செலவுக்கு எவ்வளவு பணம் எவ்விதமாக செலவழிக்க வேண்டுமென்று பஞ்சாயத்தார் அபிப்ராயப்படுகிறார்களோ, அவ்விதமாகச் செலவுசெய்யலாம். சில க்ராமங்களில் க்ராம ரஸ்தாக்கள்போடுவது அவச்யமாயாவது, ஜனஸம்மதமாயாவது இருக்கும். அப்படிப்பட்ட ஸந்தர்ப்பங்களில் தாலூக்கா போர்டார் ஆக்ஷேபணை செய்யவேண்டியதில்லை. ஸாதாரணமாய் க்ராமங்களில் ஸுகாதாரவேலைகளைத்தான் மற்றவேலைகளைவிட அதிகமாகக் கவனிக்கவேண்டியிருக்கும். எந்த யூனியனாவது ஒரு க்ராமவேலைக்கு அதிகபணம் செலவழித்து அதனால் மற்ற வேலைகளுக்கு பணத்தட்டு ஏற்பட்டால், தாலுகா போர்டார் செலவுக்குக் குறையும்பணத்தைக் கொடுத்து உதவ முடியாது. உதாரணமாக ஒரு யூனியன் விளக்குப்போடுவதற்காகப் பணத்தைச் செலவுசெய்துவிட்டு, தெருக்களை சுத்தம்செய்யவும், சாக்கடை கட்டவும் பணம் கொடுத்து உதவும்படி தாலுக்கா போர்டைக் கேட்கக்கூடாது.

யூனியன்கள் தங்கள் வேலைகளை சரியாய் நிர்வகிக்காமல்போய், தொத்து வ்யாதிகள் உண்டாவதுபோன்ற ரொம்ப பெரிய கெடுதிகள் நேரிட்டால், அப்போது மாத்ரம் தாலுகா போர்டுகள் யூனியன்களுடைய நிர்வாகத்தில் தலையிட வேண்டிவரும்.

4. பஞ்சாயத்தைத் தெரிந்தெடுப்பது —பஞ்சாயத்துகள் இன்னும் அதிக ஜனஸம்மதாயிருப்பதற்கு மெம்பர்கள் தெரிந்தெடுக்கும் முறையில் ஒரு சீர்திருத்தம் செய்யப்போகிறார்கள். அதாவது இப்போது செய்வதுபோல பஞ்சாயத்து மெம்பர்களை ரூல்படி தெரிந்தெடுக்காமல் வேறு விதமாய்த் தெரிந்தெடுப்பதே. யூனியன்களின் விஸ்தீரணத்துக்கும் ஜனத்தொகைக்கும் தகுந்தபடி அவைகளில் ஒவ்வொன்றிலும் 5-முதல் 16-மெம்பர்கள்வரை இருக்கலாம். க்ராம முன்ஸிப் அதில் ஒரு மெம்பராயிருப்பார். மற்ற மெம்பர்களை ரயத்துகளும் வரி செலுத்தும் மற்றவர்களும் தெரிந்தெடுக்க வேண்டும். இவர்களைத் தெரிந்தெடுப்பதற்கு, தெரிந்தெடுப்பவர்களின் ஜாப்தா, தெரிந்தெடுபவர்கள் மற்ற எலெக்ஷன்களில் தெரிந்தெடுப்பதுபோல் தெரிந்தெடுத்தல், எலெக்ஷன்களைப் பற்றி பெடிஷன்களும் அப்பீல்களும், போடுவதற்கும் அவைகளை விசாரிப்பதற்கும் சட்ட

மேற்படுத்துதல் முதலிய எலெக்ஷன் நிபந்தனைகளை ஏற்படுத்துவது இப்போது அவச்யமானதல்ல. பஞ்சாயத்தார்களைத் தெரிந்தெடுப்பதற்கு செய்ய வேண்டியதெல்லாம் என்னவென்றால், தாலுகா போர்ட் ப்ரெஸிடெண்ட், எந்த க்ராமத்தில் பஞ்சாயத்து நியமிக்க உத்தேசித்திருக்கிறதோ, அந்த ஊரில் பஞ்சாயத்து மெம்பர்களைத் தெரிந்தெடுக்க இன்னதேதியில் மீட்டிங் கூடுமென்று முன்னாடியே அறிவித்து, அந்தத் தேதியில் க்ராமத்துக்குப் போய் வரி செலுத்துவோரின் மீட்டிங் ஒன்று கூட்டி, தமக்கு எது ரொம்ப யுக்தமானதென்று தோன்றுகிறதோ அந்த வழியில் பஞ்சாயத்துக்கு இன்னின்னாரை க்ராமத்தார் தெரிந்தெடுக்க விரும்புகிறார்களென்று தெரிந்து நிச்சயிக்கவேண்டும். இதே மாதிரிதான் பஞ்சாயத்தின் சேர்மனையும் தெரிந்தெடுக்கவேண்டும். தாலுகா போர்டு ப்ரெஸிடெண்டுகள் தங்களுடைய அபிப்ராயப்படி க்ராமவாஸிகள் நடக்கவேண்டுமென்று வற்புறுத்தக்கூடாது. அவர் செய்யவேண்டியதெல்லாம் என்னவென்றால் ரொம்பஸுலபமானமுறையில் க்ராமத்தாருடைய அபிப்ராயங்களின்னவென்பதை யறிந்து, அவைகளை அப்படியே தாக்கல் செய்துகொள்ள வேண்டியது. ஏதாவது சில ஸந்தர்ப்பங்களில்ப்ரெஸிடெண்டானவர் க்ராமத்தார் தெரிந்தெடுத்த பஞ்சாயத்தாரை விட்டு வேறொருவரை பஞ்சாயத்தாராக நியமிக்கலாம்; அல்லது மறுபடியும் வேறொரு மெம்பரைத் தெரிந்தெடுக்கும்படி க்ராமத்தாருக்குச் சொல்லலாம். ஆனால் அப்படிப்பட்ட ஸமயங்களில் அவர் தாமப்படிச் செய்ததற்குக் காரணமின்னதென்பதை எழுதிவைக்கவேண்டும். அவர் அப்படிச் செய்தது ச்ரியா என்பதை ஜில்லாபோர்ட் ப்ரெஸிடெண்ட் தீர்மானிப்பார். ஜில்லா போர்டு ப்ரெஸிடெண்டினுடைய தீர்மானமே முடிவானது.

யூனியன்களுக்குப பண உதவி.—சிறிய யூனியன்களுக்கு தாலுக்கா போர்டார் பணங் கொடுத்து உதவுவது உசிதமாயிருக்கும். யூனியன்களுக்கு வீட்டுவரியிலிருந்து கிடைக்கும் தொகையில் நாலில் ஒரு பாகத்துக்கு மேற்படாமல் தாலுக்கா போர்டுகள் பணஉதவிசெய்யலாம். ஆனால் உதவியாகக் கொடுக்கும் பணத்தை யூனியன்கள் இன்னவேலைக்குத்தான் உபயோகிக்க வேண்டுமென்று தாலுக்கா போர்டுகள் நிபந்தனை ஏற்படுத்தக்கூடாது. ஏற்கனவேயுள்ள யூனியன்களில் முன் சொன்னபடி சிறியனவாயிருப்பவைகளுக்கும் பண உதவி செய்வது நல்லது. ஆனால் ஸாதாரணமாய் 8000 அல்லது அதற்கு மேற்பட்ட ஜனத்தொகையுள்ள க்ராமங்களுக்கு பண உதவி செய்வதுகூடாது. இந்த க்ராமங்கள் பட்டணங்களின் லக்ஷண முள்ளவைகளென்று சொல்லலாம். இவைகள் தங்களுடைய ஊரில் வரிமுதலியவைகள் போடுவதாலேயே போதுமான பணம் சேகரம் செய்யவேண்டும். எந்த ஜில்லாவிலாவது சிறு யூனியன்களுக்குப் பண உதவிசெய்வதால் அந்த ஜில்லா போர்டுக்கு அதன் வரும்படியைவிட அதிக செலவு ஏற்பட்டால், அந்த ஜில்லா போர்டுக்கு மாகாண கவர்ன்மெண்டார் பணஉதவி செய்வதைப்பற்றி ஆலோசனை செய்வார்கள்.

லோகல் போர்டு ஆக்டின்படி ஸ்தாபிக்கப்பட்டிருக்கும் பஞ்சாயத்துகளின் ஏற்பாட்டில் உள்ள, மேற்சொன்ன குறைகளை நீக்கிவிட்டால், அவைகள் ஜனங்களுக்கு ரொம்ப பிடிக்குமென்பதற்கு ஆக்ஷேபணையில்லை. வரிப்பணத்தை ஜனங்கள் எந்த விதத்தில் செலவழிக்க இஷ்டப்படுகிறார்களோ அந்த விததில் செலவழிக்கவிட்டால், பஞ்சாயத்துகளை அதிகப்படுத்துவதற்கு ஜனங்கள் ஸம்மதிப்பார்களென்று நம்பலாம். 3000-அல்லது அதற்கு மேற்பட்ட ஜனத்தொகையுள்ளவும், கூடியமட்டும் அதிக பரவலாயில்லாமல்நெருக்கமாயுள்ளவுமான எல்லாரெவின்யூக்ராமங்களின நிலைமையையும் கலெக்டர்கள் ஆராய்ச்சி செய்து, அவ்வூர்களில் லோகல் போர்டு ஆக்

டின்படி பஞ்சாயத்துகள் ஸ்தாபிப்பதற்கு ஏதாவது ஆக்ஷேபனைகள் இருக்கின்றனவா என்பதை கவர்ன்மெண்டுக்குத் தெரிவிக்கவேண்டும். கலெக்டர்கள் கவர்ன்மெண்டுக்கு பதில் அனுப்பும்போது அப்படிப்பட்ட க்ராமங்களின் பூர்த்தியான ஜாப்தா ஒன்றையும் சேர்த்தனுப்பவேண்டும். தாலுகாபோர்டு ப்ரஸிடெண்டுகள் தங்கள் அதிகாரத்துக்குள்பட்ட க்ராமங்களுக்கு நேரில் போய், அங்குள்ள முக்ய க்ராமவாஸிகளை ஒன்று கூட்டி, அந்த க்ராமங்களில் பஞ்சாயத்துகள் ஸ்தாபிப்பதாக உத்தேசித்திருக்கிறதென்று அவர்களுக்குத் தெரிவித்து, க்ராமத்தார்களுடைய அபிப்ராயத்தை அறிந்து கலெக்டர்களுக்குத் தெரிவிக்கவேண்டும். கலெக்டர்கள் தாங்கள் அனுப்பும் பதில்களில், தெரிந்தெடுத்த க்ராமங்களின் ஜனங்கள் பஞ்சாயத்துஸ்தாபிப்பதற்கு இஷ்டப்படுகிறார்களா என்பதையும், அந்த க்ராமங்களில் பஞ்சாயத்துகளுக்கு என்ன வருமானம் கிடைக்கும் என்பதையும், தெரிவிப்பதோடு ஒவ்வொரு க்ராமத்திலும் பஞ்சாயத்து ஸ்தாபிக்கலாம், கூடாதென்பதைப் பற்றி தங்களுடைய (கலெக்டர்களுடைய) அபிபராயத்தையும் பரேரணைகளையும் தெரிவிக்கவேண்டும்.

சட்டப்படி யல்லாத பஞ்சாயத்துகள்.—பெரிய க்ராமங்களில் லோகல் போர்டு ஆக்டின்படி சீர்திருந்திய பஞ்சாயத்துகள் ஸ்தாபிப்பதோடு, சிறு க்ராமங்களில், சட்டத்தின் உதவியின்றி, ஸ்வதாவாக சட்டத்தின் கட்டுப்பாடுகளில்லாமல் பஞ்சாயத்துகள் ஸ்தாபிக்க கவர்ன்மெண்டார் முயற்சி செய்யத் தயாராயிருக்கிறார்கள். இந்தப் பஞ்சாயத்துகளுக்கு வரிபோடும் ஸ்வதந்தரம் இராது. இவைகள் காலக்ரமத்தில் பெரிய யூனியன் பஞ்சாயத்துகளாக வ்ருத்தியடைந்து வரிபோடும் ஸ்வதந்தரத்தை அடையலாம். இவை ஒரு ரெவின்யூ க்ராமத்துக்கு ஒரு பஞ்சாயத்து வீதம் ஸ்தாபிக்கப்படும். ஒவ்வொரு பஞ்சாயத்திலும் குறைந்தது 5-மெம்பர்கள் இருப்பார்கள். ஆனால் அந்தந்த ஊரின் நிலைமைக்குத் தக்கபடி அந்த ஸங்க்யையை உயர்த்தலாம். இந்தப் பஞ்சாயத்துக்கு க்ராம முன்ஸீப் சேர்மனாக இருப்பார். மற்றவர்களைத் தெரிந்தெடுக்க தாசில்தாரோ, டிவிஷனல் ஆபீஸரோ, க்ராமத்து ஜனங்களை ஒரு மீட்டிங்கில் கூட்டி, அந்த மீட்டிங்குக்குத் தாம் ப்ரெஸிடெண்டாக இருந்து, ஜனங்களைக் கொண்டு பஞ்சாயத்து மெம்பர்களைத் தெரிந்தெடுக்கச் செய்வார். பஞ்சாயத்து மெம்பர்கள் மூன்று வர்ஷகாலம் தங்கள் உத்யோகத்தை வகித்து வருவார்கள். எந்தப் பஞ்சாயத்து மெம்பராவது அக்ரமம் செய்பவராயோ, வேலைசெய்ய முடியாதவராயோ, அல்லது வேறெந்த விதத்திலாவது வேலைக்கு லாயக்கில்லாதவராயோ இருந்தால் அவரை டிவிஷனல் ஆபீஸர் வேலையிலிருந்து தள்ளிவிடலாம். பஞ்சாயத்துகளின் நிர்வாக அதிகாரங்கள் எல்லா க்ராமங்களிலும் ஒரே மாதிரியாயிருக்க வேண்டுமென்பதில்லை. அந்தந்த இடத்தின் நிலைமைகளுக்குத் தகுந்தபடி வித்யாஸப்படலாம். அவைகளின் முக்ய நோக்கம் ஒப்புக்கொள்ளப்பட்ட பொதுக் கார்யங்களை பொது முயற்சியில் நடத்துவதாக இருக்க வேண்டும். உதாரணமாக,

1. க்ராம ஸுகாதார நிர்வாகம்.

2. அம்மை குத்துவதைக் கட்டாயப்படுத்துவது.

3. ரொம்ப முக்யமில்லாத அந்தந்த ஊர் வேலைகளைச் செய்து முடித்தல்.

4 மாட்டுப்பட்டி, கடைகள், சந்தைகள் ஆகிய இவைகளை நிர்வகிப்பது.

5. க்ராமப் பள்ளிக் கூடக்கட்டிடங்களைக் கட்டி நிர்வகிப்பது.

6. குளம், மீன்பிடிக்கும் துறைகள், மாடு நிற்கும் இடங்கள், போரடிக்களங்கள், ஆகிய இவைகளையும் இன்னும் க்ராமத்துக்குப் பொதுவான மற்ற இடங்களையும் சொத்துக்களையும் பராமரிப்பது.

7. நீர்ப்பாய்ச்சல் முறையை நிர்வகிப்பது.

8. அந்தந்த ஊர் வேலையாட்களைக்கொண்டு ஜலாதாரங்களை பழுது பார்த்து நிர்வகித்தல்.

9. மேய்ச்சல் காடுகளையும், விறகு வெட்ட விடப்பட்டிருக்கும் காடுகளையும் க்ராமப் படுகைகள், காடுகள் ஆகிய இவைகளையும் நிர்வகிப்பது.

இந்தப்பஞ்சாயத்துகள் ரெவின்யூ டிவிஷனல் ஆபிஸர், கலெக்டர் ஆகிய இவர்களுடைய மேற்பார்வையில் இருக்கும். கலெக்டருக்கு அவச்யமென்றுதோன்றினால் அவர் எந்தப்பஞ்சாயத்தை வேண்டுமானாலும் ஸஸ்பெண்ட் செய்துவைக்கலாம். எல்லா ஜில்லாக்களிலும் கலெக்டர்கள் சட்ட முறைப்படியல்லாத பஞ்சாயத்துகளைப் பரீக்ஷார்த்தமாய் ஸ்தாபிக்க முயற்சி எடுத்துக்கொள்ளவேண்டும். முதலில் பரீக்ஷார்த்தமாக ஸ்தாபிப்பதற்கு, எந்த க்ராமம் கக்ஷி ப்ரதி கக்ஷிகள் இல்லாமலிருந்து அதன் ஜனங்கள் புத்திசாலிகளாயிருக்கிறார்களோ, எந்த க்ராமத்தில் ஸ்தாபித்தால் பஞ்சாயத்து நன்றாய் நடைபெறுமோ, அதோடு எந்த க்ராமத்தில் பல விஷயங்களிலும் ஒற்றுமையுண்டோ அந்த க்ராமத்தையே தெரிந்தெடுக்க வேண்டும்.

நீதி அதிகாரங்கள்.—முறைப்படி ஸ்தாபிக்கப்படாத பஞ்சாயத்துகளுக்கு நீதியிலாகா அதிகாரங்களும் வேலைகளும் கொடுக்கமாட்டார்கள். சிறு க்ரிமினல், ஸிவில் கேஸுகளை ஸாதாரண கோர்ட்டுகளுக்குப் போகவிடுவதால் ஏற்படும் நஷ்டத்தைக் குறைக்கவேண்டியது அவச்யமென்பதை சென்னை கவர்ன்மெண்டார் ஒப்புக்கொள்ளுகிறார்கள். சிறு கேஸ்களை க்ராமங்களிலேயே விசாரித்து முடிவுசெய்ய ஏற்கனவே முயற்சிகள் செய்யப்பட்டு வந்திருக்கின்றன. இது ஸம்பந்தமான கணக்குகளைப் பார்த்தால், மற்ற மாகாணங்களைவிட சென்னை ராஜதானியானது இதுவிஷயத்தில் ரொம்ப அபிவ்ருத்தி யடைந்திருக்கிறதென்று தெரியவரும். இருந்தாலும் க்ராமக்கோர்ட்டுகளின் அதிகார ப்ரதேசத்தை அதிகப் படுத்துவதற் கிடமிருக்கிறதென்று சென்னை கவர்ன்மெண்டார் அபிப்ராயப்படுகிறார்கள். எந்தவிதத்தில் க்ராமக் கோர்ட்டுகளை அபிவ்ருத்தி செய்ய வேண்டுமென்பதைப்பற்றி சென்னை கவர்ன்மெண்டார் ப்ரத்யேகமாய் ஆலோசனை செய்து வருகிறார்கள். தற்போது, ஸிவில் வ்யாஜ்யங்களில் உபய கக்ஷிகளும் மனுசெய்துகொண்டால் க்ராமப் பஞ்சாயத்துகள் ஏற்படுத்துவதற்கும், க்ராம பெஞ்ச் கோர்ட்டுகள் ஸ்தாபிப்பதற்கும், 1816 ம் வர்ஷத்து சென்னை க்ராமப்பஞ்சாயத்து ரெகுலேஷனும், 1886-ம் வர்ஷத்து மதராஸ் க்ராமக்கோர்ட்டுஆக்டும் இடங்தருகின்றன வென்பதை கவர்ன்மெண்டார் பொது ஜனங்களுக்கும் ஜில்லா கலெக்டர்களுக்கும் எடுத்துக்காட்டியிருக்கிறார்கள். ஜில்லா அதிகாரிகள் கூடுமான இடங்களில் மேற்குறித்த இரண்டு சட்டங்களின் உபயோகத்தை அபிவ்ருத்தி செய்ய முயலவேண்டும்.

க்ராம முன்ஸிப்.—க்ராமப் பஞ்சாயத்துகளின் அபிவ்ருத்திக்கு ரொம்ப முக்யமானதாய் இன்னொரு விஷயமும் இருக்கிறது. அதாவது க்ராமமுன்ஸிப் உத்யோகத்துக்கு தக்க மனிதர்களை நியமிக்கவேண்டு மென்பதே. அதிகாரப் பிரிவினைக் கமிட்டியார், க்ராம உத்யோகஸ்தர்கள் நீதிதவறி நடக்கிறார்களென்பதையும் அவர்களுக்கு சரியான சம்பளம் கொடுக்கப்படுவதில்லையென்று அநேகர் சொல்வதையும், மாகாண கவர்ன்மெண்டுகள் கவனிக்கவேண்டுமென்று தெரிவித்தார்கள். க்ராமப்பஞ்சாயத்துகள் கடைத்தேறுவதென்பது க்ராமமுன்ஸிபினுடைய யோக்யதையைப் பொறுத்திருக்கிறது. கமிட்டியார் சொன்ன விஷயங்களைப்பற்றி ஆராய்ச்சி செய்ததில் க்ராமவாஸிகள் க்ராமமுன்ஸிபினிடம் நம்பிக்கைவைப்பதில்லையென்றுதெரியவருகிறது. ஜனங்கள் க்ராமக் கோர்ட்டுகளை நாடாமலிருப்பதற்குக் காரணம், இப்போதுள்ள முறைப்படி

க்ராமமுன்ஸிபுகளைத் தெரிந்தெடுப்பதில, வேலைக்கு லாயக்குள்ளவர்கள் அவ்வேலைக்கு வருவதற்கில்லையெனபதேயென்று பலர்சொல்லுகிறார்கள். அநேக ஜில்லாக்களில் க்ராமமுன்ஸிப் உத்யோகத்துக்கு, முன்பு க்ராம முன்ஸிபாயிருந்தவர்களின் ஜேஷ்ட புத்ரர்களையே நியமிக்க வேண்டுமென்று கண்டிப்பான விதியிருப்பதால், டிவிஷனல் ஆபிஸர்கள் தக்க க்ராமவாஸிகளை க்ராம முன்ஸிபாக நியமிக்க முடிவதில்லை யென்று கவர்ன்மெண்டார் நினைக்கிறார்கள். க்ராம முன்ஸிப் நியமனத்தைப்பற்றிய சட்டத்தைத் திருத்துவதைப்பற்றி கவர்ன்மெண்டார் தனியாக ஆலோசித்து வருகிறார்கள் சிலர், தன மதிப்புள்ள ஜனங்கள் அவ்வேலைக்குப் போவதில்லையென்றும், ஏனென்றால், க்ராமமுன்ஸிப் பல யஜமானர்களுக்கு ஸேவகம் செய்யவேண்டியிருக்கிறதென்றும், தாழ்ந்த ஸர்க்கார் உத்யோகஸ்தர்கள் அவர்களை ரொம்ப தாழ்மையாக நடத்துகிறார்களென்றும், க்ராமமுன்ஸிப் என்ற பதவிக்கும், க்ராமப் பஞ்சாயதின் சேர்மன் என்ற பதவிக்கும் ஒத்ததாயிராத அநேக ஸாமான்ய வேலைகளையும் அவர் செய்யவேண்டியிருக்கிறதென்றும், சொல்லுகிறார்கள். கவர்ன்மெண்டின் ப்ரதிநிதி யென்ற முறையிலும், வரி வஸூல் செய்பவர் என்ற முறையிலும் க்ராம முன்ஸிப செய்யும் வேலைகளில் எதுவும் அவருடைய கௌரவத்தைக் குறைக்கக்கூடியதல்ல வென்றும், ஆனால் கீழ்த்தர ஸர்க்கார் உத்யோகஸ்தர்கள் க்ராம முன்ஸிபை சில ஸமயங்களில சரியாய் நடத்துவதில்லையென்பதும், அவர்கள் அவரை அனாவசியமாக பற்பல வேலைகளைச் செய்யும்படி சொல்லுகிறார்களென்பதும் சற்று வாஸ்தவமாயிருக்கலாமென்றும் கவர்ன்மெண்டார் எண்ணுகிறார்கள். ஆகையால் அவர்கள் (கவர்ன்மெண்டார்) எல்லா ஜில்லா உத்யோகஸ்தர்களும் க்ராம முன்ஸிப் ஸம்பந்தப்பட்ட நடவடிக்கைகளில் அவருடைய கௌரவத்தைக் குறைக்காதபடி பார்த்துக்கொள்ள வேண்டுமென்றும், அவருடைய அந்தஸ்துக்கும் மதிப்புக்கும் குறைவுவரக் கூடியதாக எந்த வகையிலும் நடக்கக்கூடாதென்றும் வற்புறுத்துகிறார்கள்.

பஞ்சாயத்தைப்பற்றி மிஸ்டர் எஸ். ஸ்ரீநிவாஸய்யங்காரின் அபிப்ராயம் — ஸமீபத்தில் வேலூரில் நடந்த வடஆற்காடு ஜில்லா கான்பரென்ஸில் சென்னை ஹைகோர்ட்டு வக்கீலாகிய மிஸ்டர் எஸ். ஸ்ரீநிவாஸய்யங்கார் ப்ரெஸிடெண்டாக இருந்து ப்ரஸங்கம் செய்தபோது மேலே விவரித்த பஞ்சாயத்துத் தீர்மானத்தைப் பற்றிப் பின் வருமாறு பேசினார்.

சென்னை கவர்ன்மெண்டார் ஸமீபத்தில் ப்ரசுரம்செய்த க்ராமப பஞ்சாயத்துத் தீர்மானம சில விஷயங்களில் த்ருப்திகரமாயில்லை. "(1) எலெக்ஷன்களை முறைப்படி நடக்கவிடாமல், முறையின்றி நடத்துவது சரியல்ல. தாலூகா போர்ட்டு ப்ரெஸிடெண்டானவர் ஜனங்கள் யாரை பஞ்சாயத்து மெம்பர்களாக தெரிந்தெடுக்க விரும்புகிறார்களென்பதை, தமக்கு யுக்தமென்று தோன்றுகிற விதத்தில் தெரிந்துகொள்ளலாமென்று ஏற்படுததினால், க்ராமப் பஞ்சாயதது ஏற்படுத்துவதின் நோக்கமே கைகூடாமல்போகும். இதற்கு பதிலாக பஞ்சாயத்து மெம்பர்களைத் தெரிந்தெடுக்க ஒரு ஸுலபமான முறை ஏற்படுத்துவது நல்லது.

2. ரொம்ப அத்யாவச்யமான ஸந்தர்ப்பங்களில்தான் ஜில்லாபோர்டார் க்ராமப் பஞ்சாயத்துகளின் வேலைகளில் தலையிட்டுக்கொள்ளலாமென்றும், இன்ன ஸந்தர்ப்பங்களில், இன்ன விதங்களில் ஜில்லா போர்டுகள் தலையிட்டுக் கொள்ளலாமென்றும சட்டம் செய்யவேண்டும்.

3. யூனியன பஞ்சாயததுகளை 3000 ஜனமும அதற்குமேலும் உள்ள க்ராமங்களில் மாத்ரம் ஏற்படுத்த வேண்டுமென்று சொல்லியிருப்பது க்ராமாந்தரங்களிலுள்ள ஜனங்களுக்குள் பொது ஜன வேலைகளில் தகுந்தபடி ஊக்கம் ஏற்படுவ

தற்கு ஏற்றதாயில்லை. 1911-ம் வர்ஷத்து ஸென்ஸஸ் ரிபோர்ட்டால் சென்னை ராஜதானியில் பெரும்பாலார் க்ராமவாஸிகளென்று தெரிகிறது. கிழக்குக் கரை ஜில்லாக்களில் ஜனத்தொகையில் 1000 ல் 841-பேர்கள் க்ராமங்களில் வஸிக்கிறார்கள். இவர்களுள்ளும் பெரும்பான்மையோர் 500 முதல் 2000 வரையில் ஜனத்தொகையுள்ள க்ராமங்களில் வஸிக்கிறார்கள். கிழக்குக்கரை ப்ரதேசத்தின் மத்யபாகத்தில் பட்டணத்தில் வஸிப்பவர்களின் தொகை இன்னும் குறைவாயிருக்கிறது. க்ராமவாஸிகள் அநேகமாய் சிறுக்ராமங்களில்தான் வஸிக்க ப்ரியப்படுகிறார்கள். சென்னை ராஜதானியில் 2000 முதல் 5000 ஜனமவரையில் உள்ள க்ராமங்கள் 1911-ம் வர்ஷத்தில் 3718-இருந்தன. 1000 முதல் 2000 ஜனம் வரையிலுள்ள க்ராமங்கள் 7947 இருந்தன. 100 அல்லது 2000 ஜனங்களும் அதற்கு மேலும் உள்ள க்ராமங்களுக்கு பஞ்சாயத்து ஏற்படுத்த வேண்டுமென்று சொல்லாமல், 3000 ஜனங்களும் அதற்கு மேலும் உள்ள க்ராமங்களுக்கு யூனியன் பஞ்சாயத்துகள் ஏற்படுத்த வேண்டுமென்று சொன்னதால், அதிகமான க்ராமங்கள் பஞ்சாயத்தால் ஏற்படக்கூடிய நன்மைகளை அடைவதற்கில்லை.

முறைப்படியல்லாத பஞ்சாயத்துகள் வ்ருத்தியடையுமா வென்பது உத்யோகஸ்தர்கள் இடைவிடாது அவைகளை ஆதரித்து மேற்பார்வை செய்வதைப் பொறுத்திருக்கிறது. தக்க ஆதரிப்பு இருந்தால் அவைகள் வ்ருத்தியடையமாட்டா என்று சொல்லுவதற்கில்லை. இதில் ஒரு முக்ய ஆக்ஷேபனை யென்னவென்றால் ஜனங்கள் ஸ்வதாவாகச் சேர்ந்து ஸ்தாபிக்கும் பஞ்சாயத்துகளை டிவிஷனல ஆபீஸரின் மேற்பார்வையில் விட்டிருப்பதே. அப்படிச் செய்வதற்கு பதிலாக ஜில்லா போர்டுமெம்பர்களில் சிலரை ஒரு கமிட்டியாக ஏற்படுத்தி அதன் மேற்பார்வையில் இவைகளை விடவேண்டும்.

## CULTIVATION OF MARUKOLUNDU.

BY. P. D RATNAM PILLAI

## மருக்கொழுந்து சாகுபடி.

முன்னுரை.—"மருக்கொழுந்து" என்பது ஒரு வாஸனைப் புல். இது ஆதிகாலந்தொட்டு நமது நாட்டில் வழங்கிவரும் பயிர்களில் ஒன்று. இதை நமது நாட்டு ஜனங்கள் அதிகமாக விரும்பி புஷ்பத்தைப்போல் உபயோகித்து வருகிறார்கள். நமது நாட்டுப் பெண்மணிகள் தலையில் அணிந்துகொள்ளுகிறார்கள். கடவுள் பூஜைக்கும் மிக உரித்தானது. ஆகையால் இது நமது நாட்டில் அதிகம் செலவாகிறது. இதனாலேயே இதை நாம் ஒரு வ்யாபாரப் பயிராகச் சொல்லலாம். நமது நாட்டில் விசேஷ தினங்களிலும் உத்ஸவகாலங்களிலும் அதிகமாகச் செலவாகும் இயல்புள்ளது. இது தஞ்சைமாகரிலும், கொள்ளிடக்கரைப் படுகையிலும் காவேரிப்படுகையிலும் அபரிமிதமாகப் பயிராகிறது. இவ்விடங்களில் அநுஸரிக்கப்படும் முறையை இங்கு விவரிப்போம்.

மண்.—பெருமணலுடன் வண்டல் படிந்த களிவாய் மண்ணும், தஞ்சைப் பக்கங்களிலுள்ள செம்பூரான் மண்ணும் மிக உரித்தானவை. களிவாய் ஸம்பந்தமில்லாத பெருமணலும் நடுத்தரமாக உள்ளது.

பயிர்செய்யும் காலம்.—ஆடி, தைமாஸங்களே மிகவும் அநுகூலமானவை.

நில விஸ்தீரணம்.—முப்பதுவெண்டு நிலம் எடுத்துக்கொள்ளுவோம். நான்கு பக்கங்களையும் நன்றாக வேலியடைத்து ஆடு மாடு நுழையாத விதம் செய்யவேண்டியது முக்யம். பிறகு இந்த நிலத்தைக் குறுக்கும் நெடுக்குமாக உழுது, புல் பூண்டு முதலியவைகளை நீக்கி இரண்டு அடி ஆழம் நன்றாய்க் கொத்தி கல் முதலியவைகள் எல்லாவற்றையும் அப்புறப்படுத்த வேண்டும்.

பிறகு ஒருவாரம் வரையில் நிலத்தைக் காற்றாட விடவேண்டும்.

**மருக்கொழுந்து விதை விடல்.**—இப்படிச் செய்கோர்த்திசெய்த நிலத்தில் ஒரு பக்கத்தில் மறுபடியும் கொத்தி வாங்கி இரண்டு அடி அகலம் மூன்று அடி நீளமுள்ளதாகப் பாத்திகள் கட்டவேண்டும். பாத்தியை மேடுபள்ளமில்லாமல் ஸமனாக நிரவவேண்டும். நிரவின பிற்பாடு சின்னப்படியால் வீசம்படி விதையையெடுத்து ஸமனாகப் பாத்திகளில் விதைக்கவேண்டும். அதின்பேரில் பக்கத்திலுள்ள மண்ணை, கட்டியில்லாமல் நன்றாய்த்தூள்செய்து, விதைத்த விதை மறையும்படி தூவவேண்டும். பிறகு இதன்பேரில் மண் மறையும்படியாய் வைக்கோல் போடவேண்டும். பிறகு தகரப்புனலினால் தண்ணீர்விடவேண்டும். குடத்தினால் மொண்டு ஊற்றினால் மண் குழிபறிந்து விதைகள் ஒன்று சேர்ந்துவிடும். முளை காணும் வரையில் அதிக ஜாக்ரதையாகப் பார்த்து தண்ணீர் ஊற்றிக்கொண்டு வரவேண்டும். ஏழாம்நாள் முளை நன்றாய்க் காணும். முளைகண்ட பிறகு வைக்கோலை வெகு ஜாக்ரதையாக முளை முறியாமல் நீக்கவேண்டும். இதுவரையில் தினம் ஸாயரட்சையில் தண்ணீர் ஊற்றிவரவேண்டும். பதினைந்து நாள்களுக்குள் ஸுமார் இரண்டு அங்குல உயரம் கன்றுகள் வளர்ந்துவிடும். இதற்குள் நாலு நாளைக்கு ஒருமுறை வீதம் பாத்திகளிலுள்ள புல்பூண்டு முதலியவைகளை நீக்கவேண்டும். இப்படி ஒருமாஸகாலமானவுடன் கன்றுகள் பிடுங்கி நடும்படியான பக்வத்தை யடையும்.

**கன்றுகளை நடுதல்.**—பக்வமானவுடன் முன் செய்கோர்த்தி செய்திருந்த நிலத்தை மறுபடியும் ஒருமுறை கொத்தி வாங்கி, புல்பூண்டு முதலியவைகளை முழுவதும் நீக்கி, சாணி எரு, வௌவால் புழுக்கை முதலியவைகளை அந்த நிலத்திலிட்டு, மறுபடியும் கொத்திவாங்கி மூன்று அடி அகலம் நான்கு அடி நீளமுள்ளவைகளாக பாத்திகள் கட்டவேண்டும். பாத்திகள் கட்டிமுடிந்த பிற்பாடு ஸாயரட்சை வேளையில் கன்றுகளைப் பிடுங்கி, வேரிலுள்ள மண்ணை நன்றாய் அலசி, நான்கு அங்குலத்திற்கு ஒரு கன்றுவீதம் ஓர் கூர்க்கழியினால் பூமியில் குத்தி அதில் வேர் அறாமல் வைக்கவேண்டும். இப்படி வைத்தான பிறகு தண்ணீர் கொஞ்சங் கொஞ்சமாய் ஊற்றிக்கொண்டு வரவேண்டும். இவ்வாறு கன்றுகள் வேர் ஊன்றி பசுமை நிறம் கொண்டவுடன் தண்ணீர் பாய்ச்சலாம். முதல் ஒருமாஸத்திற்கு நான்கு நாளைக்கு ஒருமுறையும் பிறகு ஆறு நாளைக்கு ஒருமுறையும் தண்ணீர் பாய்ச்சி வரவேண்டியது. ஆனால் மழையின்றிக் கடும்வெயில் எறிக்குங் காலத்தில் தண்ணீர் அதிகமாக இறைத்தும், மழைகாலத்தில் நிறுத்தியும் வரவேண்டியது முக்யம்.

**களையெடுத்தல்.**—பதினைந்து நாளைக்கு ஒருமுறை வீதம் களைக்கொட்டு (சிறு மண்வெட்டி) கொண்டு கன்றுகள் கெடாமல் கொத்திவாங்கி புல் பூண்டு முதலியவைகளை நீக்கவேண்டும். பிறகு ஒருமாஸத்துக்கு ஒருமுறை களையெடுத்தால் போதுமானது. களையெடுக்கும்போதெல்லாம் கூடியமட்டில் எருப்போட்டு வரவேண்டும்.

**கொழுந்துகிள்ளுதல்.**—கன்றுகள் கட்ட நாற்பத்தைந்து நாளைக்கெல்லாம் ஆறு அங்குலமுதல் 12 அங்குலம் வரையில வளர்ந்து பக்கத்தில் போத்துகள் வெடித்துக்கொண்டு கப்புங்கிளையுமாக இருக்கும். இப்பொழுது கொழுந்துகளை பக்கத்துக் கிளைகளிலிருந்து கிள்ளி விற்பனைக்குக் கொண்டுபோகலாம். தினம் ஸுமார் பத்து சேர் கொழுந்துவீதம் கிள்ளலாம்.

**மருக்கொழுந்தின் விலை.**—சேர் ஒரு அணா முதல் 6 அணா வரையில் விற்கும். சராசரி இரண்டணா வைத்துக்கொண்டாலும் தினம் ஒன்றுக்கு ரூபா 1-4-0 க்கு மோசமில்லை. இப்படி ஆறுமாஸம் வரையில் கொழுந்து கிள்ளத்

தடையில்லை. மாஸம் ஒன்றுக்கு 37½ ரூபாய் வீதம் ஆறுமாஸத்திற்கு ரூ. 225-0-0 கிடைக்கும். ஆக இதுவொன்பது மாஸப் பயிர். மாஸம் 6 ரூ. வீதம் ஒரு தோட்டக்காரனை நியமித்தால் போதுமானது. 45 ரூ. தான் செலவாகும். இன்னும் சில்லரைச் செலவுக்காக ரூ. 20 வைத்துக்கொள்ளலாம். ஆக ரூ. 65 போக ரூ. 160 லாபமுள்ளது. சீட்டாட்டத்திலும் வீண் வம்புப் பேச்சிலும் காலங்கழிக்கும் நம் சோம்பேறி ஜனங்கள் இவ்விதப் பயிர்களைச் செய்து ஸுலபமாக பெருத்த லாபத்தை யடைந்து வயிறார வுண்டுடுத்து காலங்கழிக்கலாம். தஞ்சாவூரில் அநேக ஜனங்கள் பூக்காரத்தெருவில் இந்தத் தொழிலைக்கொண்டு காலங்கழித்து வருகிறார்கள். இதைப் பின்பற்றி அநேக ஜனங்கள் இந்தத் தொழிலைச் செய்து லாபம் பெறுவார்கள் என்றே இந்த வ்யாஸத்தை எழுதலானோம்.

**விதையின் விலை.**—பட்டணம் படி 1-க்கு ரூ. 6 முதல் 12 வரையில் விற்கிறது.

பு. து. ரத்னம் பிள்ளை.

## DISTRICT CONFERENCES.

## ஜில்லா கான்பரென்ஸுகள்.

### வட ஆற்காடு ஜில்லா கான்பரென்ஸ்.

வடஆற்காடு ஜில்லா கான்பரன்ஸ் அக்டோபர் மாஸம் 23வ யன்று வேலூரில் கூடிற்று. கான்பரென்ஸினுடைய உபசரணைக் கமிட்டியின் சேர்மனாயிருந்த மிஸ்டர் வி. எல். கோவிந்தராஜ முதலியார் ப்ரதிநிதிகளை வரவேற்று ப்ரஸங்கம் செய்தபோது கவர்ன்மெண்டார் வேலூர் தாலூகா போர்டு ப்ரெஸிடெண்டு ஸ்தானத்துக்கும், வட ஆற்காடு ஜில்லா போர்டு வைஸ் ப்ரெஸிடெண்ட் ஸ்தானத்துக்கும் உத்யோகஸ்தரல்லாத கனவான்களை நியமித்திருப்பதைப் பற்றி ஸந்தோஷப்படுவதாகவும், கூடிய சீக்ரத்தில் அந்த ஸ்தானங்களுக்கு மெம்பர்களை தெரிந்தெடுக்க அதிகாரம் கொடுக்கும்படி கவர்ன்மெண்டாரைக் கேட்டுக்கொள்வதாகவும் சொன்னார்.

க்ராமங்கள்தான் இந்திய ஜன ஸமூக வாழ்க்கைக்கு அஸ்திவாரமாயிருப்பவை. இந்த விஷயத்தைப் பலர் மறந்துவிட்டார்கள். இதனால் நேர்ந்த பலன் என்னவென்றால் க்ராமங்களின் க்ஷேமத்தை கவனிக்காமல் பட்டணங்களின் ஸௌகர்யத்தையே யாவரும் கவனித்து வருகிறார்கள். பட்டணங்களை விசாலப்படுத்துவதற்கும், அவைகளின் ஸுகாதாரத்தை அபிவ்ருத்தி செய்வதற்கும், பட்டண வாஸிகளினுடைய வ்யாதி நிவாரணத்திற்கும் ஏராளமாகப் பணம் செலவழித்து வருகிறார்கள். க்ராமாந்தரங்களில் வாந்தியோ, ப்ளேகோ உண்டானால் தான் க்ராமவாஸிகளுக்கு ஸர்க்கார் வைத்ய உதவி கிடைத்துவருகிறது. மற்ற காலங்களில் அவர்களுக்கு ஸர்க்கார் வைத்ய உதவி என்பதே கிடையாது.

ஆனால் எல்லா க்ராமங்களிலும் மருந்துசாலை ஏற்படுத்துவதென்பது முடியாத கார்யம். தாலூகா ஹெட்க்வார்ட்டர் ஸ்தலங்களிலெல்லாம் ஒரு ஆஸ்பத்ரியோ மருந்துசாலையோ இருக்கிறது. ஆனால் அவைகள் எல்லா க்ராமங்களுக்கும் உபயோகப்படுவதில்லை. நமது ராஜதானியில் சில இடங்களில் ஊர் ஊராய்ப் போகும் மருந்துசாலைகள் ஸ்தாபிக்கப்பட்டிருக்கின்றன. ஊர் ஊராய்ப் போகும் வைத்யர் ஜனங்களுக்கு சற்று உபகாரம் செய்யலாமென்றாலும், அவர் அதிகமான ஜனங்களுக்கு வைத்யம் செய்யமுடியாது. ஆகையால், க்ராம ஜனங்களுக்கு வைத்ய உதவி கிடைக்கச் செய்வதற்காக, பெரிய க்ராமங்களில் மருந்து சாலைகள் ஸ்தாபித்து, அவைகளில், மருந்து சேர்க்கவும், ஸாமான்ய வ்யாதிகளுக்கு வைத்யம் செய்யவும், திடீரென்று நோய் கண்டால் பெரிய வைத்யர்கள் வருவதற்குமுன் ப்ரதம உதவி செய்யவும் தெரிந்திருக்கும் வைத்யர்களை நியமித்து, அந்த

மருந்துச் சாலைகளை ஜில்லா வைத்ய அதிகாரிகளின் மேற்பார்வையில் விட்டுவைக்கவேண்டும். இந்த சிறு வைத்யசாலைகளை நிர்வகிப்பதற்கு அதிக செலவு ஏற்படாது.

இன்னும் மிஸ்டர் முதலியார் மூலாதாரக் கல்வியை இலவசமாகவும் கட்டாயப்படுத்தியும் கற்றுக்கொடுக்க வேண்டுமென்றும், க்ராமப் பஞ்சாயத்துகளுக்கு சிறு ஸிவில் க்ரிமினல் கேஸ்களை விசாரிக்க அதிகாரம் கொடுக்க வேண்டுமென்றும், சொன்னார்.

ப்ரெஸிடெண்டின் ப்ரஸங்கம்.—சென்னை வக்கீலாகிய மிஸ்டர் எஸ். ஸ்ரீநிவாஸய்யங்கார் கான்பரென்ஸுக்கு ப்ரெஸிடெண்டாக இருந்து ப்ரஸங்கம் செய்தார். அதில் ராஜாங்கச் சீர்திருத்தத்தைப் பற்றிய பாகத்தின் ஸாராம்சம் பின்வருமாறு.

ராஜாங்கச் சீர்திருத்தம்.—இந்த யுத்தம் முடிந்தபிறகு, இந்தியாவின் அரசாட்சி முறையை ஸ்வய ஆட்சியுள்ள குடியேற்ற நாடுகளின் அரசாட்சி முறைக்குக் கிட்டத்தட்ட சரியாயிருக்கும்படி மாற்றுவதற்காக இந்திய ராஜாங்க அமைப்பில் சில சீர் திருத்தங்கள் செய்யப்படுமென்று இந்தியாவிலுள்ள எல்லா வகுப்பாரும் எண்ணிவருகிறார்கள். ஜாதிகளுக்குள் ஒன்றுக்கொன்று விரோதம் ஏற்படும்படியாகவும், இந்தியர்கள் யுத்தத்தில் மனமொப்பிச் சேர்ந்து உதவி வருவதைக் குறைக்கும்படியாகவும் உள்ள எந்த விதமான வாதங்களையும் இப்போது கவனிப்பதற்கில்லை. ஆனால் சீர் திருத்தம் செய்வதற்குக் காலம் வரும்போது நமக்கு இன்னின்ன சீர் திருத்தங்கள் வேண்டுமென்பதைத் தெரிவிக்க, அதற்கு முன்னாலேயே அவைகளைப்பற்றி ஸாவதானமாய் கவனித்து வரவேண்டியது அவச்யமாகும். சீர் திருத்தங்கள் விஷயத்தில் நமக்கு முக்யமாய் 3-விஷயங்கள் அவச்யமென்று எல்லாரும் ஒப்புகொண்டிருக்கிறதாகத் தெரிகிறது. அவையாவன.—(1) லெஜிஸ்லெடிவ் கௌன்ஸில்களில மெம்பர்கள் எல்லாரும் தெரிந்தெடுக்கப் பட்டவர்களாக இருக்கவேண்டும். நிர்வாக ஸபை மெம்பர்களும் அதில் மெம்பர்களாக இருக்கவேண்டும். (2) நிர்வாக ஸபைகளில் பாதிப்பேர்கள் இந்தியர்களாக இருக்கவேண்டும் (3) வரிபோடுதல், செலவு செய்தல் ஆகிய இவைகளைப்பற்றிய விஷயங்களை சில அவச்யமான நிபந்தனைகளுடன் லெஜிஸ்லெடிவ் கௌன்ஸில்களுக்கு விட்டுவிட வேண்டும். இந்த மூன்று விஷயங்கள் இருந்தால்தான் ஜனங்கள் ராஜாங்க விஷயத்தில் அபிவ்ருத்தியடைய முடியும். அரசாட்சி சீர்திருத்த விஷயத்தைப்பற்றி பம்பாயில் நடக்கப்போகிற காங்க்ரெஸ் ஸபை கவனிக்க வேண்டியது அவச்யம். க்ராமப் பஞ்சாயத்துகளைப் பற்றி அவர் பேசியதை க்ராமப் பஞ்சாயத்துகள் என்ற வ்யாஸத்தின் கீழ் ப்ரசுரித்திருக்கிறோம்.

தீர்மானங்கள்: இந்தக் கான்பரென்ஸில், (வடஆற்காடு) செய்யப்பட்ட முக்யமான தீர்மானங்கள் பின்வருமாறு. (30 வர்ஷங்களுக் கொருதடவை) நிலவரி ஸெட்டில் மெண்ட் செய்வது குடிகளின் க்ஷேமத்துக்கு ஏற்றதாயில்லை. தேசம பூராவும் பொருளாதார நிலைமையை அபிவ்ருத்தி செய்வதற்கு நிலவரியை சாச்வதமாகச் செய்யவேண்டியது அவச்யமாகும் இந்த ஜில்லாவின் 5 தாலுக்களுக்கு ஸமீபத்தில் ஸெட்டில் மெண்ட் செய்ததில் ஜனங்களுக்கு ரொம்ப பாதகமேற்பட்டிருக்கிறது.

நிலவரி வஜா செய்வதற்கான ரூல்கள் ரொம்ப நிர்ப்பந்தமானவைகளாக இருக்கின்றன. அவைகளை அமுலுக்குக் கொண்டுவருவதில் அதிகாரிகள் தாராள சிந்தையோடு இருப்பதில்லை. ரெமிஷன் (தீர்வை வஜா) கொடுக்கும விஷயத்தில், ஸாதாரணமாய் கிடைக்கும் மாஸூலில் 3-ல் ஒரு பாகத்துக்கும் குறைவாக ஒரு வயலில் மாஸூல் கிடைத்தால் பயிர் முற்றிலும் சாவியாய்ப்போனதாகக் கொள்ளவேண்டும்.

ரிஸர்வ் காடுகளிலிருந்தும், ரிஸர்வாயில்லாத காடுகளிலிருந்தும் குடிகள் கூருவுக்குத் தழை வெட்டிக்கொள்வதற்கும், குடும்ப உபயோகத்துக்கும் விவஸாயக் கருவிகள் செய்வதற்கும் அந்தக் காடுகளிலிருந்து விறகு, மரம் முதலியவை வெட்டிக்கொள்வதற்கும கவர்ன்மெண்டார் ந்யாயமாய் வேண்டிய ஸௌகர்யங்கள் செய்துகொடுக்கவேண்டும். இந்த ஜில்லாவில், கால்நடைகள் மேய்வதற்கு ஸௌகாயங்கள் இலலாததால், க்ராமங்கள் ஓரமாயிருக்கும் ரிஸர்வ் காடுகளில் அந்தக் காடுகள் அழிந்துபோகாமலிருப்பதற்கு வேண்டிய நிபந்தனைகளுடன் கால்நடைகளை மேய்ப்பதற்கு அனுமதி கொடுக்க வேண்டும்.

முனிஸிபாலிடிகள் யூனியன் பஞ்சாயத்துகள் ஆகிய இவைகளின் ஆதீனத்துக்குளபட்ட ப்ரதேசங்களில் மூலதாரக்கல்வியை இலவசமாகக் கற்றுக் கொடுக்கவேண்டும். நெசவுதொழிலும், உலோக வேலையும் கற்றுக்கொடுப்பதற்காக கவர்ன்மெண்டார் இந்த ஜிலலாவில் ஒரு டெக்னிகல் பள்ளிக்கூடம் ஸ்தாபிக்கவேண்டும்.

## கர்நூல் ஜில்லா கான்பரேன்ஸ்.

கர்நூல் ஜில்லா கான்பரென்ஸ் இந்த மாஸம் 23-ந்தேதியன்று கூடிற்று. அந்தக் கான்பரென்ஸினுடைய உபசரிப்புக் கமிட்டியின் சேர்மனாகிய மிஸ்டர் டி. ஸுப்பராவ், மூலாதாரப்படிப்பை அபிவ்ருத்தி செய்யவேண்டுமென்றும, சிறுவர்களுக்குக் கலவிகற்பிக்க முயற்சிசெய்வதோடு வயதானவர்களுககும் கல்வி கற்பிக்க ஏற்பாடு செய்யவேண்டுமென்றும், கர்நூல் ஜில்லாவில் நூற்றுக்கு 51-பேர்கள பகல் வேளையில் வேலை செய்யவேண்டியிருப்பதால் அவர்கள பகல் பளளிக்கூடங்களுக்குப் போக முடியாதென்றும, அவர்களுக்காக ராத்ரிப் பள்ளிக்கூடங்கள் ஸ்தாபித்து அவர்களுககு கல்வி கற்பிக்கவேண்டுமென்றும் ஆரம்பத்தில 2000-ஜனங்களும் அதற்கு மேலும் உள்ள க்ராமங்கள் ஒவ்வொன்றிலும் ராத்ரிபாடசாலைகள் ஸ்தாபிக்கவேண்டுமென்றும், சொனனார்.

ப்ரேஸிடெண்டின் ப்ரஸங்கம்.—ஆனரபிள் ராவ்பகதூர் பி. என். சர்பர் கான்பரென்ஸுக்கு ப்ரெஸிடெண்டாக இருநது ப்ரஸங்கம் செய்தார். அவர், இந்தியர்களை ராணுவத்தில் அதிகமாகச் சேர்த்துக்கொள்ள வேண்டுமென்றும், கவர்ன்மெண்டாரும் ஜனஙகளும கைத்தொழில்களை அபிவ்ருத்திசெய்ய முயற்சிகள் எடுத்துக்கொள்ள வேண்டுமென்றும், கல்வி முறையில் பல சீர்திருத்தங்கள் செய்யவேண்டுமென்றும், ராஜதானியில் இன்னும் சில ஸர்வகலாசாலைகள் ஸ்தாபிக்க வேண்டுமென்றும் சொன்னார்.

இன்னும், யுத்த ஸந்தர்ப்பமென்று இந்திய அரசாட்சி முறையைப்பற்றிய விஷயங்களை கவனிக்காமலிருக்கக் கூடாதென்றும், ஸமீபத்தில் இந்தியாவில் பெண் கல்வியை அபிவ்ருத்தி செய்ய ஏற்பாடு செய்யவேண்டுமென்று சிலா இந்தியா மந்த்ரியைக் கேட்டபோது, அவர் இநதியர்களுக்கே அதுவிஷயத்தில் ஆவல் இல்லையெனவும், இநதியாகள அவ்விஷயத்தைப்பற்றி கவர்னமெண்டாரை ஒன்றும் கேட்கவில்லையெனவும் சொன்னாரென்றும், ஆகையால் நமக்கு இன்னின்ன சீர்திருத்தங்கள் அவச்யம வேண்டியவை என்று இப்போதே தீரயோசித்து, கவர்ன்மெண்டாருக்குத் தெரிவிக்காவிட்டால், யுத்தத்துக்குப் பிறகு கவர்னமெண்டார் இநதியாவின் அரசாட்சி முறையையும் இந்தியாவுக்கும் மற்ற ப்ரிட்டிஷ் நாடுகளுக்கும் உள்ள ஸம்பந்தங்களையும் சீர்திருத்த ஆலோசிக்கும்போது, பெண் கல்வி விஷயமாய் இநதியா மந்த்ரி பதில் சொன்னதுபோல கவர்ன்மெண்டார், இந்தியர்கள் இவைகள் விஷயமாய் ஆவலுள்ளவர்களாகத் தெரியவில்லையென்று சொல்லுவார்களென்றும் சொன்னார்.

தீர்மானங்கள்.—இந்த ஜில்லா கான்பரென்

ஸில் செய்யப்பட்ட முக்யமான தீர்மானங்களாவன:

ரயத்துவாரி நிலங்களுக்குத் தீர்வையை சாச்வதத் தீர்வையாக ஏற்படுத்தவேண்டும். ஜில்லா வின்ஜனங்கள் ஏழையாயிருப்பதை உத்தேசித்து நிலஸெஸ்ஸை உயர்த்தாமலிருக்கவேண்டும்.

நந்தியால், மார்க்காபூர் தாலுகா போர்டுகளுக்கு உத்யோகஸ்தரல்லாதவர்களை ப்ரெஸிடெண்டுகளாக நியமிக்கவேண்டும். நந்தியால் முனிஸிபல் கௌன்ஸிலுக்கும் ஜில்லாவிலுள்ள யூனியன்களுக்கும் சேர்மனைத் தெரிந்தெடுக்கும் அதிகாரத்தைக் கொடுக்கவேண்டும். ஜில்லா போர்டுகளிலும் தாலுகாபோர்டுகளிலும் உத்யோகஸ்தர்கள் மெம்பராக வருவதைத் தடுக்கவேண்டும். அதிகாரப்பிரிவினைக் கமிஷனுடைய அபிப்ராயத்தை அனுஸரித்து க்ராமப் பஞ்சாயத்துகள் ஸ்தாபிக்கவேணடும். 2500-ஜனங்களும் அதற்கதிகமும் உள்ள க்ராமங்களில வைத்ய சாலைகள் ஏற்படுத்தவேண்டும.

ஜில்லாவில் பையன்கள் பெண்கள் இவர்களுக்கான எலிமெண்டரி பாடசாலைகள் இன்னும் அதிகமாக ஸ்தாபிக்கவேணடும. மாணவர்களுக்கு இலவசமாய் கலவிகற்றுககொடுக்கவேண்டும். க்ராமங்களில் புஸ்தகசாலைகளும், பத்ரிகா வாசகசாலைகளும் ஏற்படுத்தவேண்டும. இவைகளுக்கு லோகல் போர்டுகள் பணங்கொடுத்துதவும்படி அவைகளுக்கு கவர்ன்மெண்டார் அதிகாரங்கொடுக்கவேண்டும்.

## தஞ்சாவூர் ஜில்லா கான்பரென்ஸ்.

இந்தக் கான்பரென்ஸ் இந்த மாஸம் 23-ந்தேதியன்று மாயவரத்தில் கூடிற்று. ஆனரபிள் மிஸ்டர் பி. வி. நரஸிம்மய்யர் அதற்கு ப்ரெஸிடெண்டாக இருந்தார். அவர் தமது ப்ரஸங்கத்தில, ப்ரிட்டிஷ் கவர்ன்மெண்டார் செய்யவேண்டுமென்று இந்தியர்கள் கேட்கும் சீர்திருத்தங்கள் இன்னின்னவென்பதைப் பற்றியும் ஸ்தல ஸ்வய ஆட்சியைப் பற்றியும் சொன்னவைகளை இங்கு சுருக்கி எழுதுகிறோம்.

ராஜாங்க சீர் திருத்தங்கள்.—ப்ரிட்டிஷ் ப்ரதம மந்த்ரியும், ராஜப்ரதிநிதியும், இனிமேல் இந்தியாவானது ப்ரிட்டிஷ் ஏகாதிபத்யத்தில் ஸமபாத்யதையுள்ள பாகமாக இருக்க ஏற்பாடு செய்யப்படுமென்று தெரிவித்திருக்கிறார்கள். அப்படி ஏகாதிபத்யத்தில் ஒரு பாகமாயிருப்பதென்றால் என்ன ஸ்வதந்த்ரங்கள் நமக்கு வேண்டுமென்பதை இந்தியர்கள் வெளியிடவேண்டும. சில்லரை விஷயங்களில் இந்தியர்களுக்குள் அபிப்ராய பேதமிருந்த போதிலும், முக்யமான விஷயங்களில இந்தியர்களெல்லாரும் ஏகோபித்த அபிப்ராய முடையவர்களாக இருப்பார்களென்று சொல்லலாம். நாம் இன்ன ஸ்வதந்த்ரங்கள் வேண்டுமெனகிறோமென்பது ப்ரிட்டிஷ் ராஜதந்த்ரிகளுக்கு ஏற்கனவே தெரிந்த விஷயம். இந்தியாவானது ஏகாதிபத்யத்தில் ஒரு கீழ்ப்பட்ட நாடாயிராமல் ஏகாதிபத்யத்தைச் சேர்ந்த மற்றவைகளைப்போல் ஸமபாத்யதையுள்ள நாடாக இருக்கவேண்டும். அதாவது காங்க்ரெஸ் ஸபை பலவருஷங்களாகச் சொல்லி வருவதுபோல், குடியேற்ற நாடுகளுக்குள்ள ஸ்வய ஆட்சி இந்தியாவுக்கும் இருக்கவேண்டும், உள்நாட்டு வ்யவஹாரங்கள் ஸம்பந்தப்பட்ட மட்டில் நமக்கு ஹோம் ரூல் அதாவது ஸ்வய ஆட்சி வேண்டும். அன்ய தேச வ்யவஹாரங்களில் இந்தியாவானது க்ரேட்ப்ரிட்டனுடனும் குடியேற்ற நாடுகளுடனும் சேர்ந்துகொள்ளவேண்டும். இவ்விதம் இந்தியாவுக்கு மற்ற ப்ரிட்டிஷ் நாடுகளுடன் ஸமதவமும், ந்யாயமும் கொடுத்தால்தான், இந்தியாவுக்கும ப்ரிட்டிஷ் ஏகாதிபத்யத்தின் மற்ற பாகங்களுக்கும் சாச்வதமான கூட்டுறவு ஏற்படக்கூடும். இவைகள்தான் முக்யமான பெரிய விஷயங்கள்.

இவ்விதம் ஸ்வயஆட்சி வேண்டுமென்றால் இன்னின்ன சீர்திருத்தங்கள், வேண்டுமென்

பதை விரிவாய்ச் சொல்வோம். இந்தியா மந்த்ரி ஸபையை நீக்கிவிடாமல் இன்னும் அப்படியே வைத்திருப்பதானால், அதையும், நிர்வாக ஸபைகளையும், சட்ட நிரூபண ஸபைகளையும், இந்தியன் ஸிவில் ஸர்விஸ் ஏற்பாட்டையும் சீர்திருத்தவேண்டும். ஸிவில் ஸர்விஸ் பரீக்ஷை தேறியவர்களுக்கென்று தனியாய் விட்டிருக்கும் உத்யோகங்களுக்கு இந்தியர்களை நியமிக்கவேண்டும். சட்ட நிரூபண ஸபைக்கு ஸ்வயாதீனம் கொடுக்கவேண்டும். அவைகளிலுள்ள மெம்பர்களின் தொகையை இருமடங்காக்கவேண்டும். அந்த ஸபைகளில் தெரிந்தெடுக்கப்பட்டவர்கள், மெஜாரிடியாக, அதாவது நியமிக்கப்பட்டவர்களைவிட அதிகமாக, இருக்கும்படி செய்யவேண்டும். எல்லா சட்ட ஸபைகளிலும ஜனப்ரதிநிதிகளுக்கு வாஸ்தவத்தில் அதிகாரமும், பொறுப்பும் இருக்கும்படி செய்யவேண்டும்

**ஸ்தல ஸ்வய ஆட்சி.**—இந்தியாவில் முன்பு வைஸ்ராயாயிருந்த லார்ட் ரிப்பன் ஸ்தல ஸ்வய ஆட்சியைப்பற்றி ஒரு தீர்மானம் வெளியிட்டு, அது ஸம்பந்தமாக லோகல் போர்ட்ஸ் ஆக்ட் என்று ஒரு சட்டமும் செய்து-ஸுமார் 30-வர்ஷத்துக்கு மேலாகியும், அந்தத் தீர்மானத்தின் நோக்கமும், ஆக்டிலுள்ள நல்ல நிபந்தனைகளும் யாதொரு ப்ரயோஜனமும் செய்யாமல்போயின. லோகல போர்ட்ஸ் ஆக்டின்படி ஜில்லாபோர்டுகளுக்கு உத்யோகஸ்தரல்லாதவர்களை ப்ரெஸிடெண்டாக நியமிக்கலாம்; அல்லது தெரிந்தெடுக்கலாம். ஆனால் இதுவரையில் எந்த ஜில்லாபோர்டுக்கும் உத்யோகஸ்தரல்லாத கனவானை ப்ரெஸிடெண்டாக நியமித்ததும், தெரிந்தெடுத்ததும் கிடையாது. ஆனால், தற்போதைய நிலைமையில் கலெக்டரே ஜில்லா போர்டின் ப்ரெஸிடெண்டாக இருக்கவேண்டியது அவச்யமென்று அதிகாரபரிஷினைக் கமிட்டியாரும், கவர்ன்மெண்டாரும அபிப்ராயப்படுகிறார்கள். அதற்குப் பின்வரும் காரணத்தை சொல்லுகிறார்கள். கலெக்டரை ஜில்லாபோர்டு ப்ரெஸிடெண்டாக நியமிக்காவிட்டால் ஜில்லாவின் பொதுக்கார்யங்களாகிய ரஸ்தாககள், கல்வி, ஸுகாதாரம, வடிகால், ஜலவஸதி முதலியவைகளில் அவருக்கு யாதொரு ஸம்பந்தமும் இல்லாமல் போகுமென்கிறார்கள். இன்னும் அவருக்கு கல்வியறிவுள்ள உத்யோகஸ்தரல்லாத கனவான்கள் என்ன சொல்கிறார்கள் என்பது தெரியாமல் போகுமாம். முதலாவது கலெக்டர்கள் ஜில்லா போர்டு ப்ரெஸிடெண்டாக இருப்பதால் எவ்வளவு தூரம உத்யோகஸ்தரல்லாத மெம்பர்களுடன் கலந்துகொள்கிறார்கள் என்பதைப் பார்ப்போம். ஜில்லா போர்டார் மாஸாந்தர மீட்டிங்கு நடக்கும் ஒன்று அல்லது இரண்டு மணி நேரத்தில் லோகல்பண்ட் விஷயங்களைப் பற்றி மாத்ரம் ப்ரஸ்தாபிக்கிறார்கள். ஸாதாரணமாய் மற்ற விஷயங்களைப்பற்றி ஒன்றும் பேசுவதில்லை. அப்படிக்கில்லாமல், பட்டணங்களிலும் க்ராமங்களிலுமுள்ள கனவான்கள் தங்களுடைய அபிப்ராயங்களைத் தெரிவிக்கலாமென்றும, அவர்களைத் தாம மரியாதையாய் நடத்துவாரென்றும் கலெக்டர் சொன்னால, அவர் உத்யோகஸ்தரல்லாத கனவான்களுடைய அபிப்ராயங்களை அறிந்துகொள்வதற்கு ரொம்ப ஸாதகமேற்படும். ரயத்துகளைக் கான்பரென்ஸில் கூட்டி அவர்களுடைய அபிப்ராயத்தைக் கேட்பதாலும இன்னும ரொம்ப ப்ரயோஜனம் ஏற்படும். கலெக்டர்களுக்கு லோகல்பண்ட் விஷயங்களில் சற்றுப் பயிற்சியும அனுபோகமும் ஏற்படவேண்டுமென்பதை வைத்துக்கொண்டு, ஜனங்களுக்கு ஸ்தல ஸ்வய ஆட்சியில் பயிற்சி கொடுக்காமலிருப்பது சரியல்ல. ஜில்லா கலெக்டர் ஜில்லா போர்டின் ப்ரெஸிடெண்டாகஇருப்பதனாலதான் அநேக ஸர்க்கார் உத்யோகஸ்தர்கள் ஜில்லா போர்டுகளில் மெம்பர்களாவதற்கு ப்ரயத்தனப்பட்டு, உத்யோகஸ்தரல்லாத மெம்பர்களோடு போட்டியாய் நின்று, அவர்களுக்கு மெம்பர்

ஸ்தானங்கள் கிடைக்காமல் செய்து, தாங்களே அந்த ஸ்தானங்களை அடைகிறார்கள். ஜில்லாவினுடைய ஸ்தல ஸ்வய ஆட்சிக்கு ஒரு உத்யோகஸ்தரல்லாத கனவான் தலைவராக இருந்தால், ஸ்தல ஸ்வய ஆட்சி வேலைகளெல்லாவற்றையும் உத்யோகஸ்தரல்லாதவர்களைக்கொண்டே நடத்த ஜனங்கள் முயற்சிசெய்வார்கள் கவர்ன்மெண்டார் முனிஸிபாலிடிகளின் வர்ஷாந்தர நிர்வாக ரிபோர்ட்டை தாராளமாய் விமர்சனம் செய்து தங்களுடைய அபிப்ராயங்களைத் தெரிவிக்கிறார்கள். ஜில்லா போர்டுகளுக்குக் கலெக்டர்கள் ப்ரெஸிடெண்டாக இருப்பதால் அவைகளினுடைய ரிபோர்ட்டுகளை வெகுவாய் கண்டித்து அபிப்ராயம் கொடுப்பதில்லை.

ஜில்லா போர்டுகளுக்கு ப்ரெஸிடெண்டாக இருப்பதற்கு உத்யோகஸ்தரல்லாத தகுந்த கனவான்கள் கிடைக்கமாட்டார்கள் என்று கவர்ன்மெண்டார் இனிமேலும் சொல்வார்களானால் அது சரியல்ல முனிஸிபாலிடிகளுக்கும், தாலூகா போர்டுகளுக்கும் தக்க உத்யோகஸ்தரல்லாத கனவான்கள் சேர்மன்களாகக் கிடைக்கும் போது ஜில்லா போர்டுகளுக்கு மாத்ரம் தக்க கனவான்கள் கிடைக்காமல் போவானேன்? ராஜப்ரதிநிதியின் நிர்வாக ஸபைக்கும், மாகாணங்களின் நிர்வாக ஸபைகளுக்கும, இந்தியா மந்த்ரியின் ஸபைக்கும் தக்க கனவான்கள் கிடைக்கும்போது ஜில்லாபோர்டு ப்ரெஸிடெண்டு ஸ்தானத்துக்குத்தானா உத்யோகஸ்தரல்லாத கனவான்கள் கிடைப்பது கஷ்டம்? தகுந்த கனவான்கள் கிடைப்பதில்லையென்பது கொஞ்சங்கூட சரியல்ல. கவர்ன்மெண்டார கமிஷனுடைய மற்ற சிபார்சுகளில் சிலவற்றை ஏற்றுக் கொள்ளாமலிருந்ததுபோல, ஜில்லாபோர்டுகளுக்கு ப்ரெஸிடெண்டு நியமிக்கும் விஷயத்திலும் அவர்களுடைய அபிப்ராயத்தை ஏற்றுக்கொள்ளாமல் உத்யோகஸ்தரல்லாத கனவான்களை ப்ரெஸிடெண்டாக நியமிக்க வேண்டும்.

தீர்மானங்கள்.—இந்தக் கான்பரென்ஸில் (தஞ்சாவூர்) செய்யப்பட்ட முக்யமான தீர்மானங்கள் சுருக்கமாய்ப் பின்வருமாறு.

ஒவ்வொரு ஜில்லாவுக்கும் ஒரு ப்ரதிநிதி இருக்கும்படி சட்டஸபை மெம்பர்களின் தொகையை அதிகப்படுத்தவேண்டும்; நிலவரியை ஒரு குறிப்பிட்ட காலத்துக் கொருதடவை உயர்த்தாமல் சாச்வதமாக்கவேண்டும். பெண் கல்வியை அபிவ்ருத்தி செய்ய முயற்சிகள் எடுத்துக்கொள்ளவேண்டும் தேசத்தின் கைத்தொழில்களை அபிவ்ருத்திசெய்ய முயற்சி பெடுத்துக் கொள்ளவேண்டும். நாகப்பட்டணத்தில் ஒரு டெக்னிகல் பாடசாலை ஏற்படுத்தவேண்டும். காங்ரெஸைச் சேர்ந்த மிதவாதிகள் அமிதவாதிகள் என்னும் இரண்டு கக்ஷியாரும் ஒன்றுசேரவேண்டும். மிஸஸ் பெஸண்ட் இந்திய ஸ்வய ஆட்சியைப்பற்றி ப்ரஸ்தாபித்துவரும் ப்ரேரணையை கான்பரென்ஸ் ஆதரிக்கிறது; கவர்ன்மெண்டார் 500 ஜனங்களும் அதற்குமேலும் உள்ள க்ராமங்களில் யூனியன் பஞ்சாயத்துகள் ஸ்தாபிக்கவேண்டும்.

## THE ART OF DECEPTION IN WAR.

## யுத்தத்தில் எதிரிகளை ஏமாற்றுதல்.

உலகத்திலுள்ள ப்ராணிகளில் அநேகமாய் எல்லாவற்றிற்கும், அவைகளை சத்ருக்கள் அறிந்துகொள்ளாம லிருப்பதற்காக, இயற்கையிலேயே, வர்ணங்கள் முதலிய பல ஸாதனங்கள் அமைந்திருக்கின்றன. இவைகளைப்பற்றி சென்ற ஜனவரிமாஸத்து 'ஜநோபிமானி'யில் விரிவாய் எழுதியிருக்கிறோம்.

அமெரிக்காவிலுள்ள 'கல்லிமா' என்ற ஒரு ஜாதி வண்ணாத்திப் பூச்சிக்கு மேல்பாகமெல்லாம் இலைபோன்ற வர்ணமாயிருக்கிறதாம். இலையிலுள்ளனவற்றைப்போல் நரம்புகளும் அதில் காணப்படுகின்றனவாம். அதோடு இலையில் ஏதாவது ஒரு பாகம் அழுகியோ பூச்சியரித்தோ

போயிருந்தால் இலை எப்படியிருக்குமோ, அப்படியே சாணுப்படிக்கும் வண்ணாத்திப் பூச்சியின் மேல் பாகம் காணப்படுமாம். இதனால் அந்தப் பூச்சி தனது சிறகுகளை மடக்கி மரத்தினுடைய ஒரு கிளையின் தண்டில் உட்கார்ந்தால், பார்ப்பவர்களுக்கு அது ஒரு இலைபோலவே இருக்குமாம். மற்ற இலைகளுக்கும் இந்தப் பூச்சிக்கும் யாதொரு வித்யாஸமும் தெரியாதாம். இது போலவே இலையைத் தின்னும் இன்னொரு ஜாதி பூச்சி இலைகளுக்கு நடுவில் உட்கார்ந்திருக்கும்போது, அது ஒரு சிறு கிளைபோலவே தோன்றுகிறதாம். சில பக்ஷிகளுக்கு மரத்தினுடைய பட்டைகளைப்போல் வர்ணமிருப்பதால், அவைகள் மரத்தில் உட்கார்ந்திருக்கும்போது பக்ஷி வேட்டைக்காரர்களுக்கு அவையிருப்பது தெரிவதில்லையாம். இன்னும் சில ப்ராணிகள் பருவ காலத்துக்குத் தகுந்தபடி நிறம் மாறுகின்றன. வடக்கு த்ருவத்திலுள்ள ப்ராணிகளில் அநேகமாய் எல்லாம் பனி காலம் வரும்போது பழுப்பு நிறத்திலிருந்து முற்றிலும் வெண்மை நிறமாக மாறுகின்றன. அப்படி மாறுவதால் அந்த ம்ருகங்களுக்கும் பனிக்கட்டிக்கும் வித்யாஸமில்லாமல் போய், அவையிருப்பது மற்ற ப்ராணிகளுக்காவது, மனிதர்களுக்காவது தெரியாமலிருக்கும். மீன்களில் சில ஜாதிகள் காலத்திற்கேற்றவாறு தங்களுடைய தேக வர்ணத்தை மாற்றிக்கொள்வதேயல்லாமல், கடலின் அடித்தரையின் தன்மைக்கேற்றவாறும் மாற்றிக்கொள்ளுகின்றனவாம்.

இந்த விஷயங்களை அறிந்த மனித ஜாதியாரும் ஆதிகாலந்தொட்டு தங்களுடைய ஸைனிகர் யுத்தத்துக்குத் தக்கவாறு வேஷம் போட்டுவந்திருக்கிறார்கள். முன்காலத்தில் வேடர்கள் பசுமையான ஆடைகள் தரித்து தாங்கள் இருப்பது ம்ருகங்களுக்கு தெரியாதபடி செய்து கொண்டு வேட்டைக்குப் போய்வந்தார்கள். ஆப்ரிக்காவைச் சேர்ந்த காங்கோ என்னும் ப்ரதேசத்திலுள்ள ஒரு பூர்வீக ஜாதியார், தாங்கள் இருப்பது மற்ற ஜனங்களுக்குத் தெரியாமலிருப்பதற்காக மந்தமான சிவப்பு வர்ணங்களைக் கோடுகளாகப் பூசிக் கொள்ளுகிறார்களென்று சென்ற ஆகஸ்ட்டு மாஸத்து ஜனவிநோதினியில் (661-ம் பக்கம்) தெரிவித்தோம். இப்படிப்பிறரை ஏமாற்றுவது மைதான காலங்களிலேயன்றி, யுத்த காலங்களிலும் ஆதிகாலந்தொட்டு ஸகஜமாயிருந்து வந்திருக்கிறது. மேலும் தற்காலத்தில் ஏரோப்ளேனும் ஆகாயக் கப்பல்களும் யுத்த ஸாதனங்களாக ரொம்பவும் உபயோகத்துக்கு வரவே, எதிரிகளை ஏமாற்றுவதென்பது அத்யாவச்யமாய் விட்டது. இன்னும் தற்காலம் தூரத்ருஷ்டிக் கண்ணாடியால் வெகு தூரத்திலுள்ளவைகளை மிகத் தெளிவாகப் பார்க்கக் கூடுமாகையாலும், யுத்தம் செய்பவர்கள் தங்களையும் தங்களுடைய யுத்தக் கருவிகளையும் ரொம்ப ஸாமர்த்யமாய் மறைத்து கொள்ளவேண்டியது அவச்யமாகிறது.

போயர் யுத்தத்தில்தான் எதிரிகளுக்குத் தெரியாமல் மறைத்துக் கொள்வதென்பது ஒரு ஏற்பாடாக ஆரம்பமாயிற்று. அப்போதுதான் முதல் முதலாக காக்கியென்னும் பழுப்பு நிறமான உடை உபயோகத்துக்கு வரலாயிற்று. அதற்குப் பிறகு ராணுவ அதிகாரிகள் பசுமை கலந்த பழுப்பு நிறமுள்ள உடைகளையும், லேசான பழுப்பு நிறமுள்ள உடைகளையும் உபயோகத்துக்குக் கொண்டுவரலானார்கள். இந்த மாதிரி உடைகளைத் தரித்திருக்கும் வீரர்களை எதிரிகள் கண்டுபிடிப்பது ச்ரமம். ரொம்ப பகட்டான வர்ணங்களுள்ள உடைகள் வெகுவாய் உபயோகத்திலில்லை. அதிலும் முக்யமாய் போர்க்களத்தில் உபயோகிப்பது ரொம்பவும் அபூர்வம்.

ஜெர்மானியர்களும் ஆஸ்ட்ரியர்களும் பகட்டான நிறங்களுள்ள உடைகளை விட்டுவிட்டு, அதிகமாய் எடுத்துக்காட்டாத காம்பல் நிறமான

உடைகளைத் தரித்துக்கொள்கிறார்கள். அதோடு தங்களுடைய தலைகளுக்குப் போட்டுக்கொள்ளும் தொப்பி போன்ற கவசத்திலுள்ள பொத்தான்களையும், உலோகத்தால் செய்த விருதுகளையும் மறைத்துக் கொள்வதில் ரொம்ப கவனமாயிருக்கிறார்களாம்.

ப்ரெஞ்ச் ஸைன்யம் ஒன்றுதான் பழைய காலத்து உடைகளை உபயோகித்து வருகிறது. ப்ரெஞ்ச் குதிரைப்படைகளில சில இன்னும் மார்புக் கவசங்களையும், பக்ஷி இறகுகள் அமைத்த தலைக்கவசங்களையும உபயோகித்து வருகின்றன. சில ப்ரெஞ்ச் துருப்புகள் இன்னும சிவப்பு கால் சட்டைகளை அணிந்துவருகின்றன.

ஜெர்மனியிலும் ஆஸ்ட்ரியாவிலு முள்ள ராணுவ அதிகாரிகள் பனிக்காலம் வந்தவுடன், ஸோல்ஜர்களி னுடைகளை அந்தக்காலத்தின் தன்மைக்கேற்றபடி மாற்றிவிடுகிறார்கள். ஆஸ்ட்ரியா மலைப்ரதேசங்களில் குளிர்காலத்தில் தரையெல்லாம பனிக்கட்டியாக இருக்குமாததால், பனிக்கட்டிக்கும் ஸோல்ஜர்களுடைய உடைக்கும் நிறத்தில் யாதொரு வித்யாஸமும் இல்லாமலிருக்கும்படிக்கும், அதனுல், அவர்கள் இருப்பது எதிரிகளுக்குத் தெரியாமலிருக்கும் படிக்கும், ஸோல்ஜர்களுக்கு வெண்மையான உடைகள் கொடுக்கிறார்கள்.

இவ்விதம் போர்வீரர்களை எதிரிகளின் கண்ணுக்குத் தென்படாமல் செய்வதோடு, யுத்தக் கருவிகளையும் பற்பல வழிகளில் எதிரிகளுக்குத் தெரியாதபடி மறைக்கிறார்கள். ரஷ்யோ—ஜப்பானிய யுத்தத்தில ஜப்பானியர்கள் தங்களுடைய ஸாமான் வண்டிகளை எதிரிகள் தூரத்ருஷ்டிக்கண்ணாடியால் பாரத்து விடாதபடி, அவைகளின் மேல் இலையடர்ந்த கிளைகளை சாதுர்யமாய்ப் போட்டு வைத்தார்கள். அந்த வண்டிகளை தூரத்திலிருந்து பார்த்தால் அவைகள் ஒன்றுக்கொன்று தூரமாயுள்ள மரவரிசைகளென்று தோன்றும்.

இந்த யுத்தத்தில் ஏரோப்ளேன்கள் ரொம்பவும் உபயோகப்பட்டுவருவதால், மேற்சொன்னபடி யுத்தக்கருவிகளை மறைத்துவைக்கவேண்டியது ரொம்ப அவச்யமாகிறது. ஜெர்மானியர்கள் தங்களுடைய மூட்டை யிழுக்கும் மோட்டார் வண்டிகளின்மேல் மரங்களின் கிளைகளைப் போட்டு, உயரவிருந்து பார்த்தால் வாஸ்தவமான மரங்கள்போலிருக்கும்படி செய்கிறார்கள். இந்த வண்டிகள் மெதுவாய்ப் போவதால் ஆகாய விமானங்களிலிருநது பார்ப்பவர்களுக்கு, இவைகள் பக்கத்திலுள்ள காட்டைச் சேர்ந்த மரங்களென்றே தோன்றும்.

ஸாதாரணமாய் ஆகாய விமானிகளுக்குக் குதிரைப்படைக்கும் குதிரை பீரங்கிப்படைக்கும் வித்யாஸம் தெரிவதில்லை. மேற்சொன்ன வண்டிகளில் பெரிய பீரங்கிகளை ஏற்றி அவைகளை இலைகளுள்ள மரக்கிளைகளால் மறைத்துவிட்டால் அவைகள் ஆகாயகமனிகளுக்குத் தென்படாவென்று சொல்லவும வேண்டுமா?

ஆகாய விமானிகளை ஏமாற்ற ஏற்பாடு செய்ய வேண்டியது அவச்யமென்பதை ராணுவ அதிகாரிகள் பல வர்ஷங்களாக அறிந்திருக்கிறார்கள். ஜெர்மனியில ஸைன்யங்களுக்குள் போலிச்சண்டை நடத்தும்போது, துருப்புகளை, ஆகாயவிமானிகளின் கண்ணுக்குத தெரியாமல் மறைத்துக் கொள்ளும்படி பழக்குகிறார்களாம். ஸைன்யப் பிரிவுகளைத் தக்கபடி பிரித்து நிறுத்துவதாலும், புதர்களிலும், தோப்புகளிலும் மறைந்துகொள்வதாலும் ஆகாயவிமானிகளை ஏமாற்றிவிடலாம்.

ராணுவ அதிகாரிகள வெண்மையான அல்லது தூரத்திலிருந்து பார்த்தால் நன்றாய்த் தெரியக்கூடிய வர்ணமுள்ள குதிரைகளை வெகுவாய் வாங்க ப்ரியப்படுவதில்லை. ஆனால் இவர்களுக்குப் பிடித்த வர்ணங்களுள்ள குதிரைகளின் தொகை ரொம்பக் குறைவாயிருக்குமாதலால், அநேக ஸமயங்களில் அவர்களுக்கு பிடிக்காத வர்ணங்களுள்ள குதிரைகளை வாங்கவேண்டி

யிருக்கும் ஜெர்மானியர்கள் தாங்கள் வாங்கும் வெள்ளைக் குதிரைகளின் மயிர்களுக்கு தக்க சாயம் பூசிவைக்கிறார்களாம் குளிர்காலங்களில் பனிக்கட்டியுள்ள ப்ரதேசங்களில் போகும் போது, குதிரைகள் இருப்பது எதிரிகளுக்குத் தெரியாமலிருக்க ராணுவக் குதிரைகளுக்கு வெண்மை நிறம் பூசுவதுமுண்டு.

புகையில்லாத வெடிமருந்து உபயோகத்துக்கு வந்ததில் எதிரிகளை ஏமாற்றுவது ஸுலபமாயிற்று. இந்த மருந்து இல்லாமல் புகையுண்டாக்கும் வெடிமருந்தை உபயோகிப்பதென்றிருந்தால், அந்தப் புகையைக்கொண்டு பீரங்கியிருக்குமிடத்தை யறிந்துவிடலாமாதலால், பீரங்கிகளை எதிரியின் கண்ணுக்குத் தெரியாமல் மறைத்துவைப்பதால் ப்ரயோஜனமேற்படாது. இப்போது பீரங்கிகளை மரங்களால் மறைத்து வைப்பதால் எதிரிகள் அவைகளைக் கண்டுபிடிப்பது முடிவதில்லை. தக்கபடி அடர்த்தியாய் மரங்களைப்போட்டு மறைத்தால் பீரங்கிவெடி தீர்க்கும்போது ஸ்வல்ப நேரத்துக்கு உண்டாகும் வெளிச்சமும் எதிரிக்குத் தெரியாது.

கடல் யுத்தத்திலும எதிரிகளை ஏமாற்ற உபாயங்களைக் கையாடுகிறார்கள். முன் காலத்தில் மலேயா நாட்டுக் கடல்கொள்ளைக்காரர்கள் இங்க்லீஷ் கப்பல்களைக் கொள்ளையிடாமலிருப்பதற்காக, அந்தக் கப்பல்களின் வெளிப்பக்கத்தில் பீரங்கி த்வாரங்கள் இருப்பதுபோல் சித்ரங்கள வரைந்து, அவைகளைப் பார்த்தால் யுத்தக் கப்பல்கள போலிருக்கும்படி செய்வார்களாம். மலேயா நாட்டுக் கடல் கொள்ளைக்காரர்கள் யுத்தக்கப்பல்களென்று எண்ணி அவைகளை ஒன்றுஞ் செய்யாமல் ஓடிவிடுவார்களாம்.

தற்காலத்திலும யுத்தக்கப்பல்களில் சில எதிரிகளை ஏமாற்ற தந்த்ரம் செய்கின்றன. 'எம்டன்' என்னும ஜெர்மன் க்ரூஸர் கப்பல் அரபிக்கடலிலும், வங்காளக்குடாக் கடலிலும வ்யாபாரக் கப்பல்களை மூழ்கடித்து வந்ததல்லவா? அதைப் பிடிப்பதற்காகப் பல யுத்தக்கப்பல்கள் முயற்சி செய்தன. அப்போது அதன் காப்டன் தனது கப்பலுக்கு மூன்று புகைப்போக்கிக் குழாய்கள் இருப்பதைக்கொண்டு எதிரிக்கப்பல்கள் அதைக் கண்டுபிடித்து விடக்கூடுமென்று நினைத்து, இன்னொரு போலி புகைப்போக்கிக் குழாயை கப்பலின்மேல் மற்ற குழாய்களுடன் வைத்துவிட்டார். இதனால் எதிரிக்கப்பல்கள் 'எம்டனை' அறிந்துகொள்வது கஷ்டமாயிற்றாம்.

'கானிக்ஸ்பர்க்' என்ற ஜெர்மன் க்ரூஸரும் எதிரிக்கப்பல்களை ஏமாற்றி வந்ததாம். அது கிழக்கு ஆப்ரிக்காவில் வ்யாபாரக் கப்பல்களை மூழ்கடித்துத் திரிந்துவந்தது. அதைப் பிடிப்பதற்காக ப்ரிட்டிஷ் கப்பல் படை அதிகாரிகள் வேகமாய்ப் போகக்கூடிய சில யுத்தக்கப்பல்களை கிழக்கு ஆப்ரிக்காவுக்கு அனுப்பினார்கள். 'கானிக்ஸ்பர்க்'கானது ஜெர்மன் கிழக்கு ஆப்ரிக்காவில் ருபிஜி நதியில கடலிலிருந்து ஆறுமைல் தூரத்தில ஆழம் குறைவான இடத்தில் மறைந்துகொண்டிருந்தது. ப்ரிட்டிஷ் யுத்த க்ரூஸர்களில் ஒன்றாகிய 'சாத்தம்' அது இருக்குமிடமறிந்து அதனருகில் போகமுயன்றது. ஆனால் ருபிஜி நதி ரொம்ப ஆழமாயில்லாததால் அது நதி வழியாக 'கானிக்ஸ்பர்க்'கினிடம் போக முடியவில்லை 'சாத்தம்' கடலிலிருந்துகொண்டே கானிக்ஸ்பர்க்கை நோக்கி பீரங்கியால் தாக்கினதில் பீரங்கிக்குண்டுகள் ரொம்பதூரம் போகவில்லை. குண்டுகள் 'கானிக்ஸ்பர்க்'கின பக்கத்தில் விழுந்தன. உடனே 'கானிக்ஸ்பர்க்'கானது இன்னும ப-மைல் தூரம் நதியை எதிர்த்துச் சென்று, அங்கே தங்கிற்று. அது அங்கேயிருப்பதை ஒருவரும் அறிந்து கொள்ளாமலிருப்பதற்காக அதிலிருந்த வீரர்கள பாய்மரங்களின்மேல் பனைமட்டைகளைக் கட்டிவிட்டார்கள. ஸமுத்ர ஜலத்தின மட்டம உயர்ந்து அதனால் 'சாத்தம' கப்பல நதியில் போக முடிந்தபோது, 'கானிக்ஸ்பர்க' கப்பல் எங்கிருந்ததென்பதைக் கண்டுபிடிப்பது கஷ்டமாயிற்றாம். ஒருக்கால 'கானிக்ஸ்பர்க்' கப்பல் தூர இருந்து பார்த்தவர்களுக்கு, நதியின நடுவில் பனைமரங்களுள்ள ஒரு சிறு தீவுபோல தோன்றியிருக்கலாம்

## WAR USES OF THE MOTORCYCLE.

## யுத்தத்தில் மோட்டார் ஸைக்கிளின் உபயோகங்கள்.

தற்போது நடந்துவரும் ஐரோப்பிய யுத்தத்தில் மோட்டார் ஸைக்கிளானது ரொம்ப உபயோகமுள்ளதாக இருந்துவருகிறது. அது அநேக வேலைகளுக்கு உபயோகப்பட்டு வருகிறது. முன்காலத்தில், எதிரிகளின் இருப்பிடத்தையும் அவர்களுடைய நடமாட்டத்தையும் அறிந்துவர குதிரைப்படையை அனுப்பி வந்தார்கள். தற்போது சிலஸமயங்களில் மோட்டார் ஸைக்கில் வீரர்களை இந்த வேலைக்கு அனுப்புகிறார்கள். மோட்டார் ஸைக்கிள் குதிரையை விட ரொம்ப வேகமாய்ப்போகும். அதோடு மோட்டார் ஸைக்கிளில் இன்னொரு ஸௌகர்யமும் இருக்கிறது. குதிரைப்படை வீரர்கள் எதிரியிருக்கும் இடத்தை நோக்கிப் போகையில் சில வேளைகளில் அவர்கள் குதிரைகளை விட்டிறங்கி, எதிரிகளுக்குத் தெரியாமல் படுத்துத் தவழ்ந்துகொண்டோ அல்லது வேறு விதமாய் மறைந்துகொண்டோ போக நேரிடும்போது, அந்தக்குதிரைகளை ஓரிடத்தில் விட்டுவிட்டு, அவைகளுக்குக் காவலாக தங்களில் சிலரையும் நிறுத்திவிட்டுப் போகவேண்டும். இதனால், எதிரிகளை நோக்கிப் போகும் வீரர்களின் தொகை குறைந்து போகிறது. குதிரைகளை மறைத்து வைப்பதும் அநேக ஸமயங்களில் கஷ்டமாகிறது. மோட்டார் ஸைக்கிள வீரர்களுக்கு இவ்வித தொந்தரவு ஒன்றும் இல்லை. அவர்கள் தங்களுடைய வண்டிகளை நினைத்த இடத்தில் கீழே படுக்க வைக்கலாம், அல்லது மறைவான இடமிருந்தால் அங்கே அவைகளைசேர்த்து வைத்திருந்து, வேலை முடிந்ததும் அங்கே வந்து எடுத்துக் கொண்டு போகலாம். மேலும் 100-மோட்டார் ஸைக்கிளை மறைத்து வைப்பதற்கு, ஒரு டஜன் குதிரைகளுக்கு வேண்டிய இடத்தையும விடக் குறைவான இடம்போதும். மோட்டார் ஸைக்கிளை ஒருவரும் காவல காத்துக்கொண்டிருக்க வேண்டியதுமில்லை.

மோட்டார் ஸைக்கிள்காரர்கள் இப்போது குதிரை வீரர்கள் செய்துவந்த வேலைகளெல்லாவற்றையும் செய்து வருகிறார்கள். துருப்புகளின் ஒரு பாகத்திலிருந்து இன்னொரு பாகத்துக்கு ஸமாசாரம் கொண்டு போகிறார்கள். யுத்தம் நடக்குமிடத்துக்குப் பின்னாலுள்ள ரோடுகளில் இவர்கள் போலீஸ்காரர்களாக இருந்து வருகிறார்கள். மோட்டார் ஸாமான் வண்டிகள் ஓரிடத்திலிருந்து இன்னொரு இடத்துக்குமபோகும்போது, இந்த ஸைக்கிள்காரர்கள் அவைகளுக்கு முன்னால் போய் பாலங்கள் சரியாயிருக்கின்றனவாவென்றும், ரோட்டில் ஏதாவது தடைகள் இருக்கின்றனவாவென்றும் பார்த்துவருகிறார்கள்.

மோட்டார் ஸைக்கிள்ஸாதாரணமாக மணிக்கு 40-அல்லது 60-மைல் வேகம் போகக்கூடும். குதிரை வீரர்கள் இவ்வளவு வேகம் போவதென்பது முடியாது. மோட்டார் ஸைக்கிளில் ஒரு அஸௌகர்யம் மாத்ரம் உண்டு. அதாவது ரஸ்தாக்கள் ரொம்ப கெடுதலாயிருந்தாலும், மரங்கள் அல்லது தந்திக் கம்பங்கள் ரஸ்தாவின் குறுக்கே விழுந்து வழியை அடைத்து விட்டாலும், மோட்டார் ஸைக்கிள போவதுகடினம்.

**ஸைட்காருள்ள மோட்டார் ஸைக்கிள்.—** சில மோட்டார் ஸைக்கிள்களின் பக்கவாட்டில் ஒருவர் அல்லது இரண்டு பேர் உட்காரக்கூடிய ஒரு வண்டி இணைத்திருப்பதை அநேகர் பார்த்திருக்கலாம். இந்தப் பக்கவாட்டு வண்டிக்கு ஸைட் கார் என்று பெயர். போர்க்களத்தில் மோட்டார் ஸைக்கிள் ஸைட் காரானது ரொம்ப உபயோகமுள்ளதாயிருக்கிறது. மோட்டார் ஸைக்கிள்காரர் ஸைட்காரில் சில்லரை ஸாமான்களை ஓரிடத்திலிருந்து மற்றவிடத்துக்குக் கொண்டுபோவதேயன்றி, போர்க்களத்திலுள்ள வீரர்களையும், ஆபீஸர்களையும் வேண்டும்

போது ஏற்றிக்கொண்டு போகலாம். ஒரு ப்ரெஞ்ச் மோட்டார் ஸைக்கிள்காரர் தமது நாயை ஸைட்காரில் ஏற்றிக்கொண்டு எதிரிகளின் நிலைமையை அறிந்துவரப் போவதுண்டாம். ஏதாவது முக்யமான செய்தியை ராணுவ அதிகாரிகளுக்கு அனுப்பவேண்டியிருந்து, தமது வேலையைச் செய்துகொண்டே போகவேண்டியிருந்தால் தெரிவிக்க வேண்டிய விஷயத்தை ஒரு துண்டுக் கடுதாசியில் எழுதித் தமது நாயின் கழுத்துப்பட்டையில் கட்டி, அனுப்பி விடுவாராம். நாயானது அதிகாரிகளிருக்கு மிடத்துக்கு ஓடிப்போய் கடிதத்தைக் கொடுக்கிறது.

ஸைட்காரில் மெஷீன் பீரங்கிகள்.—ஸைட்காரில் மெஷீன் பீரங்கிகளை அமைத்து போரில் உபயோகிக்கிறார்கள். அப்போது பீரங்கி வைப்பதற்கும், சுடுபவா உட்காருவதற்கும் போதுமான இடம் இருக்கும்படி ஸைட்காரைக் கட்டுகிறார்கள். பீரங்கி வைக்கும் மோட்டார் ஸைக்கிளில் இரண்டுபேர்கள் ஏறிச் செல்வார்கள். ஒருவர் வண்டியை ஓட்டுவார். இன்னொருவர் ஸைட்காரில் உட்கார்ந்துகொண்டு பீரங்கியைச் சுடுவார். மெஷீன் பீரங்கிகள் நிமிஷத்துக்கு ஸுமார் 450 தடவை வீதம் வெடிதீர்க்கும். சில ஸமயங்களில் மெஷீன் பீரங்கிகளை ஸைட்காரில் வைத்துக்கொண்டு உபயோகிக்காமல் தரையிலோ அல்லது வேறு ஸௌகர்யமான இடங்களிலோ வைத்து உபயோகிக்கவேண்டியிருக்கும். அதற்காக பீரங்கியை வைப்பதற்கு ஏற்ற மடக்கு முக்காலியையும ஸைட்காரில் கொண்டுபோவார்கள் இங்கிலீஷ்காரர்கள் உபயோகிக்கும் மோட்டார் ஸைக்கிள்களில், பீரங்கியை உபயோகிப்பவனுக்கும் ஸைக்கிளை ஓட்டுபவனுக்கும் எதிரிகளினுடைய துப்பாக்கிகளால் யாதொரு கெடுதலும் ஏற்படாதபடி தக்க இரும்பு மறைப்புகள் அமைக்கப்பட்டிருக்கின்றன. ஸைக்கிளின் சக்கரங்களை குண்டுகள் பொத்துவிடாதபடி தக்க மறைப்புகளும் போட்டிருக்கிறார்கள். சில மாஸங்களுக்கு முன்னால் இங்கிலண்டிலிருந்து 18-மோட்டார் மெஷின் பீரங்கி வண்டிகள் போர்முகத்துக்குப் போயினவாம. இவைகளுள் ஆறில் மெஷின் பீரங்கிகளும, இன்னும் ஆறில் அதிகப்படியாக பீரங்கி பீடங்களும், மற்ற ஆறில் குண்டு வகையறாக்களும் ஏற்றி யிருந்தனவாம்.

ஸைட்காரும் காயம்பட்டவர்களும்.—மோட்டார் ஸைக்கிள்கள் ஸைன்யங்களுக்கு உதவி செய்வதேயல்லாமல், யுத்த ஆஸ்பத்திரிகளுக்கும் உதவி செய்கின்றன. மோட்டார் ஸைக்கிளின் ஸைட்காரில இரண்டு நோயாளிகள் படுத்துக்கொள்வதற் கேற்றதாக இரண்டு படுக்கைகள் அமைத்திருக்கிறார்கள். இந்த இரண்டு படுக்கைகளிலும் இரண்டு வீரர்கள் படுத்துக் கொள்ளலாம். மழை பெய்தால் நோயாளிகள் நனையாதபடி படுக்கைகள்மேல் தக்க மறைவுகளும் கட்டியிருக்கிறார்கள். அதோடு, வண்டியோட்டுபவரும் அவருக்கு உதவியாக ஒரு ஸிப்பந்தியும் உட்காருவதற்கும் இடம் அமைக்கிறார்கள். நோயாளிகளைக் கொண்டுபோக மோட்டார் காரைவிட மோட்டார் ஸைக்கிள் அதிக ஸௌகர்யமுள்ளதா யிருக்கிறதாம. மோட்டார் ஸைக்கிளை ஸ்வல்ப அகலமுள்ள பாதைகளிலும் திருப்பி ஓட்டலாம். மோட்டார்கார் போகுமிடங்களிலெல்லாம் ஸைக்கிள் போவதோடு, மோட்டார்கார் போகமுடியாத அநேக இடங்களிலும் அது தாராளமாய்ப் போகும். மோட்டார் ஸைக்கிள் போவதைத் தடுக்கக்கூடிய ஸாமானிய தடைகளை மோட்டார் ஸைக்கிளை ஓட்டுபவரும் அவருடன் கூடப்போகும் ஸிப்பந்தியும் அப்புறப்படுத்திவிட்டு ஸைக்கிளை ஓட்டிக்கொண்டு போகலாம். ஸைக்கிளானது மோட்டார் காரைப்போல சேறான இடங்களில் அகப்பட்டுக்கொள்வது ரொம்ப குறைவு. அப்படி சேற்

றில் அகப்பட்டுக் கொண்டாலும், ஸைக்கிள் ஓட்டுபவரும் ஸிப்பந்தியும் சேர்த்துகொண்டு ஸைக்கிளை சேற்றிலிருந்து தள்ளிக்கொண்டு போக முடியும். மேலும் மோட்டார் ஸைக்கிளுக்குப் பிடிக்கும் எண்ணெய்ச் செலவும் ரொம்பகுறைவு. மோட்டார்காருக்கு ஒரு மைலுக்கு எவ்வளவு எண்ணெய் பிடிக்குமோ அதில் கால் பாகந்தான் மோட்டார் ஸைக்கிளுக்குப் பிடிக்கிறதாம்.

## OBSERVATION.

BY K. THIRUVENGADA NAYAKER.

## உற்று நோக்குதல்.

கல்விக்கு கவனித்தல் அல்லது உற்றுநோக்குதல் என்பது அவசியமாயிருக்கிறது. கவனித்தல் என்பதும் ஓர்வித படிப்பேயாம். எவ்விதமெனில் புஸ்தகங்களிற் படித்தறியாத அநேக விஷயங்களை கவனித்தலினால் அறிகிறார்கள். கவனித்தல் அல்லது உற்றுப்பார்த்தல் என்ற விஷயத்தை கடைப்பிடித்துள்ள ஒருவனுக்கு பிறர் சொல்லவேண்டிய விஷயங்கள் ஒன்றுமேயிராது. அவ்வித கவனித்தல் என்பதா லுண்டாகும் தேர்ச்சியை அடைய நாம பெரியவர்களானபின் தான் ப்ரயத்தனம் செய்யவேண்டுமென்பது கருத்தல்ல. அவ்வித தேர்ச்சி பயன் தரவுமாட்டாது. ஓர் சிறு செடியானது கோணலாய் முளைத்திருந்தால் அதை சிறு வயதிலேயே நிமிர்த்தவேண்டுமே யல்லாமல் பெரிய மரமாய் வளர்ந்தபின் அவ்விதம் செய்ய இயலாது. அதுபோலவே கவனித்தல் அல்லது உற்றுநோக்குதல் என்ற அப்யாஸத்தை பிள்ளைகள் சிறு குழந்தைகளா யிருக்கும்போதே பெற்றோர்கள் தகுந்த விதமாய் அப்பியஸிக்கச் செய்யவேண்டும்.

நம்முடன் பேசத்தெரியாத ஓர் குழந்தையின் எதிரில் ஓர் ரோஜாப்பூவை வைத்து இதை கவனி என்றால் அதற்கென்ன தெரியும் என்று ஸந்தேகங் கொள்ளலாகாது. சிறு குழந்தைக்கு பேசத்தெரியா திருந்தபோதிலும், அதன் எதிரில் ஒரு பூவைக்கொண்டுபோனால், அதைக் கண்ட குழந்தை எவ்வளவு ஆவலுடன் எட்ட முயல்கிறது, பாருங்கள். அதை அக்குழந்தையினிடம் கொடுத்தோமானால் மூக்கில் வைத்தும், பல்லினால் கடித்தும், சப்பியும், தரையில் தேய்த்தும், பிய்த்தும் பார்க்கிறதன்றோ! அவை யனைத்தும் குழந்தைக்குள்ள உய்த்துணரும் சக்தியை வெளிப்படுத்தவில்லையா? அதுவன்றி சிறு குழந்தையினருகில் அதன் தாயேனுந் தந்தையேனும் போனால் எவ்வளவு ஆவலுடன் திரும்பித் திரும்பி பார்க்க முயல்கிறது.

சிறு குழந்தைக்கு உற்றுநோக்கும் சக்தி யில்லாவிட்டால் தொட்டிலில் அழுதுக்கொண்டிருக்கும் குழந்தையின் எதிரில் பல வர்ணங்களுடைய துணிகளாற் செய்யப்பட்ட கிளிகளையாவது பல குண்டுகளையாவது கட்டினால், குழந்தை தன் அழுகையை நிறுத்தி அப்பொருள்களை உற்றுநோக்குமோ?

சிறு குழந்தை நம்மைப்போல் தன் மனதை பல காரியங்களிற் சிதறவிடாமல் ஒருமையோ டிருக்கிறது. அப்பொழுதுதான் அவற்றிற்கு உற்றுநோக்கும் சக்தி அதிகமாய் அமைந்திருக்கும்.

இன்னும் குழந்தைகளுக்கு பிறந்த 36-மாஸங்கள் வரையில் பல விஷயங்களை கவனித்து உணர்ந்துகொள்ளும் சக்தி ஏற்பட்டிருப்பதாக டாக்டர் மைல்ஸ் என்பவரும் மற்றும் பல அறிவுடையோரும் சொல்லியிருக்கிறார்கள். இவற்றை நன்கு யோசித்தால் அவ்விதமே குழந்தைகளிடம் தோற்றுகின்றமையால் நாம் நமது சிறுவர்களது குழந்தைப்பருவ முதற்கொண்டே உற்றுநோக்குதலை விருத்திசெய்து வரவேண்டுமென் றேற்படுகிறது. அப்படி விருத்தி செய்வதற்கு நம் வீடுகளில் பல மிருகங்கள், பக்ஷிகள் அல்லது அவற்றின் படங்கள், பூஞ்செடிகள், பல வர்ணங்களா லமைந்த தேவதைகளின் படங்கள் முதலியவற்றை வைத்து அவைகளை கவனிக்கச்செய்தல் நலமாகும்.

அவ்விதம் ஏழைகளாகிய பலர் செய்ய இயலாதாகையால் சிறு குழந்தைகள் விசேஷமாய்ப் பழகும் எலிமென்டரி பாடசாலைகளில் மேற்சொன்னவற்றுடன் தோட்டம் முதலியவற்றையும் வைத்து பிள்ளைகளின் அறிவைத் தூண்ட வேண்டியது அவச்யமாகும்.

இன்னும், குழந்தைகளை மண், தூசு, குப்பை முதலிய அசுத்தமான இடங்களில் விளையாட விடலாகாது. அப்படி விடுவதால் தேகத்தில் அழுக்குப்படிவது மன்றி சிறு குழந்தைகளுள் சச்சரவும் ஏற்படுகிறது. ஆனால் நல்ல காற்று வீசும்படியானதும் பசும்புற்கள் நிறைந்ததுமான மைதானங்களுக்கு அழைத்துப்போய் தினந்தோறும் ஒருமணி நேரமேனும் விளையாட விட வேண்டும். அப்படிவிடுகையில் பக்கங்களி லிருக்கும் மரங்களையும், புற் பூண்டு செடிகொடி முதலியவற்றையும், இன்னும் பலவர்ணங்களமைந்த பக்ஷிகளையும் அவற்றின் குரலோசையையும் ஆகாயத்திலுண்டாகும் மேகக்கூட்டங்களையும் காண்பித்து, அவற்றைப் பற்றிய பொது விஷயங்களை அவ்வபோது போதித்துவருதல் நலம். இதன் பொருட்டே கல்வி யிலாகா அதிகாரிகள் பிள்ளைகளை வெளியில் கூட்டிக்கொண்டு (எஸ்கர்ஷன்) போகத்தூண்டுகிறார்கள்.

கவனிப்பதற்கும் எஸ்கர்ஷன் போவதற்கும் தகுதியானவைகளாவன,—

அழகான தோட்டங்கள், பசுமையான வயல்கள், செடிகொடி புற்பூண்டு மரங்களடர்ந்த குன்றுகள், நீரோடைகள், தாமரை அல்லி இவைகள் நிறைந்திருக்கும குளங்கள், ஏரிகள், ஆறுகள், (அருகிலிருந்தால்) கடற்கரை, பக்ஷிகள் வாஸஞ் செய்யும தோப்புகள், பாடசாலையிருக்கும் க்ராமம் அல்லது பட்டணத்திலிருக்கும் பெயர் பெற்ற கோவில்கள், பெரிய கட்டிடங்கள், க்ராமச்சாவடி, போலீஸ்சாவடி, தபால் ஆபீஸ், ரெயில்வே ஸ்டேஷன் இவைகளே.

இப்படிக் கூட்டிக்கொண்டு போவதன் பயன் யாது?

ஓர் கோவிலுக்கு குழந்தைகளை அழைத்துப் போவதாக வைத்துக்கொள்வோம். அங்கு மதிற்சுவர்களைப் பிளந்து செடிகளின் வேர்கள் ஊடுருவிச் செல்வதைக்காட்டி "பாரைக்கு நெக்குவிடாப் பாறை பசுமரத்தின் வேருக்கு நெக்குவிடும்" என்ற செய்யுளை வெகு ஸுலபமாய் போதிக்க ஹேதுவாகும்.

உற்றுநோக்குதல் என்பதால் அடைந்த நன்மைகளுக்காக இரண்டொரு த்ருஷ்டாந்தங்களை இங்கு வெளியிடுவோம். ப்ரான்ஸ் தேசத்தில் பீட்டர் என்ற ஒருவாலிபன் சிறு வயஸுமுதல் கவனிப்பதிலேயே தன்மனத்தைச் செலுத்தியிருந்தான். அவன் இரவில் படுத்துறங்கும் ஸமயத்தில் அடிக்கடி வெளியே எழுந்துபோய் ஆகாயத்திலிருக்கும் நக்ஷத்ரங்கள் முதலியவற்றை கவனித்துவருவான். ஒருநாள் மாலையில் அவனும் மற்றுஞ் சில பிள்ளைகளும் வெளியே உலாவச்சென்றார்கள். அந்த ஸமயம் பாலர்களுக்குள் ஓர் விவாதம் ஏற்பட்டது. அது யாதெனில் 'ஆகாயத்தில் ஓடுவது சந்த்ரனா, மேகங்களா?' என்பதே! கடைசியாய் பையன்கள் ஓடுவது சந்த்ரனே என்றார்கள். அதுகேட்ட பீட்டரோ ஓடுவதுமேகங்களே என்று ஸாதித்தான். அதை நிரூபிக்கவேண்டினார்கள். அவ்வாறே ஓர் வ்ருக்ஷத்தின்கீழ் அவர்களை நிறுத்தி மரக்கிளைகளில் இலைகளுக்கிடையிலுள்ள த்வாரத்தின் மூலமாய் சந்த்ரனை கவனிக்கும்படி செய்து ஓடுவது மேகங்களே என விளக்கினான். அவனுக்கு அவ்வித யுக்தியைக்கொடுத்தது கவனித்தலே.

ராஜா ரவிவர்மா அநேக நேர்த்தியான படங்கள் எழுதியதற்கு காரணம், அவருக்கும் கவனித்துப் பார்க்கும் வழக்கம் பயன்பட்டதென்பதேயென்று தெரிகிறது.

இத்தகைய சிறப்பு வாய்ந்த கவனித்தல் அல்லது உற்று நோக்கலை சிறு குழந்தைகளின் உபாத்யாயர்கள் கடைப்பிடித்து தங்களிடம் ஒப்புவிக்கப்படும் குழந்தைகளையும் அப்பயிலிக்கச் செய்வது அவர்களுடைய முக்ய கடமையாகும்.

கே. திருவேங்கட நாயக்கர்.

# THE DUMB ACCUSER.

BY R. HARI ROW.

## ஒரு ம்ருகம் குற்றத்தை வெளிப்படுத்தியது.

அநேக வர்ஷங்களுக்குமுன் ஐரோப்பா கண்டத்திலுள்ள ப்ரான்ஸ் என்னும் தேசத்தில் ஐந்தாவது 'சார்லஸ்,' என்ற அரசனொருவன் அரசாட்சி செய்துவந்தான். அவனது அரண்மனையில் அவனை எவ்வகைத் திங்கினின்றும் காப்பாற்றிவரும் மெய்க் காவலர்கள் (Body-guards) அநேகரில் இருவர் பகையாளிகள். அவர்களிலொருவன் 'மாகேர்' (Macair) என்பவன். மற்றொருவன் 'ஆப்ரே' (Aubrey) என்பவன். 'மாகேர்,' 'ஆப்ரே' யைக்கண்டால், சுடர்விட்டுக்கொண்டெரியும் நெருப்பு, காற்று அடித்தால் எப்படி எரியுமோ, அவ்வாறே நெருப்பில்லாமலேயே எரிவான். அவனுடைய பகையானது கடைசியில் 'ஆப்ரே'யைக் கொன்றுவிடும்படி ஓர் துர்ப்புத்தியை அவனதுமனதில் தூண்டிவிட்டது. ஆகையால், 'மாகேர்' தனது பகையாளியைக் கொல்ல, எப்பொழுது சரியான ஸமயம் வாய்க்கும் என்று வெகு ஆவலோடு காத்துக்கொண்டிருந்தான்.

அவனுக்கேற்ப ஒரு ஸமயமும் வாய்த்தது. ஒருநாள் 'ஆப்ரே' தனது நாயையும் அழைத்துக்கொண்டு அருகிலுள்ள காட்டில் வேட்டையாடப் போயிருந்தான். அப்பொழுது, (ஐயோ பாவம்! 'ஆப்ரே'யிக்கு வாழ்நாட்கள் கழிந்துவிட்டனபோலும்! அவனது விதியே அவனை காட்டிற்கு வேட்டையாடத் துரத்திவிட்டது போலும்! விதியின்பயனை வெல்ல யாரால் முடியும்!) 'ஆப்ரே'யிக்கு எதிரியாகிய 'மாகேர்' அவன் எதிரில் தோன்றி திடீரென்று தனது கூர்மையான வாளுக்கு 'ஆப்ரே'யை இரையாக்கி விட்டான். பிறகு, அதே இடத்தில் ஒரு பள்ளந்தோண்டி, அதில அவனைப் புதைத்துவிட்டுத் தனது இருப்பிடத்தை அடைந்தான் 'மாகேர்.' இதையெல்லாம் பார்த்துக்கொண்டிருந்தது 'ஆப்ரே'யின் நாய். அதனது கண்களோ கோபத்தினால் நெருப்புப்பொரி பறந்தன. அதன் வாய்க்கோ வாய்ப்பூட்டு போட்டிருந்தது (இதனாலேயே நாய் எவ்வளவு ஸாது என்று தெரிந்து கொள்ளலாம்!).

'ஐயோ! நம்பால் நமது யஜமானனைத் திங்கினின்றும் தப்புவிக்க முடியவில்லையே!' என்று தவித்தது. அந்த வாய்ப்பூட்டு மாத்ரம் இல்லாவிட்டால், 'மாகேர்' மேல் விழுந்து, அவனைப் பிராண்டி, தனது விஷப்பற்களினால் அவனைக் கடித்து, அங்கேயே பிணம் புரட்டியிருக்கும்.

இந்த அலங்கோலத்தைப்பார்த்து விட்டு, நாய், இறந்து போன தனது யஜமானன் ஸ்நேகிதனொருவன் வீட்டுச் சமயலறைக்கு ஓட்டமாய் ஓடிற்று. அங்கே வேண்டியளவு உண்ட பிறகு தனது யஜமானன் புதைக்கப்பட்ட இடத்திற்கு ஓட்டமாய் ஓடி, அங்கே உட்கார்ந்துகொண்டு, அதிக விஸனமாய் ஊளையிட்டுக்கொண்டிருந்தது. இந்த மாதிரி தினமும் யஜமானன் ஸ்நேகிதன் வீட்டில் சாப்பிடுவதும், பிறகு ஓட்டமாய் ஓடி யஜமானன் ஸமாதியில் போய் உட்காருவதுமாயிருந்தது.

'தினமும், சாப்பிடும் வேளைக்கு சரியாய் வருவதும், உண்டியான பிறகு ஒரே திசையில் ஓடுவதுமாயிருக்கிறதே! இது என்னவாயிருக்கக்கூடும்! ஒரு நாள், நாமும் அதைப் பின்தொடர்ந்து ஸமாசாரம் என்னவென்பதைத் தெரிந்துகொண்டு வருவோம்' என்ற எண்ணம் 'ஆப்ரே'யின் நண்பன் மனதில் பிறந்தது.

ஒருநாள் வழக்கம்போலவே உண்டியான பிறகு நாய் ஓடும்பொழுது 'ஆப்ரே'யின் நண்பனும் அதைப் பின்தொடர்ந்து சென்றான். அது வேகமாய் ஓடி 'ஆப்ரே' புதைக்கப்பட்ட இடத்தில் போய் நின்று, அழுவதுபோல் ஊளையிட்டுக்கொண்டு மண்ணைத் தோண்டிற்று, 'ஓஹோ!

ஏதோ விசேஷமிருக்கிறது போலும்!' என்று எண்ணி 'ஆப்ரே'யின் நண்பன் அந்த இடத்தை உடனே தோண்டிப் பார்க்கையில், ரத்தக்கறையுடன் ஒரு ப்ரேதம் அகப்பட்டது. அதை நன்றாய் உற்று நோக்குகையில் தனது நண்பன் 'ஆப்ரே'யினது ப்ரேதமே என்று தெரிந்து கொண்டான்.

'ஆப்ரே' இருந்தாற்போலிருந்து மறைந்த காரணம் ஒருவருக்கும் தெரியவில்லை. 'என்னடா! நேற்று அரண்மனையில் இருந்தானே! இப்பொழுது எங்கே போயிருப்பான்?' என்றானொருவன். மற்றொருவன், 'முந்தாநாள் கடைத்தெருவில் பார்த்தேனே, நான்' என்றான். அதற்குள் மற்றொருவன், 'நீ முந்தாநாள் விஷயமல்லவா சொல்லுகிறாய். நேற்றையதினம் அவன் தனது நாயுடன் வேட்டையாடப் போனதைப் பார்த்தேனடா, நான்!' என்றான். கடைசியில், 'வேட்டையில்தான் 'ஆப்ரே'யிக்கு ஏதாவது தீங்கு நேர்ந்திருக்கக்கூடும்' என்று தீர்மானித்தார்கள்.

இப்படியிருக்க, கொலையாளியாகிய 'மாகேர்' தெருவில்போய்க்கொண்டிருப்பதை 'ஆப்ரே'யின் நாய் கண்டால், அது உடனே அவனைப் பார்த்துக் குலைத்து, அவன்மேல் பாய யத்தனிக்கும். ஒருவேளை இவன்தான் ஏதாவது 'ஆப்ரே'யிக்குத் தீங்கு இழைத்திருக்கக் கூடுமோ! தெருவில் இத்தனைபேர் போய்க்கொண்டிருக்க அவர்களையெல்லாம் விட்டு விட்டு இவனையே பார்த்துப் பிடித்து, உபத்ரவம் செய்ய யத்தனிக்கிறதே" என்று ஸந்தேகிப்பதற்கு இடங்கொடுத்தது.

இவையெல்லாம் அரசன் காதுக்கெட்டின. உண்மையைக் கண்டறியும் பொருட்டு, ஒரு திறந்த வெளியில், 'மாகேரையும,' 'ஆப்ரே'யின் நாயையும் சண்டைக்கு நிறுத்தினார்கள். இந்த வேடிக்கையைப் பார்ப்பதற்காக திரள் திரளான ஜனங்கள் வந்து கூடினார்கள். நாயானது அதிக தொந்திரவு செய்தால் அதை அடித்து விலக்குவதற்காக 'மாகேர்' கையில் ஒரு தடியைக் கொடுத்திருந்தார்கள். அதுபோலவே, நாய்க்கும், 'மாகேர்' அதிகமாய் அடித்தால், ஒளிந்துகொள்வதற்காக ஓர் பீப்பாய் கொடுத்திருந்தார்கள்.

நாயின் ஸூக்ஷ்ம புத்தியே புத்தி. தன்னையும் மாகேரையும் இன்ன காரணத்தால் நிறுத்தியிருக்கிறார்கள் என்றும், தனது யஜமானனைக் கொன்ற பாதகனை பழிக்குப் பழிவாங்க இதுதான் ஸமயம் என்றும் எண்ணி அவன்மேல் திடீரென்று பாய்ந்தது.

இரண்டு மூன்று தரம் 'மாகேர்' நாயை விலக்கிப்பார்த்தான். முடியவேயில்லை. ஒரே குரங்குப்பிடியாய் அவன் மோவாய்க்கட்டையைப்பிடித்து விட்டது. 'தப்புவதற்கு வழியில்லை, இனிமேல் சாவுதான்' என்று எண்ணி 'மாகேர்,' நான்தான் 'ஆப்ரேயை'க் கொன்றவன்' என்று ஒப்புக்கொண்டான், 'நீ, நாயினால் சாக வேண்டாம். சட்டங்களினால் சரியாக தண்டிக்கப்பட்டு இறப்பாயாக' என்று சொல்லி 'மாகேரை' நாயினின்றும் விலக்கினார்கள்.

வாயிருந்தும், பேசுவதற்கும், தனது மனதிலிருக்கிறதை வெளியில் சொல்வதற்கும் முடியாமல் போனாலும் யஜமானன் இந்த இடத்தில் புதைக்கப்பட்டிருக்கிறான் என்று ஜாடையாய்க் காட்டினது ஓர் ஆச்சரியமே. தனது யஜமானனைக்கொன்ற பாதகன் இன்னான் என்று அவனைப்பார்த்தவுடன் குலைப்பதாலும் பாயயத்தனிப்பதாலும் காண்பித்ததும ஆச்சரியப்படத்தக்கதே. தன்னையும் மாகேரையும் திறந்த வெளியில் நிறுத்தினபோது 'வேடிக்கைக்கு நிறுத்தவில்லை. சண்டைக்குத்தான; இதுதான் சரியான ஸமயம் பழிக்குப் பழிவாங்குவதற்கு' என்று அதற்குத் தோன்றியதும் ஆச்சரியமே.

ஆர். ஹரிராவ்.

## SWINDLERS AND THEIR TRICKS.

### முடிச்சவிழ்க்கிகளும் அவர்களுடைய தந்த்ரங்களும்.

'ஜனோபிமானி'யின் சென்ற ஆகஸ்ட், ஸெப்டம்பர் மாஸத்து ஸஞ்சிகைகளில முடிச்சவிழ்க்கிகளுடைய தந்த்ரங்களில் சிலவற்றைக் குறிப்பிட்டோம். இப்போது இன்னும் சில தந்த்ரங்களை விவரிக்கிறோம்.

**கரன்ஸிநோட்டுகள் செய்து கொடுப்பதாகச் சொல்பவர்கள்.**—சில போக்கிரிகள் பணத்தாசை பிடித்த சில ஜனங்களிடம் கரன்ஸிநோட்டுகளை ஒன்றுக்கு இருமடங்காக்கிக் கொடுப்பதாகச் சொல்லி ஏமாற்றிப் பணம் பறிப்பதுண்டு. இந்தப் போக்கிரிகள் முதலில் ஜனங்களுக்கு நம்பிக்கை வருவதற்காகப் பின்வருமாறு செய்வார்கள். போட்டக்ராப் படம் பிடிப்பதில் உபயோகிப்பதைப் போன்ற மருந்து பூசியிருப்பதும், வெளிச்சத்தால் சீக்ரம் மாறக்கூடியதுமான 'ஸென்ஸிடைஸ்ட் பேபர்' என்னும் கடுதாசியை ஏறகனவே தயார்செய்துவைத்திருப்பார்கள். போக்கிரியானவன் தான தெரிந்தெடுத்த மனிதனிடம் கரன்ஸிநோட்டைப்போல் வேறு கரனஸிநோட்டுகள் செய்துகொடுக்க முடியுமென்றும், வேண்டுமானல் ஸ்வல்ப மதிப்புள்ள ஒரு கரன்ஸிநோட்டைக் கொடுத்தால் அவனெதிரிலேயே செயது காட்டுவதாகவும சொல்லுவான். ஏமாறப் போகிறவன் ஒரு நோட்டை எடுத்துக்கொடுக்க போக்கிரி ப்ரின்டிங் ப்ரேம் என்று சொல்லப்படும போட்டக்ராப் படத்துக்கு நகல்கள் எடுக்கும சட்டததில் ஏற்கனவே தயார்செய்து வைத்திருக்கும ஸென்ஸிடைஸ்ட் பேபரை வைத்து அதின்மேல் கரன்ஸிநோட்டைவைத்து வெயிலில் வைபபான். கொஞ்ச நேரத்துக்கெல்லாம் ஸென்ஸிடைஸ்ட் கடுதாசியில் கரன்ஸிநோட்டைப் போன்ற உருவம் மங்கலாகததெரியும, உடனே அதை பணத்தாசை பிடித்தவனுக்குக்காட்டி, இன்னும் சிறிது நேரத்துக்கெல்லாம நல்ல கரன்ஸிநோட்டு கிடைக்குமென்று சொல்வான. பிறகு போக்கிரி மற்றவனுககுத் தெரியாதபடி அவன் வேறெங்காவது பார்த்துக்கொண்டிருக்கும்போது ஸென்ஸிடைஸ்ட் பேபரை வெளியிலெடுத்து மறைத்துக்கொண்டு, தன்னிடமுள்ள ஒரு நிஜகரன்ஸி நோட்டைப் போட்டக்ராப் சட்டத்தில் வைத்துவிட்டு கொஞ்சநேரமான பிறகு சட்டத்தைப் பிரித்து கரன்ஸிநோட்டு செய்தாய்விட்டதென்று காட்டுவான். போக்கிரியின் ஸாமர்த்யத்தைக் கண்ட பணத்தாசை பிடித்தவன் தன்னிடமுள்ள கரன்ஸிநோட்டுகளையெல்லாம் கொண்டுவந்து போக்கிரியினிடம் கொடுப்பான். சிலஸமயங்களில் அயலார்களிடமிருந்து நோட்டுகள் கடன்வாங்கிவந்து கொடுப்பதுமுண்டு. போக்கிரி நோட்டுகளை ப்ரிண்டிங் ப்ரேமில் வைப்பதுபோல் பாசாங்கு செய்து சட்டத்தில் ஸாதாரணக் கடுதாசிகளை வைத்து சட்டத்தை அந்த மனிதனிடமே கொடுத்து, அதை இரண்டு மூன்று நாள் அமிழ்த்தி வைத்து வெயிலில் காயவைக்க வேண்டுமெனறும, பிறகுதான அதைத் திறந்து நோட்டுகளை எடுக்கவேண்டுமென்றும சொல்லிவிட்டு நிஜ கரன்ஸி நோட்டுகளை எடுத்துக்கொண்டு போய்விடுவான். சில ஸமயங்களில் சட்டத்தில் உள்ள மரத்துக்கும கண்ணாடிக்கும் நடுவில் சில த்ராவகங்களை ஊற்றும்படி சொல்லிவிட்டுப் போவான். த்ராவகங்களை ஊற்றினல் உள்ளிருக்கும் கடுதாசிகளை த்ராவகம் தின்றுவிடுகிறது. பணம பறிகொடுத்தவன் போக்கிரியைக் கண்டுபிடித்து ஏன் மோசம செய்தாயென்று கேட்டால், அவன் (போககிரி) தான் சொன்ன வார்த்தைகளின்படி சரியாய்ச் செய்யாததால் அவனுடைய நோட்டுகள்கூட நாசமாய்ப்போய் விட்டனவென்று சொல்லித் தப்பித்துக் கொள்வான. ஏமாந்தவர்கள் போலீஸாரிடம் தெரிவிப்பதாகச் சொன்னல் ; போக்கிரிகள், சவர்மெண்ட் கர

ன்ஸி நோட்டைப் போர்ஜரி செய்வயத்தனித்தற்காகப் போலீஸார் அவர்களையே குற்றஞ் சாட்டி தண்டிக்க ஏற்பாடு செய்வார்களென்று சொல்லி பயமுறுத்துவார்கள். இதனால் ஏமாந்தவர்கள் இம்மோசங்களை போலீஸாருக்கு வெளியிடுவதில்லை. 1907-ம் வர்ஷத்தில் வடக்கே டம்ரான் என்னுமிடத்திலுள்ள ஒரு பணக்காரன் பத்து ஆயிர ரூபாய் நோட்டுகளை இவ்விதம் கொடுத்து இழந்தானும்.

**ஒன்றுக்கு இரண்டு கொடுக்கும் பாங்கிகள்.**—சில போக்கிரிகள் கூட்டமாய் ஒரு க்ராமத்துக்கு வந்து ஒரு வீட்டை குடிக்கூலிக்கு அமர்த்திக் கொண்டு அதில் ஒரு பாங்கி ஏற்படுத்தி நடத்துவதாக பாவனை செய்வார்கள். அந்த பாங்கியில் யார் பணம் போட்டாலும் போட்ட தொகைக்கு இருமடங்கு கொடுப்பதாகச் சொல்வார்கள். முதல் முதலில் போடுகிறவர்களுடைய தொகைகளுக்கு இரட்டிப்பு மடங்கு தொகை செலுத்தி விடுவார்கள். இவ்விஷயம் ஊர் முழுவதும் பரவவே, ஊரிலுள்ளோரெல்லாம் தங்களிடமுள்ள பணம் முழுவதையும் கொண்டுவந்து பாங்கியில் போடுவார்கள். பணம் ஸமமாய்ச் சேர்ந்தவுடன் போக்கிரிகள் ஸமயம் பார்த்துக் கம்பி நீட்டிவிடுவார்கள். இந்த மோசத்தைச் செய்பவர்கள் பக்கிரிகளில் ஒரு ஜாதியாராவர்.

**ஆள் மாறாட்டம் செய்பவர்கள்.**—சிலர் ஒரு நல்ல இன்ஷூரன்ஸ் கம்பெனியின் ஏஜெண்டென்று சொல்லிக்கொண்டு, ஜனங்களை இன்ஷூர் செய்யச்சொல்லி முதல் ப்ரீமியத்தை வஸூல் செய்துகொண்டு போய்விடுகிறார்கள். இன்ஷூரென்ஸ் கம்பெனியின் ஏஜெண்டென்று சொல்லிக் கொள்ளுகிறவர்கள் வாஸ்தவத்தில் குறிப்பிட்ட இன்ஷூரென்ஸ் கம்பெனியின் ஏஜெண்டுகளா என்பதை நிச்சயமாய்த் தெரிந்துகொண்ட பிறகுதான் ஜனங்கள் ப்ரீமியத்தை அந்த ஏஜெண்டுகளிடம் கொடுக்கவேண்டும்.

சில போக்கிரிகள் பாடசாலை ஸப்அஸிஸ்டெண்ட் இன்ஸ்பெக்டர்களாக நடித்து ஸாமான்ய பாடசாலைகளுக்குப்போய் அங்குள்ள உபாத்யாயர்களுக்கு பற்பல உபகாரங்களை செய்து கொடுப்பதாகச் சொல்லிப் பணம் பறிக்கிறார்களாம்.

சிலர் ஸானிடரி இன்ஸ்பெக்டர்களாக ஆள் மாறாட்டம் செய்கிறார்கள். அவர்கள் தங்களை காலரா டாக்டர்கள் என்று சொல்லிக்கொண்டு, கக்கூஸுகள் ஸுகாதாரக்குறைவாக இருக்கின்றன என்பது முதலான பல குற்றங்களை எடுத்துக்காட்டி கேஸ்கொண்டுவருவதாக பயமுறுத்தி ஜனங்களிடம் பணம் பறிக்கிறார்கள். வேறு சிலர் அம்மைகுத்தும் இன்ஸ்பெக்டர்களாக நடித்து, பணங்கொடுத்தால் குழந்தைகளுக்கு அம்மைகுத்தக் கட்டாயப்படுத்தாம லிருப்பதாகச்சொல்லிப் பணம் ஸம்பாதிக்கிறார்கள்.

சிலர் உத்யோகம் ஸம்பாதித்துக் கொடுக்கும் போலி ஏஜென்ஸிகள் ஸ்தாபித்து அதனால் பணம் ஸம்பாதிக்கிறார்கள். உத்யோகம் ஸம்பாதித்துக் கொடுப்பதற்காக மோசடியில்லாத வாஸ்தவமான ஏஜென்ஸிகள் சில இந்தியாவில் இருக்கின்றன. போலி ஏஜென்ஸிகளின் விளம்பரங்கள் ரொம்ப ஆசை காட்டி ஜனங்களை மயக்கக் கூடிய விதமாய் எழுதப்பட்டிருக்கும். உத்யோக ஏஜென்ஸிகளுக்குப் பணம் கொடுப்பதற்கு முன்னால் வாஸ்தவத்தில் அந்த ஏஜென்ஸிகள் நடந்து வருகின்றனவாவென்று விசாரிக்க வேண்டும். கூடுமானால் ஏஜென்ஸிகளின் உதவியால் உத்யோகம் பெற்றவர்களின் பெயரைத் தெரிந்து கொண்டு தக்கபடி விசாரித்துப் பிறகு தான் ஏஜென்ஸிகளிடம் உத்யோகம் ஸம்பாதித்துக் கொடுக்கப் பணம் கொடுக்க வேண்டும்.

சில போக்கிரிகள் கவர்ன்மெண்ட் உத்யோகஸ்தர்களாக ஆள் மாறாட்டம் செய்து, பற்பல டிபார்ட்மெண்டுகளுக்கு உத்யோகஸ்தர்கள் சேர்ப்பதாகச் சொல்லி, உத்யோகத்துக்கு வருபவர்களிடம் ப்ரீமியம் என்று பெருந் தொகைகள்

வஸூல் செய்து லாபம் அடைகிறார்கள். கவர்ன்மெண்ட் உத்யோகஸ்தர்கள் யாருக்காவது உத்யோகம் செய்துகொடுத்தால் அவரிடமிருந்து பணமொன்றும் வஸூல் செய்யக்கூடாது. இந்த விஷயத்தை ஞாபகத்தில் வைத்துக்கொண்டால் எவரும் இந்தமாதிரிப் போக்கிரிகளிடம் அகப்படாமல் தப்பலாம்.

**திருட்டுத்தனமாய் உண்டியல்களைத் திருத்துபவர்கள்:** சிலர் உண்டியல்களிலும் ரெயில்வே ரசீதுகளிலும் உள்ள தொகைகளைத் திருத்தி அதனால் வ்யாபாரிகளை ஏமாற்றுகிறார்கள். இவைகளில் ஒருவிதத்தை விவரிப்போம். போக்கிரி ஒரு ரெயில்வே ஸ்டேஷனில் ஒருமூட்டை அரிசியை 'கூட்ஸ்' வண்டியில் ஏற்றி, இன்னொரு ரெயில்வே ஸ்டேஷனுக்கு அனுப்புவான், அந்த மூட்டைக்கு ரெயில்வே அதிகாரிகளிடமிருந்து வாங்கின ரெயில்வே ரசீதில் ஒருமூட்டையென்றிருப்பதை 1000-மூட்டையென்று மாற்றி, அதற் கேற்றபடி, நிறை, ரெயில்வே சத்தம் முதலியவைகளையும் மாற்றுவான். அதன்பிறகு அரிசி போகும் இடத்திலுள்ள வ்யாபாரிகளுக்கு அரிசிமேல் தனக்குள்ள பாத்யதையை விற்றுவிடுவதாகச் சொல்வான். யாராவது ஒரு வ்யாபாரி அதை வாங்க ஸம்மதித்து விலைபேசி, க்ரயத்தைப் போக்கிரியினிடம் கொடுத்துவிட்டு, ரெயில்வே ரசீதை தன் பெயருக்கு "எண்டார்ஸ் செய்து" வாங்கிக்கொள்வான். வ்யாபாரி தான் ஏமாந்த விஷயத்தை அறிந்து கொள்வதற்குள், போக்கிரி கம்பி நீட்டிவிடுவான்.

**தர்மகார்யங்களுக்காகப் பணம் சேர்ப்பவர்கள்.**- சிலபோக்கிரிகள் தர்ம கார்யங்களுக்குப் பணம் வஸூல் செய்வதாகச்சொல்லி ரொம்ப புத்திசாலிகளையும் ஏமாற்றிப் பணம் பறிக்கிறார்கள். இவர்கள் ஸன்யாஸிகளின உடைதரித்து, இன்னவிடத்தில் கோ சாலைகள் ஸ்தாபிக்கப் போவதாகவும், நடத்தை கெட்டுப்போன ஸ்த்ரீகளை நல்வழியில் கொண்டுவர ஆச்ரம ஸ்தாபிக்கப் போவதாகவும் சொல்லி பணக்காரர்களிடம் பணம்பறிக்கிறார்கள். கொஞ்சகாலத்துக்கு முன்னால் இப்படிப்பட்ட போக்கிரி ஒருவன் ஒரு பட்டணத்துக்கு வந்து மேற்சொன்ன கார்யங்களுக்காக பணம் வேண்டுமென்று சொல்லி அங்கிருந்த வக்கீல்களுள் அநேகமாய் எல்லாரிடத்திலும் பணம் வாங்கினான். அவன் ஒரு காலி நிலத்தில் சில மூங்கில்களைக் கொண்டு வந்து போட்டுவைத்தான். கோசாலை ஸ்தாபிக்க அவன் செய்ததெல்லாம் அவ்வளவுதான். கெட்டுப்போன ஸ்த்ரீகளின் ஆச்ரமமென்று அவன் சொன்னது சற்று நிஜக்கலப்பாயிருந்தது. கல்கத்தாவில் சித்பூர் ரோடில் அப்படிப்பட்ட ஒரு ஆச்ரமமிருந்தது. ஆனால் அங்கிருந்த ஸ்த்ரீகள் முன்போலவே கெட்ட நடத்தையில் ப்ரவர்த்தித்துக் கொண்டிருந்தார்கள். போக்கிரி தான் வஸூல்செய்த பணத்தை அவர்களைச் சீர்திருத்துவதற்காக உபயோகிக்கவேயில்லை. போலீஸார் போக்கிரியைப் பிடித்து கோர்ட்டுக்குக் கொண்டுவந்தபோது முன்சொன்ன பட்டணத்திலுள்ள வக்கீல்கள் முதலில் ஸாக்ஷ்யம் சொல்லப் பின் வாங்கினார்கள். தாங்கள் ஏமாந்து போனதை ஒப்புக்கொள்ள அவர்கள் இஷ்டப்படவில்லை. ஆனால் கடைசியில் அவர்கள் ஸாக்ஷ்யம் சொல்லவே போக்கிரி இரண்டு வர்ஷம் சிக்ஷையடைந்தான்.

சிலர் கோவில் கட்டிவைப்பதாகச் சொல்லிப் பணம் வஸூலிப்பதுண்டு. எவரும் பணம் கொடுப்பதற்கு முன் கோவில் கட்டப்போவது வாஸ்தவமென்றும், கொடுக்கும் பணம் கோவில் செலவுக்கே உபயோகிக்கப்படும் என்றும் நிச்சயமாய்த் தெரிந்தாலொழிய, பணங்கொடுக்கவே கூடாது.

**கடைகளை மோசம்செய்பவர்கள்**—சிலர் ஜமீன்தார்களின் ஏஜெண்டுகள் என்று சொல்லிக் கடைக்காரர்களைப் பலவிதங்களில் ஏமாற்றுவதுண்டு. இவர்களில் ஒருவன் நல்ல உடை

தரித்த ஒரு பெரிய கடைக்குப்போய், பக்கத்துத் தெருவில் ஒரு ஜமீன்தார் வந்திருக்கிறாரென்றும், அவருக்கு ஆயிரக்கணக்கான ரூபாய்க்கு ஸாமான்கள் வேண்டியிருக்கின்றனவென்றும், அவர் சில தினுஸுகளை மாதிரிக்கு பார்க்க ப்ரியப்படுவதால், அவைகளை அவருடைய வீட்டுக்கு அனுப்பினால், ஸௌகர்யமாயிருக்குமென்றும் சொல்வான். இதற்கு முன்னால் போக்கிரி ஒரு பெரிய வீட்டைக் குடிக்கூலிக்கு வாங்கி ஒரு மைனர் ஜமீன்தாருக்குள்ள லக்ஷணங்களெல்லா மிருக்கும்படிக்கு அவ்வீட்டில் ஸேவகர்களை ஏற்படுத்தி, மற்ற ஸாமான்களையும் அமைத்து வைத்திருப்பான். சில ஸமயங்களில் கடைக்காரன் போக்கிரியோடு போய் அந்த வீட்டைப்பார்த்து த்ருப்தியடைவான். பிறகு அவன் அந்த வீட்டுக்கு தனது ஸாமான்களை மாதிரியாக அனுப்பி வைப்பான். சில ஸமயங்களில், ஜமீன்தாருக்கு பாங்கியிலிருந்து பணம் வருவதற்கு சற்றுத் தாமஸமாகுமென்று ஏஜெண்டு சொன்னால், கடைக்காரன் கொஞ்சம் பணத்தையும் கைமாற்றாகக் கொடுப்பான். அதன் பிறகு போக்கிரிகள் ஸமயம் பார்த்துக் கம்பி நீட்டிவிடுவார்கள்.

மறுநாள் காலையில் கடைக்காரன் 'மைனர் ஜமீன்தார்' வீட்டுக்குப்போனால் வீடு காலியாயிருக்கும்.

கொஞ்சகாலத்துக்கு முன்னால் ஒரு போக்கிரி கல்கத்தாவிலுள்ள ஒரு பெரிய ஐரோப்பிய கடைக்குப்போய், தான் ஒரு பணக்கார ஜமீன்தாருடைய ஏஜெண்டென்று சொல்லி, மேஜை நாற்காலி முதலிய ஸாமான்களுக்கு ஏராளமாய் ஆர்டர் கொடுத்தான். அநேக கம்பெனியில் ஆர்டர் கொடுத்ததற்குக்கமிஷனாக அவன் கடையினிடம் ரூ. 60-பெற்றுக்கொண்டு போய்விட்டான். கடைக்காரர்கள் ஸாமான்களை அனுப்பினபோதுதான் மோசம் வெளியாயிற்று.

கல்யாண தரகர்கள்.—சிலபோக்கிரிகள் கல்யாணம் முடித்துக்கொடுக்கும் ஏஜெண்டுகளென்று சொல்லிக்கொண்டு, பெண்கள் அதிகமாயில்லாத ஜில்லாக்களில் கல்யாணமாகாதவர்களுக்கும், தாரமிழந்தவர்களுக்கும் பெண்கள் ஸம்பாதித்துக்கொடுப்பதாகவும், பிள்ளைகள் அதிகமாயில்லாத ஜில்லாக்களில் பெண்களுக்கு வரன் தேடிக்கொடுப்பதாகவும் சொல்லி, பெண் வேண்டுவோரிடமும், பிள்ளை வேண்டுவோரிடமுமிருந்து பணம் ஸம்பாதிப்பதுண்டு. சிலர் கல்யாணத்துக்கிருக்கும் பெண்கள் அல்லது பிள்ளைகளின் ஸொந்தக்காரர்களென்று சொல்லி, கல்யாணப் பேச்சுகளை பணம் கிடைக்கும் வரையில் வெகுகாலம் நடத்திக்கொண்டு வருவார்கள். சில ஸமயங்களில் இவர்கள் தாழ்ந்த ஜாதிப் பெண்களையும், வேசைகளையும் தகுந்த பெண்களென்று ஏமாற்றி உயர்ந்த ஜாதிப்பிள்ளைகளுக்குக் கல்யாணம் செய்விப்பதுமுண்டு.

மாந்த்ரீகர்கள்.—மாந்த்ரீகம் செய்வதாகச் சொல்லித் திரியும் போக்கிரிகள் இந்தியாவில் எங்கும் உண்டு. இவர்கள் ஜனங்களுள் எல்லா வகுப்பாரையும் ஏமாற்றுகிறார்கள். இவர்கள் ஸன்யாஸிகளாகவாவது, அல்லது ரொம்ப தெய்வ பக்தியுள்ளவர்களாகவாவது நடித்து, ஜனங்களுக்கு உண்டாகக்கூடிய எல்லா வ்யாதிகளையும் போக்கடிக்கக் கூடியவர்களென்றும், ஸ்த்ரீகளுக்கு மலட்டுத்தனத்தைப் போக்கடிக்க முடியுமென்றும், ஆண்களுக்கு நபுஸகத்தை ஸ்வஸ்தம் செய்ய முடியுமென்றும், கணவர்களுடைய ப்ரியத்தை இழந்த ஸ்த்ரீகளுக்கு புருஷர்களை வசியப்படுத்திக் கொடுக்க முடியுமென்றும், சோரநாயகர்களையும் அப்படியே வசியப்படுத்த முடியுமென்றும் சொல்லி வருவார்கள். இவர்கள் பேச்சை யாராவது நம்பினால், இவர்கள் ஒரு பூஜை செய்யவேண்டுமென்றும், அதற்கு வெற்றிலை, பாக்கு, மஞ்சள், கங்கா ஜலம் முதலிய ஸாமான்ய பொருள்கள் போதுமென்றும் சொல்வார்கள். ஏமாந்த

ஸ்த்ரீயோ, புருஷனோ மாந்த்ரீகனை வீட்டுக்குள் அழைத்துக்கொண்டு போய், பூஜை செய்ய வீட்டில் ஒரு இடம் கொடுப்பார்.

பூஜை நடக்கும்போது, மாந்த்ரீகன், தங்கம் கொண்டுவந்து தேவதைக்கு ஸமர்ப்பிக்க வேண்டுமென்றும் எவ்வளவு அதிகமாகத் தங்கம் பூஜையில் வைக்கிறார்களோ அவ்வளவு சீக்ரமாய் கார்ய ஸித்தி ஏற்படுமென்றும் சொல்லுவான். ஏமாந்தவர் தம்மிடமுள்ள தங்கத்தையும், தாம் கடன் வாங்கிச் சேகரித்த தங்கத்தையும் கொண்டு வந்து மாந்த்ரீகனிடம் கொடுப்பார். மாந்த்ரீகன் அதைப் பூஜைசெய்யுமிடத்தில் ஒரு பள்ளம் பறித்து அவர்கொடுத்த தங்கநகைகள், நாணயங்கள் ஆகிய இவைகளையெல்லாம் அந்தப் பள்ளத்தில் வைத்து மூடுவான். அல்லது இவைகளை ஒரு துணியில் கட்டி பூஜைக்குப் பக்கத்தில் வைத்து, பூஜைமுடியும் வரையில் ஒருவரும் அதைத் தொடக்கூடாதென்று சொல்வான். தங்கம் இல்லாவிட்டால் வெள்ளி நகைகளையும், நாணயங்களையும் கொண்டுவரச் சொல்லுவான். பிறகு ஸமயம் வாய்த்தவுடன் நகை நாணயங்களுடன் ஓடிவிடுவான்.

புதையல் வாங்கிக்கொடுப்பவர்கள்.—இவர்கள் வெகுவாய் பணக்காரர்களையே ஏமாற்றுகிறார்கள். இவர்களுள் ஒரு போக்கிரி ஒரு பணக்காரனிடத்தில்போய், ரகஸ்யமாய், சில கூலியாட்கள் குளம் வெட்டிக்கொண்டிருந்தபோது, ஒரு பெரிய புதையலைக் கண்டெடுத்தார்களென்றும், புதையல் முழுவதும் தங்க மோகராக்கள் என்றும், அவர்கள் மோகராக்களை ரகஸ்யமாய் விற்றுக்கொண்டிருக்கிறார்களென்றும் சொல்லி, அவ்விஷயம் வாஸ்தவமென்பதை ரூபிக்க, சில நிஜ மோகராக்களைக் காட்டி, அவைகளின் வாஸ்தவமான விலையைவிடக் குறைவான ஒரு விலையைச் சொல்லி, அந்த விலைக்கு வாங்கிக்கொள்வதாயிருந்தால் புதையலில் கிடைத்த மோகராக்கள் எல்லாவற்றையும் விலை பேசித் தீர்த்துவிடுவதாகவும் சொல்லுவான். பணக்காரன் நம்பி மோகராக்களை வாங்கிக்கொள்ள ஸம்மதித்தால், அவ்விஷயத்தை அவர் ரகஸ்யமாய் வைத்திருக்கவேண்டுமென்றும், விலைப் பணத்தை ஒரு குறிப்பிட்ட இடத்துக்கு ராத்ரிவேளையில் எடுத்துக்கொண்டு வந்தால் மோகராக்கள் கொடுக்கப்படுமென்றும் போக்கிரி சொல்வான். குறிப்பிட்ட காலத்தில் பணக்காரன் பணத்துடன் குறிப்பிட்ட இடத்துக்கு இரவில் போவான். போக்கிரி ஒரு ஜாடியில் பாதியளவுக்கு மண்ணையும் அதன்மேல் புதுக் காலணுக்களையும் போட்டு மேலே சில தங்க மோஹராக்களை பரப்பி பணக்காரனிடம் கொடுத்து, அதற்கு விலையாக பணக்காரன் கொண்டுவந்த பணத்தைப் பெற்றுக்கொண்டு மறைந்துவிடுவான். பணக்காரன் ஏதாவது ஸந்தேகங்கொண்டு மோகராக்கள் விஷயத்தில் தகராறு செய்தால், போக்கிரி அவனை அடித்துத் தொந்தரவுசெய்து பணத்தைப் பிடுங்கிக்கொள்வான்.

தந்தி மணியார்டர் போக்கிரிகள்:—இவர்கள் ஸாதாரணமாய் பெரிய வ்யாபார ஸ்தலங்களிலுள்ள ரெயில்வே ஸ்டேஷன்களில் சுற்றிக்கொண்டிருப்பார்கள். யாராவது அவ்வூருக்குப் புதிதாகவந்தால், அவருடன் ஸ்நேகிதஞ்செய்து, அவருடைய ஸொந்த ஊரிலுள்ள அவருடைய பந்துக்களுடைய பெயர்களையும் அவர்களுடைய நிலைமைகளையும் அறிந்துகொண்டு, பிறகு, புதிதாகவந்தவன் பெயரால், அவருடைய ஊரிலுள்ள ஒரு பந்துவுக்கு, எதிர்பாராத அவஸரமான சில காரியங்களுக்காக உடனே தந்திமூலமாகப்பணம் அனுப்பும்படி தந்தியடித்துப் பணம் வந்தவுடன் பெற்றுக்கொண்டு போய்விடுவார்கள்.

தந்திமணியார்டர் போக்கிரித்தனத்தில் இன்னொருவிதமும் உண்டு. போக்கிரியானவன் ஒரு ஊரிலிருந்துகொண்டு, அங்குள்ள ஒரு ப்ரபல வ்யாபாரியின் பேரால், தூரமான இன்னொரு ஊரிலுள்ள அவருடைய ஏஜெண்டுக்கு, ஒரு குறிப்பிட்ட பெயருள்ள ஒரு மனிதனை வந்து கேட்கும்போது ஒரு குறிப்பிட்ட தொகையைச் செலுத்த வேண்டுமென்று தந்தி யடிப்பான். ஏஜெண்டுக்குத் தந்திபோய்ச் சேர்ந்த சிறிது நேரத்துக்கெல்லாம், போக்கிரியோ, அவனைச் சேர்ந்த உள்ளாளோ ஏஜெண்டினிடம் போய் பணத்தை வாங்கிக்கொண்டு போய்விடுவான்.

# Departmental Notes.

# பகுதிக் குறிப்புகள்.

## EDUCATION.

## வித்யாவிஷயம்.

### Instruction through Vernaculars.

**தேசபாஷைகளின் மூலமாய் கல்வி கற்பிப்பது.**— சென்ற ஜூன்மாஸத்து 'ஜனாபிமானியில் தேசபாஷைகள் மூலமாகக் கல்விகற்பிப்பது விஷயமாய் இம்பீரியல் லெஜிஸ்லெடிவ் கௌன்ஸிலில் நடந்த விவாதத்தைப் பற்றி எழுதினோம். இந்தியாவிலன்றி வேறு எந்த தேசத்திலும் தேசபாஷையில்தான் கல்வி கற்பிப்பது வழக்கமாயிருந்து வருகிற தென்று பலர் சொல்லுகிறார்கள். ஈஜிப்ட்தேசத்தின் ராஜதானி பட்டணமாகிய கெய்ரோவில் ஒரு உயர்ந்த விவஸாயக் கலாசாலையிருக்கிறது. அதில் மாணவர்களுக்கு அரபிபாஷையில் தான் கல்விகற்பித்து வருகிறார்கள். ஸமீபத்தில் அங்குள்ள சில மாணவர்கள் இனிமேல் இங்கிலீஷிலேயே விவஸாயப் பாடங்களைக் கற்றுக்கொடுக்கும்படி ஏற்பாடு செய்யவேண்டு மென்று அதிகாரிகளுக்கு மனுசெய்து கொண்டார்கள். அதற்கு அவர்கள் சொல்லிய காரணமாவது, இங்கிலீஷ் பாஷையில் தான் உயர்ந்ததும், ரொம்ப ஸமீபத்தில் வெளியான விஷயங்களையுடையதுமான விவஸாய புஸ்தகங்கள் வெளியாகி விற்பனைக்குக் கிடைக்கின்றன; இங்கிலீஷில் கல்வி கற்பிததால், மாணவர்கள் அந்தப் புஸ்தகங்களை வாங்கி வாசிக்க ஹேதுவாகும் என்பதே. அந்த நாட்டு விவஸாய மந்திரி இதைப்பற்றி ஆலோசனை செய்து, அரபி பாஷையே அந்த தேசத்து பாஷையாயிருப்பதால், கல்வியும் அந்த பாஷையில்தான் கற்றுக்கொடுக்கபபட வேண்டு மென்றும், புஸ்தகங்கள் அகப்படாக்குறையை நிவர்த்திக்க இங்கிலீஷில் உள்ள சில உயர்ந்த விவஸாய புஸ்தகங்களை மொழிபெயர்த்து வெளியிடும்படி ஏற்பாடு செய்வாரென்றும் பதில் சொன்னார்.

### The Hindu University.

**ஹிந்து ஸர்வகலாசாலை.** — சென்ற ஏப்ரல் மாஸத்து 'ஜனாபிமானி'யில் காசியில் ஹிந்து ஸர்வ கலாசாலை ஸ்தாபிப்பதற்காக இந்தியா கவர்ன்மெண்டின் கல்வியிலாகா மெம்பர் ஒரு மசோதா கொண்டு வந்திருக்கிறாரென்றும், அந்த யூனிவர்ஸிட்டியின் முக்ய லக்ஷணங்களின்னவை யென்றும் தெரிவித்தோம். இந்த மாஸம் அந்த மசோதா சட்டமாக நிறைவேறியிருக்கிறது. இப்போது ஸர்வகலாசாலை அபிமானிகள் அது ஸம்பந்தமான வேலைகளை முடிக்க முயற்சிசெய்து வருகிறார்கள். ஸர்வ கலாசாலைக் கட்டிடத்தின் அஸ்திவாரக்கல்லை ராஜப்ரதிநிதி அடுத்த பிப்ரவரிமாஸத்தில் நாட்டுவார் அடுத்த வர்ஷத்திலேயே கோடை காலத்துக்கு பிறகு அதாவது ஜூலை மாஸத்தில் ஸர்வ கலாசாலையில் கல்விக் கற்றுக்கொடுக்க ஏற்பாடுசெய்யப் போகிறார்களாம். ஸ்திரமான கட்டிடம் கட்டியாகிறவரையில் ஸர்வ கலாசாலையை காசியிலுள்ள ஸெண்ட்ரல் ஹிந்து காலேஜ் கட்டிடத்திலேயே நடத்திவரலாமா என்று அதன் அபிமானிகள் யோசித்துவருகிறாகள். ஹிந்து யூனிவாஸிட்டி (ஸர்வ கலாசாலை) ஸங்கத்தார் ஸமீபத்தில் ஒரு மீட்டிங்குகூடி மாணவர்கள் வஸிபபதற்கு இடம அமைப்பதையும், ஸர்வகலாசாலைக்கு வித்யாஸம்பந்தமாய் வேண்டியிருப்பவைகளையும் நிர்ணயிப்பதற்கு ஒரு கமிட்டி நியமித்தார்கள். தற்போது யூனிவர்ஸிட்டிக்கு 52 லக்ஷம ரூபாய ஸொத்து இருககிறது

### Education of Mudaliar Boys.

**முதலியார் வகுப்புப் பையன்களின் கல்வி.**—முதலியார் வகுப்புப் பையன்களின் கல்வியை அபிவ்ருத்தி செய்யும் நோக்கத்துடன், மைஸூர் சீப்கோர்ட்டில் ரெஜிஸ்ட்ராராக இருந்து காலஞ்சென்ற டி. எ. ராஜரத்ன முதலியாரின் மனைவி 10,000 ரூபாய் நன்கொடையளித்திருக்கிறா. கல்வி விஷயமாய் ஒரு தென்னிந்திய ஹிந்துமாது இவ்வளவு அதிகமான தொகையைய உபகாரம செய்திருபபது ரொம்ப ச்லாகிக்கத்தக்கது.

### A Weaving School.

**ஒரு நெசவுப் பள்ளிக்கூடம்.**—கோயம்புத்தூர் ஜில்லா காங்கயத்துக்குப பக்கத்திலுள்ள சிவன்மலை யென்னும் ஊரில் ஒரு நெசவுப் பள்ளிக்கூடம் ஸ்தாபிக்கப்பட்டிருக்கிறது.

# TAMIL LITERATURE.

## தமிழ்க் கல்வி.

### Proverbs on Meanness.

அற்பகுணத்தைப்பற்றிய பழமொழிகள்.—ஸமீபத்தில் வெளிவந்த 'விவேகசிந்தாமணி' யில் அற்பகுணத்தைப்பற்றி சில பழமொழிகளும் அவற்றை விளக்க சில குறிப்புகளும் வெளிவந்திருக்கின்றன. இங்கு அந்தப் பழமொழிகளை எடுத்தெழுதுகிறோம்.

1. காற்றுக்கு எதிரில் துப்பினால் முகத்தில் விழும்.

2. குதிரையின் குணமறிந்தல்லவோ தம்பிரான் கொம்பு கொடுக்கவில்லை.

3. குதிரை ஏறி என்ன! கோணக்கொம்பு ஊதி என்ன? வீணாக்கும் கீர்த்திக்கும் வெகுதூரம்.

4. குறைகுடம் ததும்பும்; நிறைகுடம் ததும்பாது.

இதற்கு நேரான பழமொழி "அறைகுடம் ததும்பும்; நிறைகுடம் ததும்பாது" என்பதாம்.

5. கொட்டிக் கொட்டி அளந்தாலும் குருணி பதக்காகாது.

6. குருணி மை தானிட்டாலும் குருடு குருடே.

7. சீவரத்து பார்ப்பான் இருந்தும் கெடுத்தான், செத்தும் கெடுத்தான். (சீவரம் என்பது காஞ்சீபுரத்துக்கு ஸமீபத்திலுள்ள ஒரு ஊர்.)

8. தனக்கு மூக்குபோனாலும் எதிரிக்கு சகுனப்பிழை வேண்டும்.

9. நடு ஊரில் நச்சுமரம் பழுத்தென்ன.

10. நரி கொழுத்தென்ன, காஞ்சிரம் பழுத்தென்ன.

11. நரிக்குப் பெரியதனம் கொடுத்தால் கிடைக்கு இரண்டாடு கேட்கும்.

12. நாறல்மீனை பூனை பார்ப்பதுபோல.

13. நாறல் சாணியை மிதிப்பானேன்; நல்ல தண்ணீர் வார்த்துக் கழுவுவானேன்.

14. நாற்றச சோற்றுக்கு பதம் பார்ப்பானேன்.

15. நாற்கலக்கூழுக்கு நானே அதிகாரி.

16. நிலத்திற்குத் தகுந்த கனியும் குலத்திற்கு தகுந்த குணமும்.

17. நீண்டபுல நிற்க நிழலாமா.

18. பனிபெய்து கடல் நிரம்புமா.

19. பனிபெய்து குளம் நிரம்புமா.

20. பனிப்பெருக்கிலே கப்பல் ஓட்டலாமா.

21. பனியைநம்பி ஏர்பூட்டினதுபோல.

22. பாடிப்பாடிக் குத்தினாலும் பதரில் அரிசி யில்லை.

23. பிடாரி வரங்கொடுத்தாலும் ஓச்சன் வரங்கொடுத்தலரிது.

24. புழுக்கை கலம்கழுவித் தின்னாது.

25. பித்தளை நாற்றமறியாது.

26. புழுக்கைப்புத்தி பிடரியிலே.

27. முக்காலம் காகம் முழுகிக் குளித்தாலும் கொக்காகுமா.

28. உயர உயரப் பறந்தாலும் ஊர்க்குருவி பருந்தாகுமா.

### Rajamony.

ராஜாமணி.—இது கி. பி. சேஷாத்ரி அய்யங்கார் இயற்றிய துப்பறியும் நாவலாகும். இது இங்க்லிஷில் கோனன் டாயில் என்பவர் இயற்றிய ஒரு துப்பறியும் கதையை ஆதாரமாகக்கொண்டு இயற்றப்பட்டதாகும். இதன்நடை ஸுலபமா யிருக்கிறது. ஸ்த்ரீகளும் சிறுவர்களும் வாசிக்க ஏற்றது. இதன்விலை அணா 8. வேண்டுவோர் ஜி. ஏ. வைத்யராமன் அண்ட் கம்பெனியார், 3, 4, கொண்டிசெட்டித்தெரு, சென்னை என்றெழுதிப் பெற்றுக்கொள்ளவும்

### Saraswati Stotra Manjari.

ஸரஸ்வதீஸ்தோத்ரமஞ்சரி.—இது பெரம்பூர் எஸ் ஏ. வி. ஸ்கூல் உபாத்யாயராகிய மிஸ்டர் எம். வி. ஈச்வரய்யர் தொகுத்ததாகும். இதில் கம்பர் செய்த ஸரஸ்வதி அந்தாதி, குமரகுருபரஸ்வாமி செய்த ஸகல கலாவல்லிமாலை முதலிய பல ஸரஸ்வதி ஸ்தோத்ரங்கள் அடங்கியிருக்கின்றன. புஸ்தகத்தின் கடைசியில் அரும்பதவுரை ஒன்றுசேர்க்கப்பட்டிருக்கிறது. பள்ளிக்கூடங்களில் பிள்ளைகளுக்கு கற்பிக்க இது ஒரு நல்ல புஸ்தகமாகும். இதன் விலை அணா 4. வேண்டுவோர் ஜி. ஏ. வைத்யராமன் அண்ட் கம்பெனி, 3, 4, கொண்டி செட்டித் தெரு, மதராஸ் என்று எழுதிப் பெற்றுக் கொள்ளவும்.

### Lalita.

லலிதா—இது பொறுத்தவர் பூமி யாள்வாரென்னும நீதிவாக்யத்தை விளக்கும ஒரு சிறு கதை. இது சிறுவர் சிறுமியர்கள் வாசிப்பதற்கேற்றவிதமாக ஸுலபமான தமிழ் நடையில் எழுதப்பட்டிருக்கிறது. இதை எழுதியவர் கும்பகோணம் டௌன் ஹைஸ்கூல் உபாத்யாயராகிய மிஸ்டர் எஸ். எக்னஸாமி. இதன் விலை அணா 4. வேண்டுவோர் மெஸஸ்ர்ஸ ஜி. ஏ வைத்யராமன் அண்ட் கம்பெனி 3, 4, கொண்டிசெட்டித்தெரு, சென்னை என்றெழுதிப் பெற்றுக்கொள்ளவும்.

# SCIENCE AND INVENTION.

## சாஸ்த்ரமும் நூதன கற்பிதமும்.

### Scientific Progress in Germany.

ஜெர்மனியில் சாஸ்த்ர அபிவ்ருத்தி.—ப்ரிட்டிஷ் கப்பல் படையின் ஊக்கத்தால் ஜெர்மனிக்கு அத்யாவச்யமாய் வேண்டியிருக்கும் யுத்தப்பொருள்களை அந்த நாட்டுக்கு இப்போது போகமுடிவதில்லை. பீரங்கிகளும், தோட்டாக்களும், இன்னும் மற்ற யுத்தக்கருவிகளும் செய்வதற்கு தாமிரமும் பித்தளையும் வேண்டியது அவச்யம். இப்போது இந்த இரண்டு உலோகங்களும் கிடைக்காததால், ஜெர்மானியர்கள் அவைகளில்லாமலே மேற்படி யுத்தக் கருவிகளைச்செய்ய முயற்சிசெய்து கொண்டிருக்கிறார்களென்று சொல்லப்படுகிறது. ஸாதாரண இரும்புடன் ஸ்வல்பபாகம் செம்பையும் வேண்டிய அளவு நாகத்தையும் சேர்த்து ஒரு புது முறையால் ஒரு கலப்பு உலோகம் செய்து பீரங்கி முதலியவைகள் செய்கிறார்களாம்.

தங்களிடமிருக்கும் அலுமினியம் செலவழிந்து போய்விட்டால் என்னசெய்கிறதென்று பயந்து, ஜெர்மானியர்கள் களிமண்ணிலிருந்து அந்த லோகத்தைத் தயார்செய்ய ஏற்பாடு செய்துகொண்டிருக்கிறார்களாம்.

பீரங்கிகளுக்கும் வெடி குண்டுகளுக்கும் வேண்டிய வெடிமருந்து செய்வதற்கு நைட்ரிக ஆஸிட் என்னும் அக்னி த்ராவகம் வேண்டியது அவச்யமென்றும், நைட்ரிக ஆஸிட் செய்வதற்கு சிலி என்னும் தேசத்திலிருந்து கிடைக்கும் நைட்ரேட்டுகள் வேண்டுமென்றும், இங்க்லீஷார் அதை ஜெர்மனிக்குப் போகாமல் தடுத்துவிட்டதால் ஜெர்மானியர்களுக்குக் கஷ்டமேற்படுமென்றும் சொல்லப்படுவதாக சென்ற வர்ஷம் அக்டோபர் மாஸத்து 'ஜனுபிமானி'யில் எழுதியிருந்தோம். இப்போது ஜெர்மானியர்கள் ஆகாயத்திலிருந்து நைட்ரிக் ஆஸிட் தயார் செய்ய முயற்சி செய்வதாகச் சொல்லப்படுகிறது.

### Reclaiming Printed Paper.

அச்சடித்த கடுதாசியிலிருந்து புதிய கடுதாசி செய்தல்.-ஒரு அமெரிக்கர் அச்சடித்த கடுதாசியிலிருந்து மையைப்போக்கி, அதிலிருந்து வெண்மையான மரக்கூழ் செய்யஒரு வழிகண்டு பிடித்திருக்கிறார். முதலில் கடுதாசிகளை ஜலத்தில் அலம்பி சிறு துண்டுகளாக நறுக்கி, ஒருவித ஸோப கரைத்த ஜலத்தில் போட்டு, நன்றாய்க் கலக்குகிறார். இதனால கடுதாசியிலுள்ள [illegible] கடுதாசியை விட்டுப் பிரிந்து ஜலத்தில் சேர்ந்துகொள்ளுகிறது. கடுதாசியும் நார் நாராகப் பிரிந்து வெண்மையான கடுதாசிக் கூழாகிறது. பிறகு இந்தக் கூழை சுத்தஜலத்தில் அலம்பிவிட்டால் சுத்தமான கூழ்கிடைக்கிறது. இதில் கூழ் கொஞ்சமும் சேதமாய்ப் போவதில்லையாம். இந்தக் கூழைக்கொண்டு ஸாதாரண முறையால் நல்ல கடுதாசி செய்யலாமாம்

### Betel-nut Cutting Machine.

கொட்டைப்பாக்கு வெட்டும் யந்த்ரம்.—வங்காளத்திலுள்ள ஒரு இங்க்லீஷ்காரரும், மிஸ்டர் ஜோதீந்த்ர நாத் போஸ் என்ற வங்காளி கனவானும் ஒரு புதுப் பாக்குவெட்டும் யந்த்ரம் கண்டுபிடித்திருக்கிறார்கள். இந்த யந்த்ரத்தைக்கொண்டு வெகு சீக்ரமாய் பாக்கை நறுக்கிவிடலாமாம். நறுக்கின துண்டுகள் ரொம்ப மெல்லியதாகவும், ஒரே சீராகவும் இருக்குமாம். இந்த யந்த்ரத்தின் விலை ரூ. 10. இதை ஒரு மேஜையிலாவது நாற்காலியிலாவது வைத்து, மேஜை நாற்காலிகளில் அசையாமல் பிடித்துக்கொள்ளும்படி செய்யலாமாம். இது வார்ப்பு இரும்பால் செய்யப்பட்டிருக்கிறதாம். ரொம்ப உறுதியானதாம். எளிதில் கெடாதாம். இதன் நிறை 6¼-ராத்தல். இந்த யந்த்ரங்களை ஏராளமாகச் செய்வதற்காக இங்க்லண்டிலுள்ள பர்மிங்ஹாம் என்னும் பட்டணத்தில் ஒரு தொழில் சாலை கட்டப்பட்டு வருகிறதாம்.

### Coloured Cotton.

நிறமுள்ள பருத்தி.—பருத்தி வெண்மையாயிருப்பதால், அதன் நூலுக்கு சாயமேற்றவேண்டியிருக்கிறது. அமெரிக்காவிலுள்ள ஒரு பருத்தித் தோட்டக்காரர் பசுமையான பருத்தி விளைவித்திருக்கிறாராம். கறுப்பு நிறமுள்ள பருத்தி விளைவிக்கவும் பரீக்ஷைகள் செய்து வருகிறாராம்.

### A Camera to Photograph the Stomach.

குடலைப் போட்டோ பிடிக்க ஒரு யந்த்ரம்.—ஒரு மேல்நாட்டு கனவான் ஒரு சிறு போட்டோ படம்பிடிக்கும் யந்த்ரம (காமரா) கண்டுபிடித்திருக்கிறாராம். அது ரொம்ப சிறியதாயிருப்பதால் அதை வாயில்போட்டு விழுங்கிவிடலாமாம். அது குடலில் போய், உள்பாகத்தை போட்டோ பிடிக்குமாம.

# SANITATION AND MEDICINE.

## ஸுகாதாரமும் வைத்யமும்.

**Cataract Couching.**

**கண்ணிலுள்ள பூவை யெடுத்தல்.**—கண்ணில் பூவிழுந்தால் அதை ஸ்வஸ்தப்படுத்த இரண்டு முறை களிருக்கின்றன. ஒன்று மேல்நாட்டு வைத்யமுறை. இதன்படி வைத்யர்கள் கண்ணின் உள்பாகத்திலுள்ள பூவை கண்ணிலிருந்து அடியோடு எடுத்து விடு கிறார்கள்.

இரண்டாவது நாட்டு வைத்யர்களுடைய முறை. நாட்டு வைத்யர்கள் கண்ணிலிருந்து பூவை வெளியி லெடுக்காமல், கண்ணில் வேறொரு பாகத்தில் உள்ளே தள்ளி விடுகிறார்கள். இதில் வ்யாதிப்பட்ட பாகத்தை உள்ளேதள்ளி விடுவதால், அது அங்கேயே இருந்து கொண்டு சில ஸமயங்களில் வேறு கெடுதல்களை உண் டாக்குகிறது. சில ஸமயங்களில் பார்வை முற்றிலும் கெட்டுப்போவதுமுண்டு. மேல் நாட்டு வைத்யமுறைப் படி நோய்ப்பட்டபாகத்தை வெளியிலெடுத்து விடுவ தால் கண்ணுக்குப் பிற்காலத்தில் கெடுதி ஏற்படுவதற் கில்லை. இதுவே சிறந்த முறையென்று சொல்லப் படுகிறது.

இது விஷயமாய் சென்னை கண்ணாஸ்பத்ரியில் செய்த பரீக்ஷைகளால் நாட்டு வைத்யமுறைப்படி வைத்யம் செய்ததில் நூற்றுக்கு 21-பேர்கள் வீதமே ஸ்வஸ்தமடைந்திருக்க, இங்க்லீஷ்வைத்ய முறைப்படி சிகித்ஸை செய்ததில் 100-க்கு 90-பேர்கள் ஸ்வஸ்த மடைந்திருப்பதாகத் தெரிகிறது. ஆகையால் கண் ணில் பூவிழுந்து கஷ்டப்படுகிறவர்கள் மேல்நாட்டு வைத்ய முறையையே நாடவேண்டும்.

**Health Exhibition and Lectures.**

**ஸுகாதாரப் பொருள் காட்சியும், உபன்யாஸங் களும்.**—வருகிற டிஸம்பர் மாஸம் சென்னை பீபிள்ஸ் பார்க்கில் நடக்கும் வேடிக்கைகளோடு, ஸுகாதாரம், தேக ஸௌக்கியம் ஆகிய இவைகள் ஸம்பந்தமாக ஒரு பொருள் காட்சி நடத்தவும், உபன்யாஸங்கள் செய்யவும் ஏற்பாடாயிருக்கிறது. சென்னை கவர் னர் இது விஷயமாக கவனம் செலுத்திவருகிறார். உபன்யாஸங்கள் சென்னை விக்டோரியா ஹாலில் நடை பெறும். உபன்யாஸங்களை இங்க்லீஷிலும், தேசபா ஷைகளிலும் பாசுரிக்கவும், வேண்டுமானால் வெளியூர் களில் இந்த உபன்யாஸங்களை நடத்தவும், உபன்யா ஸங்களுக்கு வேண்டிய மாஜிக்லாண்டர்ன் கண்ணாடி கள் தயார்செய்யவும் உத்தேசித்திருக்கிறார்கள்.

**Why it Pays to lie down.**

**படுத்துக்கொள்வதின் ப்ரயோஜனம்.**—ச்ரமம் அதிகமாகும்போது நாம் படுத்துத் தூங்குகிறோம தூங்கி எழுந்தவுடன களைப்பில்லாமலிருக்கிறது. இதனால் நாம் தூங்கவேண்டியது அவச்யமென்று ஏற்படுகிறது. எவ்வளவுக்கு வயஸு குறைவோ அவ்வளவுக்கு அதி கம் தூங்கவேண்டும். வயஸு அதிகமாக ஆக தூக்கத் தின் அளவு குறைகிறது.

சிலர் ஸ்வல்பநேரம் தூங்கினால் போதுமென்றும், அதனால் தங்களுக்கு யாதொருகெடுதலு மேற்பட வில்லையென்றும் சொல்லுகிறார்கள்.

நின்றுகொண்டிருக்கும்போது ஸாதாரணமாய் நாடி எத்தனை தடவை அடிக்கிறதோ அதைவிட படுத்துக் கொண்டிருக்கும்போது ஸுமார் 8 தடவை குறைவாய் அடிக்கிறது இதன்படி 1 மணிக்கு ஸுமார் 500 அடி குறைந்துபோகிறது. ஒரு நாளுக்கு 12,000 குறைகி றது. இப்படிக் குறைவதால் ஹ்ருதயத்துக்கு வேலை குறைந்து அதற்கு பலமதிகமாகிறது. இன்னும் படுத் துத் தூங்கிக்கொண்டிருந்தால் ஹ்ருதயத்துக்கு ச்ரமம் ரொம்ப குறையும என்று ஒரு மேலநாட்டு வைத்யர் சொல்லுகிறார்.

**Banana Juice for Snake Bite.**

**பாம்புக்கடிக்கு வாழைப்பட்டைச் சாறு.**—ஒருவர் பாம்பு கடித்தவுடன் வாழைப்பட்டைச் சாறறை அதிக மாய்க் குடித்தால் இறக்காமல் தப்பித்துக்கொள்ளலா மென்றும், இது அநுபவத்துக்கு ஒத்த முறையாகவிருக் கிறதென்றும் சிலர் தெரிவிப்பதாக சென்ற 1913-ம் வர் ஷம் அக்டோபர் ௴ 'பிழைக்கும் வழி'யில் 535-ம் பக்கத்தில் எழுதியிருந்தது நமது நேயர்களில் பலருக்கு ஞாபகமிருக்கலாம். தென்னாப்ரிக்காவிலுள்ள ஒருவர் இது விஷயமாய சில பரீக்ஷைகள் செய்து பார்த்தாராம். சில ம்ருகங்களை கொடிய விஷமுள்ள பாம்புகளைக் கொண்டு கடிக்கச்செய்து, அந்த ம்ருகங்களுக்கு கடிக்கு முன்னும், கடிக்கும்போதும, கடித்தபிறகும் வாழைப் பட்டைச் சாற்றை யதேஷ்டமாய்க் குடிக்கக்கொடுத்தும் அவைகள் இறந்துபோயினவாம். பாம்பு கடித்த அநேக ப்ராணிகளின் தேகத்தில் கொல்லுவதற்கு வேண்டிய அளவு விஷம் ரத்தத்தில் சேருவதில்லையென்றும், அதனால் அவைகள் யாதொரு சிகித்ஸையுமின்றியே பிழைத்துவிடுகின்றன வென்றும், வாழைப்பட்டைச் சாற்றால் பிழைத்தவர்களுடைய தேகத்தில் வேண்டிய அளவு விஷம் சேராமலிருந்ததே அவர்கள் பிழைத்த தற்குக் காரணமென்றும் அவர் சொல்லுகிறார்.

# LAW.

# சட்டம்.

## Suit by Reversioner.

**அனந்தரவார்ஸ் வ்யாஜ்யம் கொண்டு வருவது.**—ஒரு ஹிந்து ஆண் வாரிஸில்லாமல் 1876-ம் வர்ஷத்தில் இறந்து போனார். அவருடைய புத்ரி அவருக்குப் பிறகு உயிருடன் இருந்தாள். அவர் இறக்கு முன்னமேயே இறந்து போன அவருடைய புத்ரனின் மனைவி அந்த ஹிந்துவின் ஸொத்துக்களைத் தன் வசமடைந்து பெண்ணினுடைய பாத்யதைக்கு எதிரிடையாக அநுபவித்து வந்தாள். பிறகு அந்த நாட்டுப்பெண் அந்த ஸொத்துக்களை 1-ம் ப்ரதிவாதியின் தகப்பனுருக்கு விற்று விட்டாள். அவன் 1901-ம் வர்ஷத்தில் இறந்து போனான். புத்ரி ஒரு ஸ்வீகார புத்ரனை வைத்துவிட்டு 1907-ம் வர்ஷத்தில் இறந்து போனாள். ஸ்வீகார புத்ரன் நிலங்களை 1911-ம் வர்ஷம் ஜனவரி 5-தேதியன்று வாதிக்கு விற்றார். வாதி ஸொத்துக்கள் தமவசம் சேரவேண்டுமென்று வ்யாஜ்யம் போட்டார். 1908-ம் வர்ஷத்து லிமிடேஷன் ஆக்ட் 141-வது ஸெக்ஷன்படி ஒரு ஹிந்து அனந்தரவார்ஸுக்கு, ஒரு ஸ்த்ரீ இறந்து போனபிறகு அந்த ஸ்த்ரீயின் ஸொத்துக்களுக்கு பாத்யதை ஏற்பட்டு அதன்மேல் அந்த அனந்தரவார்ஸ் வ்யாஜ்யம் போட்டால், அந்த வ்யாஜ்யத்துக்கு அந்த ஸ்த்ரீ இறந்து போனதன்மேல் புதிதாக வ்யாஜ்ய மூலம் ஏற்படுகிறது. இந்தியன் லிமிடேஷன் ஆக்ட் 144-வது ஸெக்ஷன்படி காலவதி ஏற்பட்டு விட்டதென்று சொல்லுவதற்கில்லை. 2-லா வீக்லி 751.

## Compromise and Joint Family.

**ராஜிசெய்துகொள்வதும் அவிபக்தகுடும்பமும்.**—தகப்பனும் ஒரு புத்ரனும் சேர்ந்த ஒரு ஹிந்து அவிபக்த குடும்பத்தில் தகப்பன் நல்லெண்ணத்துடன், குடும்ப க்ஷேமத்தை யுத்தேசித்து பிறருடன் ராஜி செய்துகொண்டால், அவ்விதம் ராஜி செய்துகொண்டது புத்ரனையும் கட்டுப்படுத்தும். அப்படியில்லாமல் போனால் புத்ரனைக் கட்டுப்படுத்தாது.

தகப்பன் செய்துகொண்ட ஒரு ராஜியின்படி நிறைவேற்று மனுப்போட்டு அவிபக்த குடும்ப ஸொத்துகளை ஜப்திசெய்தபோது, அந்த ராஜி ஏற்பட்டது புத்ரனைக் கட்டுப்படுத்தாதென்று ஏற்பட்டால், அப்படி ஜப்தி செய்ததானது அவிபக்த குடும்ப ஸொத்தில் தகப்பனுருக்குள்ள பாகத்தைப் பற்றினமட்டில் ந்யாயமானது.

## Withdrawing Suits.

**வ்யாஜ்யங்களை வாப்ஸு வாங்கிக்கொள்வது.**—வாதி ப்ரதிவாதிகளிடமிருந்து வரவேண்டிய சில தொகைகளை யடைவதற்காக ஒரு வ்யாஜ்யம் போட்டார். வ்யாஜ்யம் விசாரணையிலிருந்தபோது, வாதி இன்னொரு வ்யாஜ்ய மூலத்தைச் சேர்த்து தமது ப்ளெய்ண்டை மாற்றினார். அதன்மேல் வாதி, மறுபடியும் புதிதாக வ்யாஜ்யம் போட உத்தரவு பெற்று வ்யாஜ்யத்தை வாப்ஸு வாங்கிக்கொண்டார். பிறகு புதிதாக வ்யாஜ்யம் போட்ட தேதியில் சில தொகைகளுக்குள்ள பாத்யதை காலாவதியாகிவிட்டது. முதலில் போட்ட வ்யாஜ்யமானது கோர்ட்டாரால் முடிவுபெறாமல், வாதியின் ஸ்வயேச்சையான கார்யத்தால் முடிவு பெற்றதனால், காலாவதியாகிப்போன தொகைகளை அடைய அவருக்கு பாத்யதை கிடையாது.—2 லா வீக்லி 1002.

## Alienation by a Daughter.

**புத்ரீ ஸொத்தைப் பராதீனம் செய்வது.**—ஒரு ஹிந்து புத்ரனில்லாமல் இறந்துபோனதன்மேல் அவருடைய ஸொத்துக்கள் அவருடைய புத்ரிவசமாயின. அவள், சிலபேர்களுடன் ராஜி செய்துகொண்டு, தனது ஸொத்தில் சிலவற்றைப் பராதீனம் செய்தாள். அப்படிப் பராதீனம் செய்ததற்கு பராதீனம் செய்தகாலத்தில் இருந்த ஒரே அனந்தரவார்ஸாகிய அவளுடைய வயது வந்த புத்ரனும் ஸம்மதம் கொடுத்திருந்தான். அப்படியானால் அவள் பராதீனம் செய்தது நல்லெண்ணத்துடன் செய்ததாகும். அதற்கு சட்டப்படி செல்லக்கூடிய காரணமும் இருந்ததென்று ஏற்படும். அப்படி யில்லையென்பதற்குத் தகுந்த அத்தாக்ஷியில்லாவிட்டால், அந்தப் பராதீனமானது, புத்ரி இறந்துபோன பிறகு அனந்தரவார்ஸு பாத்யம் பெற்றவரைக் கட்டுப்படுத்தும்.—2 லா வீக்லி 1025.

## Justice T. V. Seshagiri Aiyar.

**ஜட்ஜ் சேஷகிரி அய்யர்.**—சென்னை ஹைகோர்ட்டில் ஜட்ஜாக இருந்து தற்போது வைஸ்ராயின் நிர்வாக ஸபைக்குப் போயிருக்கும் ஸர் சங்கரன் நாயருடைய ஸ்தானத்தில் மிஸ்டர் டி. வி. சேஷகிரி அய்யர் காயமான ஜட்ஜாக நியமிக்கப்பட்டிருக்கிறார். இவர் இதற்கு முன்னால் டெம்பரரி ஜட்ஜாக இருந்தார்.

# PERSONAL NOTES.

## மனிதர்களைப்பற்றிய குறிப்புகள்.

### The Late Sir Henry Cotton.

காலஞ்சென்ற ஸர் ஹென்றி காட்டன்.—இங்க்லண்டில் இந்தியர்களுடைய க்ஷேமத்துக்காக உழைத்து வரும் இங்க்லீஷ் கனவான்களில் ஒருவராகிய ஸர் ஹென்றி காட்டன் இந்த மாஸம் இறந்துபோனாரென்று கேட்டு விஸனிக்கிறோம். ஸர் ஹென்றி காட்டன் 1845-ம் வர்ஷம் ஸெப்டம்பர் மாஸம் 13-ந் தேதி கும்பகோணத்தில ஜனனமானார். இவருடைய முழுப பெயர் ஹென்றி ஜான் ஸ்டெட்மான் காட்டன், காட்டன் வம்சத்தார் 5-தலைமுறையாக இந்தியன் ஸிவில ஸர்விஸ் உத்யோகத்தில் இருந்து வந்திருக்கிறார்கள். அவருடைய தகப்பனார் சென்னை ராஜதானியில் ஒரு ஸிவிலியன் உத்யோகஸ்தராக இருந்தார். ஸர் ஹென்றி காட்டனுடைய புத்ரர்களில் ஒருவர் கோதாவரியில் ஜில்லா ஜட்ஜாக இருந்துவருகிறார்

ஸர் ஹென்றி காட்டனுக்கு 3-வது வயஸு நடந்து கொண்டிருந்தபோது, அவர் இங்க்லண்டுக்கு அனுப்பப்பட்டார். அங்கே சில கலாசாலைகளில் வாசித்து தேர்ச்சியடைந்து ஸிவில் ஸர்விஸ் பரீக்ஷையிலும் தேறி 1867-ம் வர்ஷத்தில் உத்யோகம் செய்ய இந்தியாவுக்கு வந்தார். அவர் முதலில் வங்காளத்தில் மிட்னபூரில் அஸிஸ்டெண்ட் கலெக்டராக வேலை பார்த்தார். பிறகு படிப்படியாக ஸ்மால்காஸ் கோர்ட் ஜட்ஜாகவும், கவர்ன்மெண்ட் அண்டர் ஸெக்ரெடரியாகவும், கல்கத்தா ஹைக்கோர்ட் ரெஜிஸ்ட்ராராகவும், போலீஸ் கமிஷனராகவும், வேலை பார்த்துவந்தார். பிறகு காலக்ரமத்தில் உத்யோகத்தில் உயர்ந்து அஸ்ஸாம் மகாணத்தின் சீப் கமிஷனராக வேலை பார்த்தார். ஸர் ஹென்றி காட்டன் ஜனங்களிடத்தில் அனுதாபம் உள்ளவர். அஸ்ஸாமில் வேலை பார்த்தபோது முக்யமாய் தோட்டங்களில் கூலிவேலைசெய்யும் கூலியாட்களை ஆதரித்துவந்தார். இதனால் அவருக்கும் அநேக இங்க்லீஷ்காரர்களுக்கும் மனஸ்தாபம் நேர்ந்தது. அப்போது லார்ட் கர்ஸன் வைஸ்ராயாக இருந்தார். அவருக்கும் ஸர் ஹென்றி காட்டனுக்கும் அபிப்ராய பேதம் ஏற்பட்டதால், இருவருக்கும் பிடிக்காமல்போய் 1902-ம வர்ஷத்தில் ஸர் ஹென்றி காட்டன் பென்ஷன் பெற்றுக்கொண்டு உத்தியோகத்தி லிருந்து விலகி இங்க்லண்டுக்குப் போனார். இங்க்லண்டில் அவர் சிறிது காலம் பார்லிமெண்டில மெம்பராக இருந்து இந்தியர்களுக்காக உழைத்துவந்தார். 1904-ம வர்ஷத்தில் பம்பாயில் நடந்த காங்க்ரெஸுக்கு ப்ரெஸிடெண்டாக இருந்தார்.

1902-ம் வர்ஷத்தில் அவருக்கு கே. ஸி. எஸ். ஐ. பட்டம் கொடுக்கப்பட்டது. அவர் ப்ரிட்டிஷ் காங்க்ரெஸ் கமிட்டியில் ஒரு மெம்பராக இருந்துவந்தார். இந்தியர்களுடைய க்ஷேமத்துக்காக உழைத்துவந்த அவர் இறந்துபோனது இந்தியாவுக்கு ஒரு பெரிய நஷ்டமாகும்.

### General Alexieff.

ஜெனரல் அலெக்ஸியெப்.—கிழக்குப் போர்முகத்தில் ரஷ்ய ஸைன்யங்களை நடத்திவந்த க்ராண்ட் ட்யூக் நிகலஸ் காகஸஸ் ப்ரதேசத்துக்கு வைஸ்ராயாகவும், ஸேனாதிபதியாகவும் அனுப்பப்பட்டபிறகு அவருடைய ஸ்தானத்துக்கு ஜெனரல் அலெக்ஸியப என்னும் தளகர்த்தர் வந்திருக்கிறார் தற்போது ரஷ்ய ஸைன்யங்களின் தலைமையை ரஷ்ய சக்ரவர்த்தியே நிர்வகித்து வருகிறார். ஜெனரல் அலெக்ஸியப் அவருக்குக்கீழே முக்ய ராணுவ அதிகாரியாக இருந்துவருகிறார்.

இவர் 1843-ம வர்ஷம் ஜனனமானார். இவர் உயர்ந்த அந்தஸ்துள்ள வம்சத்தில் பிறக்கவில்லையாகையால் இவர் சீக்ரம் உயர்ந்த பதவியை அடையவில்லை. இவர் ஸெண்ட்பீடர்ஸ்பர்க்கிலுள்ள கப்பல்படை ஸ்கூலில் சேர்ந்து பயிற்சியடைந்து, கப்பல் படையில் சேர்ந்தார். இவர் கப்பல் படையில் சில சீர்திருத்தங்கள் செய்தார். முக்யமாய் ரஷ்ய மாலுமிகளினிடம் ப்ரபலமாயிருந்த குடிவழக்கத்தை நிறுத்த முயற்சிசெய்தார். இவர் ரொம்ப கண்டிப்பானவர். குற்றம் செய்தவர்களை தயாதாக்ஷிண்யமின்றி கடுமையாய் தண்டித்துவருவார்.

இவர் தமது மனஸை தக்கவிதம அடக்கி ஸ்வாதீனப்படுத்துவதில் பேர்போனவர். அகத்தினழகு முகத்தில் தெரியுமெனனும வாக்யத்துக்கு விரோதமாக, இவர் தமது மனதிலுள்ள எண்ணங்கள் பிறருக்குத் தெரியாதபடி அவைகளை அடக்கி மறைத்துக்கொள்வதிலும, அனாவச்யமாகப் பேசாமல் இருப்பதிலும ஸமர்த்தர்.

### Sir Harcourt Butler.

ஸர் ஹார்கோர்ட் பட்லர்.—வைஸ்ராயின் நிர்வாக ஸபையில கல்வி மெம்பராகவிருந்த ஸர் ஹார்க்கோர்ட் பட்லர் பர்மாவின லெப்டினண்ட் கவர்னராக நியமிக்கப்பட்டிருக்கிறார்.

# SOCIETY AND RELIGION.

# ஜன ஸமூகமும் மதமும்.

## The Aryan Brotherhood Conference.

ஆர்ய ஸஹோதரத்வ கான்பரேன்ஸ்.—பம்பாயில் ஆர்ய ஸஹோதரத்வ ஸங்கமென்ற ஒரு ஸங்கம் 1910-ம் வர்ஷத்தில் ஸர் நாராயண சந்தாவர்க்கர், ஸர் ராமக்ருஷ்ண பந்தர்க்கர் முதலிய ப்ரமுகர்களால் ஸ்தாபிக்கப்பட்டது. அந்த ஸங்கத்தின் கான்பரென்ஸ் ஸமீபத்தில் பம்பாயில் கூடிற்று. அந்தக்கான்பரென்ஸைத்திறந்து வைத்துப்பேசிய ஸர் நாராயண சந்தாவர்க்கர் ஜாதிப்பிரிவினையால் இந்தியாவுக்கு நேரிடும் கெடுதிகளைபபற்றிப் பேசினார்.

முதலில் அவர் தென்னாபரிகா போன்ற குடியேற்ற நாட்டார் இந்தியர்களை ஜாதி விலக்கு செய்யப்பட்டவர்களை யொப்ப ப்ரிட்டிஷ் குடிகளுக்குரிய ஸ்வதந்தரங்களுக்கு அவர்களுரியரல்ல ரென்று நினைத்து அவர்களை நடத்துகிறார்களென்றால, நாம் நமது தேசத்திலேயே நம்மைச் சேர்ந்தவர்களை எபபடி நடத்துகிறோமென்றார். குடியேற்ற நாடுகளிலே அன்யர்கள் நம்மவர்களை அநீதமாய் நடத்துகிறார்கள். இந்தியாவிலோ நாம் நம்மவர்களையே ஜாதிப பிரிவினை செய்து அநீதமாய் நடத்துகிறோம். அயல் நாடுகளில் நம்மவர்களுக்கு ஏற்பட்டுள்ள முறைபபாடுகளைப்பற்றித் துக்கிக்கும் நாம் நம் நாட்டிலேயே நம்மவர்களுடைய முறைப்பாடுகளைப்பற்றி வருத்தப் படுவதேயில்லை. இந்தியாவின் பொருளாதாரங்களையும் தொழிலாதாரங்களையும் பெருக்கி இந்தியாவை உயர்த்த விரும்புகிறோம். ஆனால் இந்தியாவில் தொன்று தொட்டு ஏற்பட்டிருக்கும் ஜாதிப்பிரிவினை நமது தொழிற் பெருக்கத்துக்கு ஒரு பெரிய இடையூறு கட்டையாயிருந்து வருகிறது. இந்தியா ஒரு கண்டமாகுமென்று சொலலும்படி அவ்வளவு பெரிய தேசமாயிருபபதால், அதில் ஒரு ஜனம் என்ற ஜாதிக்கட்டு ஏறபடுவது அஸாத்யமென்று பலர் இன்னும் எண்ணிவருகிறார்கள். ஆனாலும் இபபோதைய யுதத நெருக்கடியில குலமும், மதமும, பாஷையும், ஜாதிக்கட்டுக்கு அடையாளங்களல்லவென்றும், ஸமூகப் பொதுவுணர்ச்சிகளும் ராஜீயப் பொது உணர்ச்சிகளுமே ஜாதிக்கட்டுக்கு அடையாளங்களென்றும தெரிந்துகொள்ளபபட்டு வருகிறது. இருநதாலும் ஜாதிப்பிரிவினை அச்சின்னங்களை உருக்குலைக்கும் தொத்து வ்யாதியாயிருந்து வருகிறது. ப்ரிட்டிஷ் குடிகள் என்ற முறையில் நாம் ஒருஜனத்தார் என்ற அபிபராயம் மேலாடி வருவதால் ஜாதிக்கட்டுணர்ச்சி நம்மில் சிறுகச் சிறுகப் பலப்பட்டு வருகிறது என்று ஸர் நாராயண சந்தாவர்க்கர் பேசினார்.

கான்பரென்ஸின் ப்ரெஸிடெண்டாக இருந்த ஸர் ராமக்ருஷ்ண பந்தர்க்கர் தமது ப்ரஸங்கத்தில் மேல்நாட்டிலும் பண்டைக்காலத்தில் இப்போது இந்தியாவிலிருப்பதுபோலவே ஜாதி வேற்றுமைக ளிருந்தனவென்றும், ஆனால் தேச உணர்ச்சியும் ராஜீய உணர்ச்சிகளும் வ்ருத்தியாகவே ஜாதி வேற்றுமைகள் குறைந்துபோயின வென்றும், ஆனால் இந்தியாவில் தேச உணர்ச்சியும், ராஜீய உணர்ச்சியும ஏற்படாததால் ஜாதிவேற்றுமைகள் ரொம்பவும் வ்ருத்தி யடைந்து பலத்துவிட்டனவென்றும், இந்தியாவானது ப்ரிட்டிஷ் ராஜ்யத்தின் மற்ற பாகங்களோடு ஸ்நேகமுள்ள பாகமாக ஆவதற்கு இந்தியர்கள் ஒரே மனமுடையவர்களாக ஆகவேண்டுமென்றும், இதற்கு ஹிந்துக்களுக்குள் ஜாதி வித்யாஸத்தைத் தொலைத்து ஹிந்துக்களுக்கும் மகம்மதியர்களுக்கும் ஐக்யபாவம் ஏற்படும்படி செய்ய வேண்டுமென்றும் பேசினார்.

## Early Marriage.

பால்யவிவாகம்.—பம்பாயிலுள்ள சில ஜாதிகளில், பெற்றோர்கள் மாப்பிள்ளைகளிடமிருந்து பணம் ஸம்பாதிப்பதற்காக தங்களுடைய பெண்களையும், தங்களுடைய ஆதீனத்திலுள்ள சிறுபெண்களையும் அவர்கள் ரொம்ப சிறியவர்களா யிருக்கும்போதே, கல்யாணம் செய்து கொடுத்துவிடுகிறார்களாம். இவ்வழக்கம் வரவர அதிகரித்து வருகிறதாம். சிலஸமயங்களில் பெற்றோர்கள் தங்களுடைய பெண்களினுடைய இஷ்டத்துக்கு விரோதமாக கல்யாணம் செய்துகொடுத்து விடுகிறார்களாம் ஸமீபத்தில் பம்பாயில் ஸுமார 5,000 ஹிந்துக்கள் ஒரு மீட்டிங்கில்கூடி இந்த வழக்கத்தைக் கண்டித்துப்பேசினார்கள். மீட்டிங்குக்கு வந்திருந்தவர்களில்சிலர் பால்யவிவாகத்தைத் தடுகக கவர்ன்மெண்டார் ஒரு சட்டம் செய்யவேண்டுமென்று சொனனார்கள், இந்த வழக்கத்தை முறறிலும் தடுக்கத்தக்கவழி தேடவேண்டுமென்று அநத மீட்டிங்கில் தீர்மானம் செய்யப்பட்டது.

# HINTS AND RECIPES.

# யுக்திகளும் முறைகளும்.

### Reviving Faded Flowers.

வாடின புஷ்பங்களை புதியவைபோல் செய்தல்.—சில ஜனங்கள் வீடுகளில் மேஜைமேல் அலங்காரமாக பூங்கொத்துகளை வைபபதுண்டு. இந்தப் புஷ்பங்கள் வாடிப்போனால், இவைகளை எறிந்துவிடுகிறார்கள். மேலும் வெளியூரிலிருந்து வரும் புஷ்பங்களை கட்டியனுப்பும்போது வேண்டிய வளவு ஜலம் தெளிக்காததால் அவைகள் வாடியிருப்பதுண்டு. இவைகளை வெகுவாய் உபயோகிப்பதில்லை. வாடின புஷ்பங்களை எறிந்துவிடாமல் சில உபாயங்களால் புதியவைபோல் செய்து மறுபடியும் உபயோகிக்கலாம். ஒவ்வொரு புஷ்பம் அல்லது புஷ்பக்கொத்தின் அடிக்காம்பில் சிறிதளவு நறுக்கிவிட்டு, ரொம்ப சூடான (ஆனால் கொதித்துக்கொண்டிராத) ஜலத்தை ஒரு கிண்ணத்தில் வார்த்து, அந்த ஜலத்தில் புஷ்பங்களின் காம்புகளை வைககவும். அரைமணிநேரங்கழித்து ஜலம் நன்றாய்க் குளிர்ந்துபோனவுடன் புஷ்பங்கள் அன்று மலர்ந்தன போலிருக்கும். இவைகளை கொஞ்சம் சுத்த ஜலமுள்ள பாத்ரத்தில வைத்திருந்தால் வெகு நோம் கெடாமலிருக்கும். அந்த சுத்த ஜலத்தில் ஸோடாமா ஒரு சிட்டிகை சோத்தால் புஷ்பக்காம்புகள் ஸோடாவின் உதவியால் ஜலத்தை க்ரஹித்துக்கொண்டு புஷ்பத்தை வாடாமல் காபபாற்றும்.

### To Get rid of Cockroaches.

கரப்புகளை ஒழிக்க.—கரப்புகள் அதிகமாயுள்ள இடங்களில் ஒரு பாகம் வெண்காரத்தைப் பொடி செய்து, அதோடு மூன்று பாகம் சோகலேட் மிட்டாயைப் பொடி செய்து சேர்த்து தூவினால், கரபபுகளின் உபத்ரவம் நீங்கும். வெண்காரத்தை தனியாகப் பொடி செய்தும் தூவலாம்.

வெல்லத்தையாவது சர்க்கரையையாவது பாகு காய்ச்சி அதில் வெண்காரத்தைத் தூள்செய்து போட்டு கரப்புகள் நடமாடும் இடத்தில் வைத்து வருவதாலும் கரப்பு களின் உபத்ரவம் நீங்கும்.

தகரத்தால் 3-அங்குல உயரத்துக்கு மூடியில்லாத ஒரு பெட்டி செய்து, அதன் உள்புறத்தில் காற்ற மெடுத்த வெண்ணெயையாவது, நெய்யையாவது தடவி கரப்புகள் உள்ள இடத்தில் இரவில் வைத்துவிட்டால் அவைகள் அதில் வந்து விழும். பெட்டியின் உள்பக்கங்களில் நெய் தடவியிருப்பதால் வழ வழப்பாயிருக்கும். இதனால் கரப்புகள் வெளியே தப்பியோட முடியாது மறுநாள் காலையில் பெட்டியை எடுத்து சுடுதண்ணீருள்ள பாத்ரத்தில் உதறினால் கரப்புகள் வெந்நீரில் விழுந்து சாகும். மறுபடியும் அடுத்த ராத்ரி புதிதாக வெண்ணெய் அல்லது நெய் தடவாமலே பெட்டியை உபயோகப்படுத்தலாம்.

### Treatment of Burns.

நெருப்புப் புண்களுக்கு சிகித்ஸை.—தேகத்தின் எதாவது பாகத்தில் நெருப்புப்பட்டு, புண்ணானால், உடனே ஸோப்பைக்கொண்டு சுத்தம் செய்தால் வலி தீர்ந்துவிடும். பிறகு புண்ணின்மேல் லின்ஸீட் எண்ணெயைத் தடவி அதன்மேல் கோதுமை மாவைத் தூவவும். லின்ஸீட் எண்ணெயும் மாவும் சேர்ந்து கெட்டியாகி உலர்ந்தவுடன் மறுபடியும் எண்ணெயும் மாவுமாகப் போட்டுவரவும். தோல் நன்றாய் மூடிப் போகும்வரையில் இப்படிப் போடவேண்டும், பிறகு அந்த மா தானாகக்காய்ந்து கீழே விழுகிற வரையில் அதை ஒன்றும செய்யக்கூடாது. இபபடிச் செய்தால் புண் ஆறி புதுத்தோல் உண்டாகும்போது புண்ணின் தழும்பு ஒன்றுமிருக்காது.

### To Clean Dirty Carpets and Flannel.

அழுக்குக் கம்பளங்களையும் ப்ளானல்களையும் சுத்தம் செய்ய.—அழுக்கான கம்பளங்களை நன்றாய் உதறி பிறகு அவைகளை மாசிக்காய் அரைத்து கலக்கியிருக்கும் தண்ணீரில் நனைக்கவும். உடனே அவைகளைக் கசக்கி அலசி ஆறப்போடவும். இப்படிச்செய்தால் கம்பளங்கள் சுத்தமாயும் பளபளப்பாயும் இருக்கும். ப்ளானல்களை சுத்தம்செய்ய, வடித்த கஞ்சியைத் தனியாக எடுத்து வைத்து, கைபொறுக்கிற சூடாயிருக்கும்போது ப்ளானல்களை நன்றாய் ஊறவைத்து துவைக்கவும்.—பெண் கல்வி

### Cleaning Iron Bedsteads.

இரும்புக் கட்டில்களை சுத்தஞ்செய்ய.—ஒரு கிண்ணம்பாலில் ஒரு தேயிலைக்கரண்டி டர்ப்பெண்டைன் எண்ணெயைக் கலந்து ஒரு சுத்தமான துணியில் எடுத்து இரும்புக் கட்டிலின் பாகங்களின்மேல் தடவிப்பிறகு ஒரு ப்ளானல் துணியால நன்றாய்த் தேய்க்கவும்.

# AGRICULTURE.

# விவஸாயம்.

## Rhinoceros Beetle.

தென்னம் வண்டு.—இது கருப்பு நிறமான பெரிய வண்டு. இது தென்னோலைக் குருத்து விரியுமுன், அதையும் பாளையின் அடிப்பாகத்தையும் தின்று அவைகளின் வழியாக மரத்தின் மிருதுவான பாகத்துக்குப் போய், அதையும் தின்று நாசப்படுத்துகிறது. தென்னம் வண்டு பீடித்த மரங்கள் வெகுவாய்ப்பட்டுப் போகின்றன. அப்படிப்பட்டுப் போகாமலிருந்தாலும், மரம் நோய்ப்பட்டது போலிருந்து நல்ல பலன் கொடுப்பதில்லை.

பெண்வண்டு ராத்ரிக் காலங்களில் சாணிக் குவியல்களிலும் அழுகிக்கொண்டிருக்கும் தாவரப்பொருள்களிலும் முட்டையிடுகிறது. அது தடவைக்கு ஸுமார் 10-முட்டைகள் இடும். முட்டைகளிலிருந்து வெண்மையான புழு உற்பத்தியாகிறது. இந்தப்புழு அழுகிப் போன வஸ்துக்களைத்தின்று ஜீவித்து ஸுமார் 3-அங்குலம் நீளம் வளருகிறது. அதற்குப் பிறகு சிறிது காலத்துக்கெல்லாம் வண்டாக மாறி தென்னை பனை மரங்களைத் தாக்குகிறது. இந்த வண்டுகள் ஸாதாரணமாக ஏப்ரல் மாஸம் முதல் நவம்பர் மாஸம் வரையில் தான் அதிகமாக இருக்கின்றன. இந்த வண்டுகளைத் தொலைக்க நவம்பர் மாஸக்காலத்தில் சாணிக் குவியல்களைப் பரிசோதித்து அவைகளிலுள்ள வண்டுகளை நாசம் செய்யவேண்டும். வண்டுகள் ராத்ரிக் காலங்களில் வெளிச்சமிருக்கும் இடத்தை நோக்கி வருமாகையால், ராத்ரிககாலங்களில் விளக்குப் பொறி வைத்துப் பிடித்து விடலாம். இதன் விவரத்தை சென்ற மாஸத்து 'ஜனோபிமானி' யில் பயிரும் பூச்சிகளும் என்ற வ்யாஸத்தில் கண்டு கொள்ளலாம். இதற்கு காற்றில் அணையாத ஹரிக்கேன் லாம்ப் என்னும் லாந்தலை உபயோகிக்க வேண்டும். விளக்குக்கு அடியிலுள்ள தண்ணீர்ப பாத்ரத்தில் கிரஸின் எண்ணெயும் ஜலமும் கலந்து வைக்கலாம். பெரிய தென்னந் தோப்புகளில் இரவில் நெருப்பு மூட்டினால் வண்டுகள் வெளிச்சத்தைக் கண்டு வந்து நெருப்பில் விழுந்து சாகும். மரத்திலுள்ள வண்டுகளை கெட்டியான கம்பிகளால் குத்தி வெளியிலெடுத்து, அந்த த்வாரத்தில் காய்ந்தபுல்லை கீல் எண்ணெயில் தோய்த்து அடைக்க வேண்டும்.

## Raising Tobacco Seedlings.

புகையிலையை நாற்று விடுதல்.—புகையிலையை நாற்றுவிடுவதற்கு நாற்றங்கால் நல்ல செழிப்புள்ளதாயும், நீர் தேங்காததாயும் இருக்கவேண்டும. நாற்றங்காலை எப்படித் தயார்செய்யவேண்டு மென்பதைப்பற்றி 'கமத்தொழில் விளக்கம்' சில குறிப்புகள் எழுதுகிறது.

தேங்காய் மட்டை அல்லது பழைய விறகுகளை நாற்றங்காலில் அடுக்கி நெருப்புமூட்டி எரித்தால், புகையிலைச் செடிக்கு வேண்டிய பொடாஷ் என்னும் மா உணவு ஸத்து நிலத்தில் சேரும. மேலும் நெருப்பு மூட்டுவதால் நிலத்திலுள்ள புழுப்பூச்சிகளின் முட்டைகளும் புல்பூண்டுகளின் விதைகளும் நாசமாகின்றன. மண்ணில் சாம்பல் நன்றாய்க் கலக்கும்படி நிலத்தை நன்றாய்க் கொத்திவிடவேண்டும்.

சாம்பல் நிலத்திற்கு நல்ல எருவாயிருப்பதோடு மண்ணையும் புலபுலப்பாக்குகிறது. நிலத்தைக் கொத்தி, மண் கட்டிகளை உடைத்து தூளாக்கி நிலத்தை ஸமனாகச் செய்யவேண்டும்.

நாற்றங்காலுக்கு நன்றாய் மட்கின பழைய எருவையே உபயோகிக்கவேண்டும். எரு அதிக காலம் மட்கியிருந்தால் அதிலிருக்கக்கூடிய புல்பூண்டுகளின் விதைகள் அழுகிப்போயிருக்கும்

புகையிலை விதைகளில் நல்ல காத்ரமாயிருப்பவற்றையே விதைக்கவேண்டும. விதைகளைக் காற்றில் தூற்றி லேசான விதைகளைப் பிரித்தெடுத்து கனமான விதைகளையே உபயோகிக்கவேண்டும். 45-சதுர அடி உள்ள பாத்திக்கு ஒரு தேயிலைக் கரண்டி விதை போதுமானது. விதைப்பதற்குமுன் விதைகளை சாம்பலோடு கலந்து தெளிப்பது நல்லது. அப்போது விதைகள் பாத்தியில் பரவலாய் விழும்.

பாத்தியின் பக்கங்களில் களைகள் இல்லாதபடி பார்த்துக்கொள்ளவேண்டும் அவைகள் இருந்தால் பூச்சி புழுக்கள் அவைகளிடம் தங்கியிருந்து, புகையிலை முளைத்தவுடன், பயிரை நாசம் செய்யும். இதே காரணத்தை உத்தேசித்து பாத்தியில் நிழலுக்காக ஓலை முதலியவைகளைப் போட்டு வைப்பதற்கு பதிலாக அவைகளைப் பாத்தியின்மேல் பந்தலாகப் போட்டுவைத்தால் புழுப்பூச்சிகளின் உபத்ரவம் அதிகமாக ஏற்படாதென்று சொல்லலாம்.

# CO-OPERATION.

# கோவாபரேஷன்.

## Co-operative Dairy Farming.

கோவாபரேடிவ் பால் சாலை.—பம்பாய் கோவாபரேடிவ் ஸங்கங்களின் அஸிஸ்டெண்ட் ரெஜிஸ்ட்ராகிய மிஸ்டர் கோன்ஹாலி என்பவர் கோவாபரேடிவ் பால் சாலை ஸ்தாபிப்பது விஷயமாக சில விஷயங்கள் சொல்லுகிறார். பால் விற்பனைக்காக மாடுவைத்துக்கொண்டு ஜீவிக்கும இடையர்களை ஒன்றுசேர்த்து கோவாபரேடிவ் ஸங்கங்கள் ஸ்தாபிக்கவேண்டும் பாலைக்கறப்பது, சேர்த்துவைப்பது, விற்பது முதலிய வேலைகளை ஸாதாரண முறைகளிலேயே செய்யலாம். ஆனால் இந்த வேலைகளை ஸெக்ரெடரியின் மேற்பார்வையில் செய்ய வேண்டும். பாலை ஐக்ய முறையிலேயே விற்கவேண்டும. அப்பொழுதுதான் பாலை ஜனங்களுக்கு ஸ்வயமாய் கலப்படமில்லாமல் விற்கக்கூடும். முனிஸிபாலிடிகள் பட்டணங்களில் நல்ல பால் கிடைக்கச்செய்வதற்கு ஏதாவது ஏற்பாடுகள் செய்வதாயிருந்தால், அவைகள் பின்வரும் வேலைகளைச்செய்யவேண்டும். பட்டணங்களிலுள்ள இடையர்களை ஒன்றுசேர்த்து ஒன்று அல்லது அதற்கதிகமாக கோவாபரேடிவ் ஸங்கங்கள் ஸ்தாபிக்க வேண்டும். மாடுகளை பட்டணத்துக்கு வெளியில் கட்டி வைக்கும்படி ஏற்பாடு செய்யவேண்டும, பட்டணத்துக்குப் பக்கத்திலுள்ள க்ராமங்களிலிருந்து பட்டணத்துக்குப பால் விற்பனைக்கு வந்தால், அந்த க்ராமங்களில் முக்யமானவற்றுள் கோவாபரேடிவ் பால் ஸங்கங்கள் ஸ்தாபிக்கவேண்டும். எல்லா ஸங்கங்களுக்கும் பொதுவாக ஒரு பால் விற்பனை ஸங்கம் ஸ்தாபிக்கவேண்டும. இடையர்கள் ஸங்கங்களுக்காக மாட்டுக் கொட்டில்கள் கட்டிக்கொடுக்கவேண்டும். க்ராம ஸங்கங்களுக்கு பால் கறக்கும கொட்டகைகள் கட்டிக்கொடுக்க வேண்டும,

## A Vegetable Growers' Association.

கறி காய் பயிர் செய்வோரின் ஸங்கம்.—மார்கெட்டில் விற்கப்படும் கறி காய்களைப பயிர் செய்பவர்களுக்காக சில தினங்களுக்கு முன்னால பெங்களூரில் ஒருகோவாபரேடிவ் ஸங்கமஸ்தாபிக்கப்பட்டதாக தெரிகிறது. இந்த ஸங்கத்தில் சேரும மெம்பர்கள் தலைக்கு ரூபா 5-வீதம் பங்கு வாங்கவேண்டுமென்றும, 20-பங்குக்கு அதிகமாய ஒருவரும் பங்கு வாங்ககூடாதென்றும் நிபந்தனை செய்யப்பட்டிருக்கிறது. இந்த ஸங்கத்தின உதவியால் கறிகாய்த் தோட்டங்கள் அபிவ்ருத்தியாகி ஸாதாரண கறிகாய்களும், முக்யமாய் உருளைக்கிழங்கும பழவகைகளும பயிர் செய்யப்படுமென்று சொல்லப்படுகிறது.

## Co-operation in Travancore.

திருவாங்கூரில் கோவாபரேஷன்—திருவாங்கூரிலுள்ள கோவாபரேடிவ் ஸங்கங்களின் ரெஜிஸ்ட்ரார், ஸங்கங்கள் ஸ்தாபிக்கும் விஷயத்தில் சில புது முறைகளைக் கைக்கொள்ளப்போகிறார். அவர் முதலில் ஸங்கங்கள் ஸ்தாபிப்பதற்கேற்றதான ஸ்வல்ப விஸ்தீரணமுள்ள ஒரு ப்ரதேசத்தில் ஒரு குறிப்பிட்டகாலத்துக்குள் 12-முதல் 20-வரையில் ஸங்கங்கள் ஸ்தாபிக்க வேண்டுமென்று சொல்லுகிறார். இப்படி ஒரு குறிப்பிட்ட ப்ரதேசத்தில் சில கோவாபரேடிவ் ஸங்கங்கள் ஸ்தாபிப்பதன் நோக்கமென்னவென்றால் கவர்ன்மெண்டார் தமது மேற்பார்வையைக் கூடியமட்டும் குறைப்பதும், ஸங்கங்களுக்கு திறமை ஏற்பட்டதும், அவைகளைக்கொண்டே அவைகளுடைய கணக்குகளை தணிக்கைசெய்து நடவடிக்கைகளை மேற்பார்வைசெய்து கொள்ள ஏற்பாடு செய்வதுமே ;இதற்கு ஸங்கங்கள் ஒன்றுசேர்ந்து தங்களுக்குப் பொதுவாக ஒரு யூனியன் ஸ்தாபித்துக் கொள்ளவேண்டுமாம். இந்த யூனியன் தான் பிற்காலத்தில் ஸங்கங்களின் கணக்குகளைத் தணிக்கைசெய்து, அவைகளின் நடவடிக்கைகளை மேற்பார்வை செய்யும்.

ரெஜிஸ்ட்ரார் செய்யப்போகிற இரண்டாவதுவேலையாவது ஜனங்களுக்கு கோவாபரேஷனைப்பற்றிய கொள்கைகளையும் முறைகளையும கற்பிப்பது. அவர், தெரிந்தெடுக்கப்பட்ட ஒவ்வொரு ஸ்தலத்திலும் ஸங்கம் ஸ்தாபித்து ரெஜிஸ்டராகிறவரையில அந்த இடங்களுக்குப்போய் முயற்சிசெய்து வருவார்.

இன்னும அவர், மற்ற டிபார்ட்மெண்டுகளிலுள்ள உத்யோகஸ்தர்கள கோவாபரேடிவ் முயற்சிவிஷயத்தில் ரொமப அனுதாபம் காட்டவேண்டுமென்றும் க்ராமப பள்ளிக்கூடத்து உபாத்யாயர்கள் இந்த ஸங்கங்களில் சேர்ந்துகொள்வதைபபற்றி ஏதாவது ஆக்ஷேபணைகள இருந்தால் அவைகளை நீக்கிவிடவேண்டுமென்றும் அபிப்ராயப்பட்டிருக்கிறார்.

ரெஜிஸ்ட்ராருடைய மேற்சொன்ன பரோரணைகளை திருவாங்கூர் கவர்ன்மெண்டார் ஏற்றுக்கொண்டிருக்கிறார்கள்,

# COMMERCE.

# வ்யாபாரம்.

## Helping Minor Industries.

சிறுதொழில்களுக்கு உதவிசெய்தல்.—ஐக்ய மாகாண கவர்ன்மெண்டார் அந்த மாகாணங்களில் சிறு கைத்தொழில்களில் அமர்ந்துள்ளவர்களுக்கு உதவியாக சில ஏற்பாடு செய்யத் தீர்மானித்திருக்கிறார்கள். சிறுதொழிலாளிகளுக்கு தங்களுடைய ஸாமான்களை விற்கவேண்டிய ஸௌகர்யங்களில்லாமையால், அந்தந்த ப்ரதேசத்து ஸாமான்களை அந்தந்த ப்ரதேசத்திலேயே விற்கவேண்டியிருக்கிறது. அவர்களுக்கு போதுமான மூலதனமில்லாமையால் அவர்கள் தங்கள ஸாமான்களை ஐரோப்பா, அமெரிக்கா ஆகிய அன்ய தேசங்களுக்கு ஏற்றுமதி செய்யவாவது, இந்தியாவிலேயே நன்றாய் விலைபோகக்கூடிய வேறு இடங்களுக்கு அனுப்பி அதிகலாபத்திற்கு விற்கவாவது முடிவதில்லை. இன்னின்ன இடங்களில் இன்னின்ன ஸாமான்கள் செய்யப்படுகின்றன என்று பொதுஜனங்களுக்குத் தெரியப்படுத்தினால் அவைகளுக்கு நல்ல கிராக்கி ஏற்படக்கூடும். இப்போது ஐக்ய மாகாண கவர்ன்மெண்டார் ஒவ்வொரு ஜில்லாவிலும் கௌரவ வ்யாபார நிருபர்கள் என்று சில கனவான்களை நியமிக்கப்போகிறார்கள். இந்த கனவான்கள் அந்தந்த ஜில்லாக்களில் உள்ள கைத்தொழில்களை அபிவ்ருத்தி செய்வது விஷயமாய் என்னென்ன செய்யவேண்டுமோ அவைகளைப்பற்றி கைத்தொழில் டிரெக்டருக்குத் தெரிவிப்பார்கள்.

தொழிலாளிகளுக்கு உபயோகப்படக்கூடிய பல விஷயங்களை இந்த நிருபர்கள் மூலமாக தொழிலாளிகளுக்குத் தெரிவிக்க ஏற்பாடுகள் செய்யப்படும். வ்யாபாரச் சரக்குகளை எந்தவிடங்களில் கொண்டுபோய் விற்றால் அதிகலாபம் கிடைக்கும் என்பதைப்பற்றி ஆராய்ச்சிகள்செய்து அப்படியே வேறிடங்களில் விற்பதற்கும் வேண்டிய ஏற்பாடுகள்செய்ய முயற்சிசெய்வார்கள்.

## A Motor Car Company.

ஒரு மோட்டார்கார் கம்பெனி.—நாகப்பட்டணத்திலிருந்து திருவாரூருக்குப் போவதற்காக தென்னிந்தியா ரெயில்வே அதிகாரிகள் மோட்டார் வண்டி கம்பெனி ஒன்றை பரீக்ஷார்த்தமாக வைத்துப்பார்க்க உத்தேசித்து சென்ற மாஸம் மோட்டார் வண்டியை விட ஆரம்பித்தார்கள். நாகப்பட்டணத்திலிருந்து திருவாரூருக்கும், திருவாரூரிலிருந்து நாகப்பட்டணத்திற்கும் மோட்டார் வண்டிகள் விடப்பட்டன. இது அநுகூலமாகும் பக்ஷத்தில் தஞ்சாவூரிலிருந்து கும்பகோணத்திற்கும் மோட்டார் வண்டிகளை விட அக்கம்பெனியார் உத்தேசித்திருக்கிறார்கள். இந்த மோட்டார் வண்டிகள் ரெயில தண்டவாளத்தின் மீதே ஓட்டப்படும். இதனால் தஞ்சாவூரிலிருந்து கும்பகோணத்திற்கு இப்பொழுது ஓடிக்கொண்டிருக்கும் ஷட்டில் வண்டிகள் நின்று போகக்கூடும். இந்த மோட்டார் வண்டிகளில் 70-பேர் வரையிலும் உட்கார்ந்து ப்ரயாணஞ் செய்யலாம்.

## Tinnevelly-Tiruchendur Railway.

திருநெல்வேலி திருச்செந்தூர் ரெயில்வே.—இந்த மாஸம் 23-தேதி யன்று போர்ட் அப் ரெவின்யூ மெம்பராகிய மிஸ்டர் எல் இ. பக்லி, திருநெல்வேலிக்கும் திருச்செந்தூருக்கும் போடப்படும் ரெயில்வேயின் வேலைகளை ஆரம்பித்து வைத்தார். இந்த ரெயில்வேயை திருநெல்வேலி ஜில்லா போர்டார் ஸொந்தத்தில் போட்டு வைக்கிறார்கள். இதற்குப்பிடிக்கும் செலவு 17-லக்ஷம் ரூபாயாகும். இந்த ரெயில் பாதை போட்டு முடிந்ததும் இதை தென்னிந்திய ரெயில்வே கம்பெனியார் நிர்வகித்து வருவார்கள்.

## Business Enterprise in India.

இந்தியாவில் வ்யாபார ஊக்கம்.—இந்தியாவில் சென்ற ஆகஸ்ட் மாஸத்தில் அடியில்கண்ட விவரப்படி 12-ஜாயிண்ட் ஸ்டாக் கம்பெனிகள் ரெஜிஸ்டர் செய்யப்பட்டன.

| | | ரூ |
|---|---|---|
| 1 | அச்சடித்து ப்ரசுரம் செய்யும் கம்பெனி | 1,00,000 |
| 5 | வ்யாபாரக் கம்பெனிகள் (மேலே சொன்னவை தவிர) | 13,26,000 |
| 1 | பருத்தி மில் கம்பெனி | 2,00,000 |
| 1 | மாவரைக்கும் மில் கம்பெனி | 6,00,000 |
| 1 | மரமறுக்கும் கம்பெனி | 75,00,000 |
| 2 | தேயிலைத் தோட்டக்கம்பெனி | 2,00,000 |
| 1 | கிலங்கட்டிடக் கம்பெனி | 60,000 |
| 12 | மொத்தம் | 99,86,000 |

# ECONOMIC PRODUCTS.

## விலையுள்ள பொருள்கள்.

### Bamboo.

மூங்கில்.—மூங்கில் க்ராமவாஸிகளுக்கு ரொம்ப உபயோகமுள்ள ஒரு பயிர். இது அநேக வேலைகளுக்கு உதவுகிறது. ஆனால் இது அதிகமாயுள்ள காடுகளுக்கு ஸமீபத்தில் உள்ள பிரதேசங்களில்தான் ஏராளமாய் உபயோகிக்கப்பட்டு வருகிறது. காடுகளில் உள்ள மூங்கில்களை தூரமான இடங்களுக்குக் கொண்டுபோக அதிக செலவு பிடிப்பதால், அவ்விடங்களில் அதிகமாக உபயோகிக்கப்படுவதில்லை. மைஸூரில் 'கிரிபிதுரு' என்று பெயருள்ள ஒரு ஜாதி மூங்கில் பயிராகி வருகிறது. இது அநேகமாய் எல்லாவகை நிலங்களிலும் பயிராகக்கூடியது. ஸாதாரண மூங்கில்களோ நீர்த்தாங்கலான பள்ளங்களிலும், குளக்கரைகளிலும் மாத்ரம் விளையும். மைஸூர் தினுஸு அப்படியல்ல. விவஸாயிகள் தங்கள் தோட்டங்களில் இதை முப்பதடிக்கு ஒரு கொத்தாக வேலியோரங்களில் பயிரிடலாம். இது 20-முதல் 30-அடி உயரந்தான் வளரும். இதனால் தோட்டத்துப் பயிர்களுக்கு நிழல் கட்டாது. இதைப் பயிரிடும்போது ஆரம்பத்தில் இதன் இலைகளை ஆடு மாடுகள் தின்று அழித்துவிடாதபடி பார்த்துக்கொள்ள வேண்டும்.

### Artificial Butter Powder.

செயற்கை வெண்ணெய்ப் பொடி.—ஜெர்மானியர்கள் இயற்கைப் பொருள்களுக்கு பதிலாக செயற்கைப் பொருள்கள் கண்டுபிடிப்பதில் பேர்போனவர்கள். தற்காலம் யுத்தத்தில் உணவுப் பொருள்களின் விலை ரொம்ப உயர்ந்துவிட்டதனால், அந்த உணவுப்பொருள்களைப் போல் செயற்கை உணவுப் பொருள்கள் செய்வதைப்பற்றி அவர்கள் ரொம்ப கவனம் செலுத்திவருகிறார்கள். அவர்கள் தற்போது ஸ்வய வெண்ணெய்க்கு பதிலாக ஒரு நூதன பொடி கண்டுபிடித்திருக்கிறார்கள். அந்தப் பொடியில் 4 அணா விலையுள்ளதை அரைப்படி ஜலத்தில் சேர்த்துக்கரைத்தால் ஒரு ராத்தல் வெண்ணெய் கிடைக்கிறதாம். இந்த வெண்ணெய் ரொம்ப நேர்த்தியாயிருப்பதால் யாவரும் உபயோகிக்கலாமாம். செயற்கை வெண்ணெயுடன் ஸ்வய வெண்ணெயை சரிக்கு சரி கலந்து கொள்வது நல்லது. ஆனால் இப்படிச் செய்யவேண்டுமென்பது அவசியமானதல்ல. வ்யாபாரிகள் ஸ்வயவெண்ணெயுடன் விலை மலிவான செயற்கை வெண்ணெயைக் கலந்து விடக்கூடுமாதலால், ஆகாரங்களைச் சோதிக்கும் இன்ஸ்பெக்டர்கள் இது விஷயத்தில் ரொம்ப கவனமுள்ளவர்களாயிருக்கவேண்டுமாம்.

### Kapok Seed.

இலவம் விதை.—ப்ரான்ஸிலுள்ள மார்ஸெல்ஸில் இலவம் விதையிலிருந்து எண்ணெய் எடுக்கிறார்கள். இதற்கு வேண்டிய விதையின் பெரும்பாகம் இந்தியாவிலிருந்து போகிறது. மற்றவிதைகளிலிருந்து எண்ணெயெடுப்பது போலவே இதிலிருந்தும் எண்ணெய் எடுக்கிறார்கள். ஸாதாரணமாய் விதையிலிருந்து ஒரு தடவைதான் எண்ணெய் எடுக்கிறார்கள். சில ஸமயங்களில் முதல் தடவை எண்ணெயாட்டிய பிறகு, கிடைக்கும் பிண்ணாக்கில் வெந்நீரை ஊற்றி, மறுபடியும் மெஷீன்களில் கொடுத்து, எண்ணெ யிறக்குகிறார்கள். பிறகு எண்ணெயை வடிகட்டுகிறார்கள். எண்ணெயின் நிறத்தையாவது, வாஸனையையாவது போக்க எந்த வேலையும் செய்வதில்லை. மார்ஸேல்ஸில் விதையிலிருந்து 100-க்கு 15 பாகம் வீதம் எண்ணெய் கிடைக்கிறது. அங்கே இலவம் எண்ணெயைக் கைத்தொழில்களில் தான் உபயோகிக்கிறார்கள். அது முக்யமாய் ஸோப செய்வதில் உபயோகப்படுகிறது. பிண்ணாக்கு நிலத்துக்கு உரமாக உபயோகப்படுகிறது.

### Paper Shirts.

கடுதாசி ஷர்ட்டுகள்.—ஜபபானில் கடுதாசியினால் ஷர்ட் முதலிய உள்சட்டைகள் செய்கிறார்களாம். இந்த கடுதாசிகளில் ஜலம் ஊறுவதில்லையாம. இந்தக் கடுதாசி செய்வதில், இரண்டு மெல்லிய கடுதாசிகளை ஒரு ரகஸ்யமான பசையினால் ஒட்டிச் சேர்த்துக் காயவைக்கிறார்கள். காய்ந்த பிறகு, அவைகளை கொதிக்கும் ஜலத்தில் போடுகிறார்கள். ஜலத்தில் போடுவதால் பசை முழுவதும் கடுதாசிகளுக்குள் ஊறிக்கொள்கிறது. பிறகு கடுதாசியை எடுத்து, ஜலத்தில் அலம்பி மறுபடியும் மேற்சொன்ன ரகஸ்யப் பசையைத் தடவிக் காயவைக்கிறார்கள். இந்தக் கடுதாசிகள், துணிகள்போலவே 21 கஜம் நீளமும் 55 அங்குலம் அகலமும் உள்ள பீஸ்களாக செய்யப்படுகின்றன. இந்தக் கடுதாசிகளைக் கொண்டு, ஷர்ட், காலுக்கு உள்சட்டை முதலியவைகள் செய்யலாமாம.

# BOYS' PAGE.

# பையன்கள் பக்கம்.

## A Walking Tour round the world.

கால் நடையாக பூப்ரதக்ஷிணம்.—ஹாலண்ட் தேசத்தைச் சேர்ந்த இரண்டு பேர்கள் பந்தயம் போட்டுக்கொண்டு கால் நடையாக பூப்ரதக்ஷிணம் செய்து வருகிறார்கள். அவ்விதம் செய்தால் அவர்களுக்கு 12,000-ரூபாய் வெகுமதி கிடைக்குமாம். அவர்கள் ஸமீபத்தில் கல்கத்தாவுக்கு வந்தார்கள். பந்தயத்தின் நிபந்தனை என்னவென்றால் அவர்கள் ஒருவரையும் பண உதவிகேட்கக்கூடாது. ஆனால் தங்களுடைய போட்டோக்கள் உள்ள கார்டுகளை ஜனங்களுக்கு விற்று பணம் ஸம்பாதித்து தங்கள் செலவுக்கு வைத்துக்கொள்ளலாம். இந்தியாவிலிருந்து அவர்கள் ஆஸ்ட்ரேலியா, அமெரிக்கா, இங்க்லண்ட், ஆபரிக்கா, இட்டலி முதலிய இடங்களுக்குப்போய், அதற்குள் யுத்தம் முடிந்து போனால் ஆஸ்ட்ரியா, ஹங்கேரி, ரஷ்யா, ஸ்வீடன் நார்வே என்னும் தேசங்களுக்குப் போய்க் கடைசியில் தங்கள் ஜன்மதேசத்துக்குப் போவார்கள்.

## Two well known Wrestlers

இரண்டு பேர்பெற்ற மல்லர்கள்—மேல்கண்ட குறிப்பில் ப்ரஸ்தாபம் செய்திருக்கும் இரண்டு ப்ரயாணிகளில் ஒருவராகிய எம். ஏ. வான் டென் எண்டென் என்பவர் மல்யுத்தம் செய்வதில் ப்ரஸித்தி பெற்றவர். அவர் சென்ற செப்டம்பர் மாஸம் 12-ந் தேதி யன்று, கல்கத்தாவில் ப்ரபல மல்யுத்தக்காரராகிய மிஸ்டர் ஸுபோத க்ருஷ்ண போஸ் என்பவருடன் மல்யுத்தம் செய்தாராம். அந்த மற்போரில் மிஸ்டர் போஸ் ஜயித்தாராம். வான் எண்டன் ஹாலண்டிலுள்ள மல்லர்களில் முதன்மையானவர். ஐரோப்பா முழுவதும் அவருடைய பெயர் ப்ரபலமாய் விளங்கி வருகிறது. ஸமீபத்தில் அவர் ஜாவாவில் மல் யுத்தம் செய்து ஜயமடைந்து விருதுகள் பெற்றிருக்கிறார்.

மிஸ்டர் போஸ் இந்தியாவில் அநேக மல்லர்களுடன் போர் செய்து ஜயம் பெற்றிருக்கிறார். அவருடைய ப்ரதாபத்தைக்கேட்டு அநேக இங்க்லீஷ் மல்லர்கள் அவரை மற்போருக் கழைத்திருந்தார்களாம். அவர் இங்க்லண்டுக்குப் போக எண்ணியிருக்கையில் யுத்தம் நேர்ந்துவிட்டதால், அங்கே போக முடியாமல் போயிற்று. வான் எண்டனும், மிஸ்டர் போஸும் மறுபடியும் மல் யுத்தம் செய்வதாக இருந்தார்களாம். ஆனால் வான் எண்டன் சீக்ரம் இந்தியாவை விட்டுப் போக நேரிடவே, அவர், தாம் மிஸ்டர் போஸினிடம் தோற்றுப் போனதாக அவருக்கு ஒரு கடிதமெழுதி தமது விருதுகளையும் மெடல்களையும் அனுப்பினாராம்.

மிஸ்டர் போஸ் தமது திறமையை அபிவ்ருத்தி செய்து வருவதோடு அநேக வாலிபர்களையும் மல் யுத்தத்தில் பயிற்சி செய்வித்து வருகிறாராம். அவருக்கு ஸுமார் 200 சிஷ்யர்கள் இருக்கிறார்களாம். மிஸ்டர் போஸ் ஒரு உயர்ந்த வம்சத்தில் பிறந்தவர்.

## Swimming Babies.

நீந்தும் குழந்தைகள்.—அமெரிக்காவுக்கு மேற்கில் பஸிபிக் மகா ஸமுத்ரத்தில் உள்ள ஹாவெய் தீவுகளில் குழந்தைகளுக்கு நடக்கத் தெரிவதற்குமுன் நீந்தத் தெரியுமாம். இந்த விஷயத்தை முதல முதலில், ஹாவெய் தீவுகளிலிருந்து அமெரிக்காவுக்கு வந்த ஒரு ப்ரபு தெரிவித்தார்.

இவ்விஷயம் முற்றிலும் வாஸ்தவமென்று ஒரு அமெரிக்க பத்திரிகை தெரிவிக்கிறது. அமெரிக்காவிலும் அநேக குழந்தைகளுக்கு நீந்தத் தெரியுமாம். 5-வயஸுக்கும் குறைந்த குழந்தைகள் நன்றாய் நீந்துகின்றனவாம். 10-வயஸுப் பெண்கள் ரொம்ப வேகமாயும், அதிக நேரம் ச்ரமமில்லாமலும் நீந்துகிறார்களாம். 12 முதல் 15-வயஸு வரையிலுள்ள பையன்கள் வயஸு சென்றவர்களுடன் நீந்துவதில் போட்டிபோட்டு ஜயிக்கிறார்களாம்.

ஸமீபத்தில் பிலடல்பியாவில் 4½-வயஸுள்ளதும், 33-ராத்தல் நிறையும் 3-அடி உயரமுமுள்ளதுமான ஒரு பெண் குழந்தை யாதொரு ச்ரமமுமின்றி 13½-நிமிஷ நேரத்தில் 320 கஜம் நீந்திச் சென்றதாம்.

## Words of Advice.

நீதி மொழிகள்.—ஈவிரக்கமின்றி முரடனாயிருக்க வேண்டாம். தயைசெய்து, வந்தனம் என்ற சொற்களை அடிக்கடி சொல்ல ஒருபோதும் மறக்கக்கூடாது, ஒருவருக்கும் பொல்லாங்கு நினைக்கவேண்டாம். அன்பாகவே பேசவேண்டும். குழந்தைகள், கிழவர்கள், மெலிந்தவர்கள் ஆகிய யாவரையும் ஆதரிக்கவேண்டும். சண்டை சச்சரவு ஒருபோதும் வேண்டாம். அடக்கம் ஆயிரம் பெறும். ஸ்வய நலத்தையே பெரிதாகப் பார்க்கக் கூடாது. பரோபகாரமே பெரிது —விவேக போதினி.

# LADIES' PAGE.

## ஸ்த்ரீகள் பக்கம்.

### Female Education in India.

இந்தியாவில் பெண் கல்வி.—இந்தியாவின் அபிவ்ருத்தியில் அபிமானங்கொண்டிருக்கும் ஸர் வில்லியம் வெட்டர்பர்ன் என்பவர் இந்தியாவில் பெண் கல்வியை அபிவ்ருத்தி செய்வதைக்குறித்து இந்தியா மந்திரியைக் கேட்டுக்கொள்ள வேண்டுமென்று எண்ணி லண்டனில் இந்தியர்களுள்பட சில கனவான்களை ஒரு கமிட்டியாகச் சேர்த்து இந்தியா மந்திரியைக் கண்டுவர ஏற்பாடு செய்தார். இந்தக் கமிட்டியால் டெபுடேஷனாக அனுப்பப்பட்ட ப்ரமுகர்கள் இந்தியா மந்திரியைக் கண்டு, இந்தியாவில் படித்த பெண்கள் தொகை ரொம்ப குறைவாயிருக்கிறதென்றும், படித்தபையன்களின் தொகைக்குத் தகுந்தபடி பெண்களின் தொகையுமிருக்க வேண்டுமென்றும், இந்திய ஸ்த்ரீகளை உபாத்யாயர்களாய் பயிற்சி பெறத் தூண்டும் பொருட்டு அவர்களுக்கு உபகாரச்சம்பளம் கொடுத்துப் படிக்கச் சொல்லவேண்டுமென்றும், பெண் கல்வியின் நிலைமையைப்பற்றிப் பரிசீலனை செய்து அது விஷயமாய் ப்ரேரணைகள் செய்யும்படி இந்திய கனவான்களும் ஸ்த்ரீகளும் சேர்ந்த ஒரு கமிட்டி நியமிக்க வேண்டுமென்றும் தெரிவித்தார்கள்.

அதற்கு இந்தியா மந்த்ரி, பெண் கல்வியை அபிவ்ருத்தி செய்யவேண்டியது அவச்யமென்றாலும், அது விஷயமாய் இந்தியர்கள் கவர்ன்மெண்டாருக்கு யாதொரு விண்ணப்பமும் அனுப்பியிருப்பதாகத்தெரியவில்லையென்றும், டெபுடேஷன் மெம்பர்கள் சொன்ன மாதிரி கமிட்டி யொன்று நியமிக்கத் தமக்கு இஷ்டமில்லையென்றும், ஆனால் அவர்களுடைய விண்ணப்பத்தை இந்தியா கவர்ன்மெண்டுக்கு அனுப்புவாரென்றும் சொன்னார்.

### Industrial Education for Women.

ஸ்திரீகளுக்குத் தொழிற் கல்வி.–பேஹார் ஓரிஸ்ஸா கவர்ன்மெண்டார், ஸ்த்ரீகளுக்குக் கைத்தொழில் கல்வி கற்றுக் கொடுப்பதைப் பற்றி ஆலோசித்து வருகிறார்கள். அவர்கள் பாட்னாவில் சர்க்கை வேலை, சித்ரத் தையல்வேலை ஆகிய இவைகளைக் கற்றுக்கொடுக்க ஒரு பாடசாலை ஸ்தாபிக்க உத்தேசித்திருக்கிறார்கள். இது புது முயற்சியாகையாலும், இந்தப் பள்ளிக்கூடத்தில் தாழ்ந்த வகுப்பு ஸ்த்ரீகளே படிப்பார்களாகையாலும், அவர்கள் அதிகமாக சம்பளம் செலுத்துவதென்பது முடியாதாகையாலும், கவர்ன்மெண்டார் அந்தப் பள்ளிக்கூடத்தை ஸொந்த செலவில் நடத்துவதாகத் தீர்மானித்திருக்கிறார்களாம். இதற்கு அதிக செலவு பிடிக்காதென்று சொல்லப்படுகிறது. சில வர்ஷங்கள் சென்றால் பள்ளிக்கூடம் பிறர் உதவியின்றி நடந்துவரக்கூடுமாம். அதாவது, அங்கே செய்யப்படும் சர்க்கை வேலைகளையும் தையல் வேலைகளையும் விற்றுக் கிடைக்கும் பணத்தைக்கொண்டே பள்ளிக்கூடத்தை நிர்வகிக்கலாம். பள்ளிக்கூடத்தை சரியான முறைகளில் நடத்துவதற்காக ஒரு ஆலோசனை கமிட்டி ஏற்படுத்தி அதில், பேஹார் ஓரிஸ்ஸா மாகாணங்களிலுள்ள பல பல கனவான்களை மெம்பர்களாய நியமித்து, அந்தக் கமிட்டியின் ஆலோசனைகளையும் கேட்டுக்கொள்வார்கள். பள்ளிக்கூடத்தை ஸாதாரண வித்யாசாலையாக நடத்தாமல், ஒரு தொழில்சாலை போல் நடத்துவதாக உத்தேசமாம். இதற்கு, மாணவர்கள் செய்த வேலைகளை விற்பதில் உதவி செய்யும்படி ஆலோசனைக் கமிட்டி மெம்பர்கள் கேட்டுக்கொள்ளப் படுவார்கள்.

### Children's Sleep.

குழந்தைகளின் தூக்கம்.—ஸுக சரீரமுள்ள குழந்தை பிறந்த 2 மாஸங்கள் வரையில், பசியெடுக்கும் போது தவிர மற்ற காலமெல்லாம் தூங்கும் பசியெடுத்தபோது மாத்ரம் அழும் குழந்தைகள் தினமொருமுறை நன்றாயழவேண்டுமென்று சிலர் சொல்லுகிறார்கள். ஏனென்றால் அழுதால்தான் குழந்தைகளின் நுரையீரல்கள் நன்றாய் விரிந்து பலப்படையுமாம். ஸாயந்தர வேளைகளில் குழந்தைகளைத் தூங்கவிடக்கூடாது. அப்போது குழந்தைகளை விழித்துக்கொண்டிருக்கும்படி செய்தால், அவைகள் இரவில் வெகுநேரம் நன்றாய்த் தூங்கும்.

குழந்தைக்கு ஆறுமாஸமானதும், அது தினந்தோறும் 16 மணி நேரம் தூங்கவேண்டும். இப்படி அப்த பூர்த்தியாகிறவரையில் தூங்கவேண்டும். அதற்கு பிறகு 5-வது வயஸுவரையில் குழந்தை 14 மணி நேரம் தூங்கினால் போதுமானது. அதற்குப் பிறகு 7-வது வயஸுவரையில் 12 மணி நேரம் தூங்கவேண்டும். அநேகமாய் இந்த வயதில் குழந்தைகள் பகல் பொழுதெல்லாம் விழித்திருந்து இரவு நேரம் முழுமையும் தூங்கும். 7-வது வயஸுக்குப்பிறகு 10-அல்லது 11-வயஸுவரையில் குழந்தைகள் 11-மணி நேரம் தூங்கவேண்டும்.

# INDIANS ABROAD.

# இதர தேசங்களில் இந்தியர்கள்.

## Indians in Zanzibar.

ஸான்ஸிபார் தீவில் இந்தியர்கள்.—ஸான்ஸிபார் என்பது ஆப்ரிககாவின் கிழக்குக்கரையோரமாக உள்ள ஒரு தீவு. அங்கே அநேக இந்தியர்கள் குடியேறியிருக்கிறார்கள். ஸுமார் 8-அல்லது 10 வர்ஷங்களுக்கு முன்னால் வரையில் ஸான்ஸிபாரில் ஜலந் தாக்குவதற்கும் ஜலம் கொட்டி வைப்பதற்கும் இந்தியாவிலிருந்து மண் பாண்டங்கள் அந்தத் தீவுக்கு ஏற்றுமதி] செய்யப்பட்டு வந்தன, அதற்குப் பிறகு இந்தியாவிலிருந்து குயவர்கள் குடியேறிப்போய் ஸான்ஸிபார் பட்டணத்திலும் அதற்குத் தெற்கிலுள்ள க்ராமங்களிலும் குடியிருந்து கொண்டு மண்பாண்டங்களைச்செய்து விற்று ஜீவித்துவருகிறார்கள். இந்தியாவிலுள்ள கட்ச் தீவிலிருந்தும் மற்றவிடங்களிலிருந்தும் ஸுமார் 30-இந்திய தட்டார்கள் அங்கே குடியேறியிருக்கிறார்கள். அவர்கள் நகைகள், கத்திப்பிடிகள், விநோத ஸாமான்கள் முதலியவைகள் செய்து ஜீவிக்கிறார்கள். அங்கே 60,000 ஏக்கர் நிலங்களில் லவங்கம் ஸாகுபடியாகி வருகிறது. இந்த நிலங்களில் ஸ்வல்ப பாகந்தான் இந்தியர்களுக்கு ஸொந்தமாயிருக்கிறது. ஆனால் லவங்கம் ஸாகுபடி செய்யும் அநேக அரேபிய நிலஸ்வான்களுடைய நிலங்கள் இந்திய வ்யாபாரிகளுக்கு ஒற்றி வைக்கப்பட்டிருக்கின்றன. இந்தியர்கள் வ்யாபாரிகளாயிருக்க ப்ரியப்படுகிறார்களே யொழிய, நிலங்களில் பணம்போட ப்ரியப்படுவதில்லையாம.

அங்குள்ள ஸர்க்கார்ப் பள்ளிக்கூடங்களில் இலவசமாகக் கல்வி கற்பிக்கப்பட்டுவருகிறது. ஆனால் அவைகளில் இந்திய மாணவர்கள் ஸ்வல்பமாகத்தான் சேர்த்துக்கொள்ளப் படுகிறார்கள். ஸான்ஸிபாரில் உள்ள ஹைஸ்கூலிலும் இந்தியர்களை சேர்த்துக்கொள்ளுகிறார்களாம் இவைகளைத்தவிர வேறு சில பள்ளிக்கூடங்களும் இருக்கின்றன

## Indentured Emigration.

ஒப்பந்தக்கூலி ஏற்பாட்டில் அயல்நாடுகளுக்குத் குடிப்போவது—பிஜி தீவிலுள்ள கரும்புத் தோட்டங்களில் ஒப்பந்தக்கூலி ஏற்பாட்டின்மேல் வேலைசெய்து வரும் இந்தியக் கூலியாட்களின் நிலைமை ரொம்ப சீர்கேடாயிருக்கிறதென்று தெரிவதாலும, அதற்கேற்றாற்போல அங்குள்ள இந்தியர்களுக்குள் தற்கொலை அதிகரித்து வருவதாலும், அவர்களின் நிலைமையை நேரிலபோய் ஆராய்ச்சிசெய்து வருவதற்காக ரெவரண்ட் ஸி. எப். ஆண்ட்ரூஸ் என்பவரும், மிஸ்டர் பியர்ஸன் என்பவரும் இந்தியாவிலிருந்து பிஜித்தீவுக்குப புறப்பட்டுப்போயிருக்கிறார்கள். மிஸ்டர் ஆண்ட்ரூஸினுடைய அபிப்ராயமென்னவென்றால், ஒப்பந்தக் கூலி ஏற்பாட்டை அடியோடு ஒழித்துவிடவேண்டும் அவ்விதம செய்வதுதான் இந்தியாவுக்கு கௌரவமும் ந்யாயமும் கிடைக்கச்செய்வதாகும். ஒப்பந்தக்கூலி ஏற்பாடு இருக்கிறவரையில் குடியேற்ற நாட்டார் இந்தியர்களை தங்கள் ஜனங்களுடன் ஸமமாக நடத்துவார்களென்று எதிர்பார்ப்பதில் ப்ரயோஜனமில்லை.

## Emmigration to Jamaica.

ஜமெய்க்காவுக்கு குடியேறிப்போவது—சென்ற 1913-1914-ம் வர்ஷத்தில் ஜமெய்க்கா தீவுக்கு 293-இந்தியர்கள் குடியேறிபபோனார்கள். இவர்கள் 1903-ம் வர்ஷம் அக்டோபர்மாஸம் 10-ந்தேதி கல்கத்தாவை விட்டுப் புறப்பட்டுப்போய், டிஸம்பர்மாஸம் 1-ந்தேதி ஜமெய்க்காவுக்குப போய்ச சேர்ந்தார்கள் முதலில் புறப்பட்டவர்களின் தொகை ஆண்கள் 199, ஸ்த்ரீகள் 81, குழந்தைகள் 14 ; ப்ரயாணத்தில் ஜனனமானது ஆண் 1, பெண் 4; ப்ரயாணத்தில் இறந்தவர்கள் ஸ்த்ரீகள் 2, குழந்தைகள் 4 ; ஆகவே ஜமெய்க்காவுக்குப் போய்ச சேர்ந்தவர்களின தொகை ஆண்கள 199, ஸ்த்ரீகள் 79, குழந்தைகள் 15, ஆகமொத்தம் 293.

## Indians in Malaya.

மலேயாநாடுகளில் இந்தியர்கள்—மலேயாநாடுகளில் 'மலே ஸ்டேட்ஸ் கைட்ஸ்' என்னும் இந்தியர்கள் சேர்ந்த படையொன்று இருக்கிறது. அது ஸமீபத்தில் போர்முகத்துக்குப போக ப்ரியப்படுவதாக கவர்ன்மெண்டுக்குத் தெரிவித்ததன்மேல் கவர்ன்மெண்டார் அதற்கு ஸம்மதித்திருக்கிறார்கள அங்குள்ள போலீஸ் இலாகாவைச்சேர்ந்த ஸுபேதார் மேஜர் பால்ஸிங் என்பவரை கவர்ன்மெண்டார் ஜஸ்டிஸ் அப் பீஸ என்னும் கௌரவ ந்யாயாதிபதியாக நியமித்திருக்கிறார்களாம்.

# FUN AND ANECDOTE.

## வேடிக்கையும் துக்கடாகதைகளும்.

### A Story about Lord Carmichael.

லார்ட் கார்மிகேலைப்பற்றிய ஒரு கதை.—வங்காளத்தின் கவர்னராகிய லார்ட் கார்மிகேலைபற்றி ஒரு கதை வழங்கிவருகிறது. கொஞ்சகாலத்துக்கு முன்னால் நடந்த ஒரு பந்தய ஓட்டத்தைப் பார்க்க அவர் போயிருந்தாராம். ஒரு ரங்கூன் வ்யாபாரி கப்பல் சார்ஜ் விஷயமாய் பி ஐ. எஸ். என். கப்பல் கம்பெனியாரைச்சேர்ந்த மிஸ்டர் கார்மிகேல் என்னும் கனவானுடன் பேச எண்ணி, பந்தயம் நடக்கும் இடத்துக்கு வந்து 'கார்மிகேல்' எங்கிருக்கிறாரென்று பக்கத்திலிருந்த தமது ஸ்நேகிதரைக் கேட்டார். அவர் லார்ட் கார்மிகேலையாவது,மிஸ்டர் கார்மிகேலையாவது பார்த்ததில்லை. பக்கத்திலிருந்தவர் ஏதோ ஞாபகமாயிருந்ததால், கார்மிகேல் என்ற வார்த்தையைக் கேட்டதும், லாட் கார்மி கேலைச் சுட்டிக்காட்டினார்.

ரங்கூன் வ்யாபாரி கவர்னரிடம் போய் "நீங்கள் தானே கார்மிகேல்?" என்று கேட்டார். கவர்னரோ வ்யாபாரியானவர் ஆள் அடையாளம் தெரியாமல் தம்மோடு பேசவந்திருக்கிறாரென்றுகண்டு, வேடிக்கையாக "ஆம்" என்றார்.

ர. வ்யாபாரி.—"ரங்கூனிலிருந்து கப்பல்சார்ஜ் விஷயமாய்த்தான் பேசவந்தேன். அது விஷயமாய் ஒருவர்க்கொருவர் சண்டை போட்டுக்கொள்வதில் ப்ரயோஜனமென்ன?"

லார்ட். கார்மிகேல்.—"ஒன்றுமில்லை"

ர. வ்.—"இது விஷயமாய் நாம் இருவரும் ஒத்துப் போய்விடலாமே."

லா. கா.—"ஆகா, அப்படியே செயய்லாம்."

ர. வ்.—"சரி, இது விஷயமாய் உங்களுக்கு கடிதம் எழுதுகிறேன்."

லா. கா.—"அப்படியே செய்யுங்கள்."

இப்படிப் பேசிவிட்டு, ரங்கூன் வ்யாபாரி தமது ஸ்நேகிதரிடம் வந்து, கப்பல் சார்ஜு தகராரை கார்மிகேலிடம் ஒருவாறு தீர்த்துவிட்டதாகச சொனனதும், ஸ்நேகிதர், கப்பல் சார்ஜு தகராருக்கும, கவர்னருக்கும் என்ன ஸம்பந்தமென்று கேட்டாராம். அபபோது வயாபாரிக்கு எவ்வளவு ஆச்சர்யம் ஏற்பட்டிருககும்!

### The Amatour Doctor.

கற்றுக்குட்டி வைத்யம் செய்தது.—ஹெண்டெர்ஸன் என்னும் ஒருவாலிபன் வைத்ய சாஸ்த்ரங் கற்றுத் தேறி அபபொழுதே நூதனமாக வைத்யம் செய்ய வெளிவந்தான். எந்த விஷயமானாலும் அவற்றிற்குத் தன்னுடைய அபிப்ராயத்தைவெளியிட அவன் மிகவும் ஆவலுள்ளவன். ஒருநாள் சிறிது வயதுமுதிர்ந்த ஒரு ஸ்த்ரீ அவ்வைத்யனிடம் தனக்குள்ள குறையைச் சொல்லிக்கொள்ள நேரிட்டது. ஸ்த்ரீ—"என்னுடைய வாழ்நாட்களில் எனக்குண்டாயிருக்கும் விஸனங்களுக்குள் எனக்கு ஒரு குழந்தைகூட ஜனிக்கவில்லையே யென்பதுதான் மிகவும் முக்யமானது! என் செய்வேன்!" என்றாள்.

டாக்டர் ஹெண்டெர்ஸன், என்ன சொல்வலாம் என்று சிறிது யோசித்தான்; பிறகு "ஓ! ஒருக்கால் இது உன்னுடைய வம்சத்தைச் சேர்ந்த தோஷமாயிருக்கலாம்; உன் தாயாருக்கு ஏதாவது குழந்தையிருக்கிறதா?" என்றான்.

### The Poet's Reply.

கவியின் பதில்.—எட்டியாபுர ஸமஸ்தான வித்வானாயிருந்த கடிகை முத்துப புலவர் தம்மனைவி திவசத்தின் பொருட்டுக் கடைவீதியிலிருந்து வேண்டிய ஸாமான்களும் பண்டங்களும் வாங்கி தலைமேல் வைத்துச் சுமந்துகொண்டு வீடு நோக்கி வரும்போது, அவ்வூர் மகாராஜா வெளிபுலாச் செல்கையில் புலவரை அக்கோலத்துடன்கண்டு 'என்ன விசேஷம்?' என்று கேட்க, புலவர் 'தலைவி திவசம்' என்றாராம். இவ் விநோதமான பதில், இவ்வாறு சுமப்பது தலைவிதி-வசம் எனவும், இப்பண்டங்களைக்கொண்டு வந்தது தலைவி திவசத்துக்காக எனவும் பொருள் தருதல் காண்க.

### A Yakil and a Witness.

வக்கீலும் ஸாக்ஷியும்.—(குறுக்கு விசாரணையில் ஸாக்ஷிகளைக் கலைத்துவிடுவதில் மஹா நிபுணர்) சண்டை நடந்த இடத்திற்கும் குற்றவாளியின் வீட்டிற்கும் எவ்வளவு தூரமிருக்குமு!

ஸாக்ஷி.—இருபது கஜம், இரண்டடி பதினோரங்குலம்.

வக்கீல்.—இதை எதற்காக நீங்கள் இவ்வளவு சரியானபடி கணக்கு எடுத்து வைததிருககிறீர்கள்?

ஸாக்ஷி.—யாராவது ஒரு மடையன் அனாவச்யமாக இதைக் கேட்டால் என்ன செய்வதென்று அளந்து வைத்துக்கொண்டேன்.

இதைக் கேட்ட வககீல் தலைகுனிந்தார்.

# CURIOSITIES.

# விநோதங்கள்.

## A Curious Species of Ants

**எறும்புகளில் ஒரு விசித்ர ஜாதி.**—அமெரிக்காவில் உஷ்ண ப்ரதேசங்களில் ஸௌபா என்று ஒருவகை எறும்புண்டு. இந்த ப்ரதேசங்களில் பிரயாணஞ் செய்தவர்கள் ஒவ்வொருவரும், இவை பெருங்கூட்டமாய் மரத்தினின்று கீழே இறங்கி காட்டின் வழியாய் ஒவ்வொரு எறும்பும் ஒரு வட்ட இலையை வாயிற் கவ்விக்கொண்டு வெகுதூரம் ஒழுங்காக வளைக்குட் செல்வதை பார்த்திருப்பதாகச் சொல்லுகிறார்கள். இவ்விலை குடைபோல அவ்வெறும்பை மறைக்கும். இவை வரிசையாகச் செல்லும்போது ஓர் ஆறு செல்வது போலவும், அதன்மேல் இலைகள் மிதந்து போவனபோலவும் தோற்றுமாம். இந்த எறும்புகள் அந்த இலைகளை என்ன செய்கின்றன என்பது ஸமீபத்தில் விளங்கவில்லை. அவ்விலையை இவை ஆகாரித்துக்கும் வளைக்குள் பரப்புவதற்கும் உபயோகப் படுத்துகின்றனவென்று சிலர் ஊகிக்கிறார்கள். ஆனால் நன்கு ஆராய்ந்து பார்த்தவர்கள் கூறுவதாவது, இவ்வெறும்புகள் அவ்விலைகளை வளைக்குள் சேர்த்து வைத்து அவை அழுகின பிறகு அதன்மேல் காளான் முளைக்கும்படி செய்து அக்காளானை தம் புழுக்களுக்கு உணவாக உபயோகப் படுத்துகின்றன. இவ்விதக்காளான் இவ்விலைகளின் ஸத்துமுழுவதையும் க்ரகித்த பிறகு இவ்வெறும்புகள் ஸாரமற்ற அந்த இலைகளை வேறு அறைகளுக்குக் கொண்டுபோய்ச் சேர்க்கும். அங்கே அவற்றை வேறு வண்டுகளின் புழுக்கள் புசிக்கும். இவ் வெறும்புகள் தங்கள் வளைக்குள் வேறு வண்டுகள் வரும்படி இடங் கொடுப்பது வழக்கம். இக்காளான் உண்டாகும் அறைக்கு வேண்டும்போது வெளிக்காற்று வரும்படியாகவும் வேண்டாதபோது அடைத்துக் கொள்ளும்படியாகவும் கதவுகள் உண்டு. ஸமயத்துக்குத் தக்கபடி உஷ்ணமோ, குளிர்ச்சியோ உண்டுபண்ணிக் கொள்ளுமாம்.

## A Race which does not use Salt.

**உப்பை உபயோகப் படுத்தாத ஜாதியார்.**—"உப்பில்லாப் பண்டம் குப்பையிலே" என்பது நம் பழமொழி. மனிதர்கள் எவ்வளவு நாகரீக மற்றவர்களாயினும் உண்ணும்போது உப்பில்லாமல் உண்ணார்கள். பழனிமலை முதலிய ப்ரதேசங்களில் சில காட்டு ஜாதியாரிருக்கிறார்கள். அவர்கள் கிழங்குகளை வேகவைத்து உப்பில்லாமலே புசித்து வருகிறார்கள். தேனும் தினைமாவும் சாப்பிடும் வேடர்களைப் பற்றி நாம் படித்ததுண்டு. ஆனால் ஒரு பெருங்கூட்டத்தார் இக்காலத்தில் உப்பில்லாமல் உணவை உட்கொள்ளுகிறார்கள் என்றால் அது மிகவும் ஆச்சரியமே. தென்னாப்ரிக்காவில் டார்னா என்று சொல்லப்பட்ட ஒருவகை காப்பிரி ஜாதியார் உண்டு. அவர்கள் உப்பை உபயோகிப்பதே இல்லையாம். ச்ருஷ்டியின் அற்புதங்களில் இதுவும் ஒன்றே.

## A Thief and a Tortoise.

**திருடனும் ஆமையும்.**—வடக்கே டிப்பரா ப்ரதேசத்தில் ஒரு ஊரில் ஒரு திருடன் திருடுவதற்காக இரவில் ஒரு வீட்டுக்குள் புகுந்தான். அவன் இருட்டில், அகப்படக்கூடிய ஸாமான்களைத் தேடிக்கொண்டிருக்கையில், அங்கிருந்த ஒரு ஆமை அவனுடைய கை விரலொன்றைக் கௌவிக்கொண்டது. ஆமை வாயிலிருந்து விரலை எடுக்க என்ன முயன்றும் அவனால் முடியவில்லை. கடைசியில் அவன் வலிபொறுக்க மாட்டாமல் வீட்டுக்காரனைக் கூப்பிடவே, வீட்டுக்காரன் விழித்து எழுந்து ஸங்கதியை அறிந்து போலீஸாருக்கு அறிவித்தான். போலீஸார் திருடனுடைய கைவிரலை வெட்டிவிட்டு, அவனை ஆமையினின்றும் விடுவித்தார்கள்.

## Seeing both ways.

**இருபுறமும் பார்த்தல்.**—பாரிஸ் நகரத்தில் ஓர் போலீஸ் உத்யோகஸ்தர், தம் கீழ் உத்யோகஸ்தர்களின் உபயோகத்திற்காக ஒரு மூக்குக்கண்ணாடி கண்டுபிடித்திருக்கிறாராம். அதை போட்டுக்கொண்டால் அதன் மூலமாய் எதிரிலிருப்பவைகளோடு கூட அதே ஸமயத்தில் தன்பின்னாலிருப்பவைகள்கூட கண்ணாய்த் தெரிகின்றனவாம்.

## Four Calves in a Birth.

**ஒருதடவையில் 4 கன்றுக் குட்டிகள்.**—தென்னாற்காடு ஜில்லா கள்ளக்குறிச்சி போஸ்டாபீஸைச் சேர்ந்த உலகங்காத்தான் கிராமத்துக்கு ஸமீபத்திலுள்ள ஒரு குப்பத்தில் ஸுமார் ஒரு மாஸத்துக்கு முன்பு ஒரு பசு நான்கு கன்றுகள் ஈன்றதாம். அந்தக் கன்றுகள் பிறந்த நான்குநாளுக்கெல்லாம் இறந்துபோயினவாம்.

# DIARY OF THE MONTH.

## மாஸ வர்த்தமானம்.

### THE WAR IN EUROPE.

### ஐரோப்பாவில் யுத்தம்.
### பால்கன் ப்ரதேசத்தில் யுத்தம்.

பல்கேரியா ஜெர்மனியோடு சேர்ந்துகொண்டிருக்கிறது. அதுவும், ஆஸ்ட்ரியா ஜெர்மனி ஆகிய இவைகளும் ஸெர்வியாவைத் தாக்கிக்கொண்டிருக்கின்றன. ரொமானியாவும் க்ரீஸும் எந்தக் கக்ஷியிலும் சேராமல் தனித்திருக்கின்றன.

அக்டோபர் 4-தேதி.

ரஷ்யா பல்கேரியாவுக்கு ஒரு கடைசிப் பேச்சுக்கடிதம் அனுப்பியிருக்கிறது. பல்கேரிய ராணுவ மந்த்ரியின் ஆபீஸிலும் ஸைன்யங்களிலும் ஜெர்மானிய ராணுவ உத்யோகஸ்தர்களும், ஆஸ்ட்ரிய ராணுவ உத்யோகஸ்தர்களும் இருக்கிறார்களென்றும், பல்கேரியாவானது ஸெர்வியா வோரமாயுள்ள தனது எல்லை ப்ரதேசத்தில் ஸைன்யங்களை சேகரித்து வைத்திருக்கிறதென்றும், அது ஜெர்மானியர்களிடமிருந்து ஏராளமாய்ப் பணவுதவி வாங்கியிருக்கிறதென்றும், இந்த விஷயங்களால் பல்கேரிய ராணுவ முயற்சிகளின் நோக்க மின்னதென்பது தெளிவாய்த் தெரிகிறதென்றும், ராணுவத்தில் சேர்ந்திருக்கும் எதிரி உத்யோகஸ்தர்களை உடனே வேலையை விட்டுத் தள்ளிவிடவேண்டுமென்றும ரஷ்யா கவர்ன்மெண்டார அந்தக் கடிதத்தில் தெரிவித்திருக்கிறார்கள்.

5-தேதி.

ஸெர்வியாவில் டான்யூப் நதியோரமாக எதிரிகள் (ஆஸ்ட்ரோ-ஜெர்மன் துருப்புகள்) ஸெர்வியர்களைத் தாக்கிக்கொண்டிருக்கிறார்கள்.

6-தேதி.

ஆஸ்ட்ரியர்கள் ட்ரினுநதி யோரமாக ஸெர்வியாவுக்குள் புகுந்திருக்கிறார்களாம். நேசத்துருப்புகள் க்ரீஸிலுள்ள ஸாலொனிகாவில் இறங்கியிருப்பதாகச் சொல்லப்படுகிறது. பல்கேரியா ரஷ்யாவின் கடிதத்துக்கு இன்னும் பதில் அனுப்பவில்லை.

7-தேதி.

பல்கேரியா ரஷ்யாவுக்கு அனுப்பின பதில் ரஷ்யர்களுக்கு த்ருப்திகாமாயில்லையாம். இரண்டு தேசங்களுக்கும் நேசப்பேச்சுகள் நின்றுபோயின.

க்ரீஸில் ப்ரதம மந்த்ரியாயிருந்த மா. வெனிஸிலாஸ், ஸெர்வியாவுக்கு உதவிசெய்வது விஷயமாய் க்ரீஸ் அரசருடன் அபிப்ராய பேதப்பட்டதால் அவர் (மந்த்ரி) தமது வேலையை ராஜிநாமா செய்துவிட்டார்.

8-தேதி.

ஆஸ்ட்ரோ-ஜெர்மன் துருப்புகள் ட்ரினு, ஸேவ், டான்யூப் என்னும் நதிகளை அநேக இடங்களில் கடந்து ஸெர்வியாவில் புகுந்திருக்கின்றன.

11-தேதி.

ஆஸ்ட்ரோ-ஜெர்மன் துருப்புகள் ஸெர்வியாவில் பெல்க்ரேடையும், அதற்குத் தென்கிழக்கிலும் தென்மேற்கிலுமுள்ள குன்றுகளையும் பிடித்திருக்கின்றன.

12-தேதி.

ஆஸ்ட்ரோ-ஜெர்மன் துருப்புகள் ஸெமண்ட்ரியாவுக்கும் க்ராடிஸ்ட்ச் என்னுமிடத்துக்கும் மத்தியில் டான்யூப் நதியைக் கடந்தன.

பல்கேரியர்கள் க்னியாஷிவாட்ஸ் என்னுமிடத்தைத் தாக்கிக் கொண்டிருக்கிறார்கள்.

13-தேதி.

நேசத்துருப்புகளை பல்கேரியாவிலுள்ள டாடியாயாகாட்ச் என்னும் துறைமுகத்துக்கு அனுப்ப ஏற்பாடு நடந்து கொண்டிருக்கிறதாக ஜெர்மன் பத்ரிகைகள் சொல்லுகின்றன.

பல்கேரியா ஸெர்வியாவின் மேல் படையெடுத்துப் போயிருக்கிறது.

14-தேதி.

பால்கன் நாடுகளுக்குள் யுத்தம் நேர்ந்து அதில் க்ரீஸ், ஸெர்வியா இவைகளுள் ஏதாவது ஒன்று சேசநேரிட்டால், ஒன்று மற்றொன்றுக்கு உதவி செய்வதற்காக, அந்த இரண்டு தேசங்களும் ஒரு உடன் படிக்கை செய்து கொண்டிருப்பதாகத் தெரிகிறது. இபபோது ஸெர்வியாவுக்கும் பல்கேரியாவுக்கும் நேர்ந்திருக்கும் யுத்தம் பால்கன் யுத்தமாயிராமல், ஐரோப்பிய யுத்தத்தின் ஒரு பாகமாயிருப்பதால், க்ரீஸ் ஸெர்வியாவுக்கு உதவி செய்வதற்கில்லை யென்று சொல்லிவிட்டதாக் ஸமாசார மெட்டுகிறது.

பல்கேரியர்கள் நிஷுக்கு 40-மைல் வடக்கிலுள்ள வீட்சார் என்னுமிடத்துக்குத் தெற்கில் ஸெர்வியர்களைத்தாக்குகிறார்கள். அவர்கள் நிஷைச்சுற்றி வளைத்

துக் கொள்ள முயலுகிருர்களென்று தோன்றுகிறது.

15-தேதி.

ஸெர்வியா பல்கேரியாவின் மேல் யுத்தம் தொடங்கியிருக்கிறது.

16-தேதி.

ஜெர்மானியர்கள் ஸெர்வியாவில் போஸராவாட்ஸ் என்னும் கோட்டையுள்ள பட்டணத்தைப் பிடித்திருக்கிருர்களாம்.

17-தேதி.

ப்ரான்ஸ், பல்கேரியாவின் மேல் யுத்தம் தொடங்கியிருக்கிறது.

18-தேதி.

நேசத்துருப்புகள் ஸெர்வியாவுக்குள் போய்க்கொண்டிருக்கின்றனவாம்.

ஸெர்விய துருப்புகளும் நேசத்துருப்புகளும் ஸ்ட்ரம்னிட்ஸா என்னுமிடத்தையும் இன்னும் சில இடங்களையும் பிடித்திருக்கின்றன.

பல்கேரியர்கள் நிஷ்-உஸ்கப் ரெயில்வேயைப்பிடிக்க பலமாக யுத்தம் செய்கிருர்கள். வ்ரான்யாவிலும் விபிட்சேயிலும் யுத்தம் பலமாக நடந்தது. பல்கேரிய ஸைன்யங்களை ஜெர்மானிய ராணுவ உத்யோகஸ்தர்கள் நடத்தி வருகிருர்கள்.

பல்கேரியர்கள் பைராட் ப்ரதேசத்தில் சில இடங்களைப் பிடித்திருக்கிருர்கள்.

ஆஸ்ட்ரோ - ஜெர்மன் துருப்புகள் ஸேவ் நதியோரமாயும் பெல்க்ரேடைச் சுற்றிலும் ஸெர்வியர்களை ஆறு தடவை தாக்கியும் ரொம்ப சேதத்துடன் பின்தள்ளப்பட்டார்கள்.

நமதரசருக்கும் பல்கேரியாவுக்கும் யுத்தம் ஆரம்பமாகி விட்டதென்று வைஸ்ராய் தெரிவிக்கிருர்.

19-தேதி.

ஸெர்வியப் போர்முகங்களிலெல்லாம் பலமான யுத்தம் நடக்கிறது. பெல்க்ரேடுக்கு ஸமீபத்திலுள்ள ஸெர்விய ஸைன்யமானது, எதிரிகள் பீரங்கிகளால் பலமாகத் தாககினதால், தெற்குப்பக்கமாக சற்றுப் பின் வாங்கிற்று.

இட்டலி பல்கேரியாவின் மேல் யுத்தம் தொடங்கியிருக்கிறது.

ப்ரெஞ்ச்சுகாரர்களும் ஸெர்வியர்களும் சேர்ந்த ஒரு படை பல்கேரியாவில் ஸ்ட்ரம்னிட்ஸா என்னுமிடத்தைப் பிடித்திருககிறது.

20-தேதி.

வ்லாஷ்னு பள்ளத்தாக்கில் பலமான யுததம் நடக்கிறது. நிஷுக்கு 60-மைல் தெற்கிலுள்ள வ்ரானியா மென்னுமிடத்தில் பல்கேரியாகள் ரெயில்வேயை நாசம் செய்திருககிருர்கள்.

ஸெர்வியாவின் வடபாகத்தில் ஜெர்மானியாகள் பீரங்கிகளைக்கொண்டு பலமாகததாக்கினதால் ஸெர்வியர்கள் பின் வாஙகிப்போயிருககிருர்கள். ஸ்மிண்ட்ரிடாவுக்குத் தெற்கிலுள்ள ஸெர்விய ஸைன்யம் இன்னும் தெற்கில் பின்வாங்கிப போயிருக்கிறது. பல்கேரிய எல்லே ப்ரதேசத்துக்குப் பக்கத்தில் வாவினு பள்ளத்தாக்கில் வ்ரானியாவுக்கும் ரிஸடோவாட்ஸுக்கும் மத்தியில் யுத்தம் நடக்கிறது.

21-தேதி.

பல்கேரியர்கள் மாஸிடோனியாவிலுள்ள இஷ்டிப், ராடோவிஷ்ட் என்னுமிடங்களைப் பிடித்திருக்கிருர்களென்று தெரியவருகிறது.

ஸாலோனிகா ரெயில்வேயில், நிஷுக்கும் உஸ்கடபுக்கும் மத்தியிலுள்ள வ்ரான்யா என்னும் ஊரைத் தாங்கள் பிடித்திருப்பதாக பல்கேரியர்கள் சொல்லுகிருர்கள்.

பல்கேரியாவின முக்ய பட்டணமாகிய ஸோபையாவைச் சுற்றிலும் புல்கேரியர்கள் கிடங்குகள் தோண்டி முள் வேலிகள் போட்டுவருகிருர்களாம்.

ஸெர்வியர்கள் கோச்னுவையும் இஷ்டிப்பையும் விட்டுவிட்டுப் போய்விட்டதாக ஒரு பத்ரிகை நிருபர் சொல்லுகிருர்.

22-ந்தேதி.

பல்கேரியாவைச் சேர்ந்த டெடியாகாச்சிலிருந்து போர்டோ லாகாஸ் பட்டணம் வரையில் ஈஜியன் கடல் கரையை நேசப் போர்க்கப்பல்கள் தாக்கிக்கொண்டிருக்கின்றன.

பல்கேரியர்கள் உஸ்கப்புக்கு 22-மைல் வடகிழக்கிலுள்ள குமானேவாவைப பிடித்திருக்கிருர்களாம்.

ஆஸ்ட்ரியர்கள் ஸெர்வியாவில் மொரேவியா நதியின் இருகரையிலும் முன்சென்றுகொண்டிருக்கிருர்களாம். பல்கேரியர்கள் பைரட்டுக்கு மேற்கில் நிஷ் திக்கை நோககிப் போய்க்கொண்டிருக்கிருர்களென்றும் அவர்கள் வார்டார்நதிப் பள்ளத்தாக்கில் புகுந்துவிட்டார்களென்றும் ஆஸ்ட்ரியர்கள் சொல்லுகிருாகள்

23-தேதி.

ஆட்ரியர்கள் மொரேவியாவின் இருகரையிலும் முன் சென்று கொண்டிருக்கிறார்கள். பல்கேரியர்கள் வார்டார் பள்ளத்தாக்கில் வ்ரானியா, குமனுவா, வேல்ஸ் என்னும் இடங்களைப்பிடித்திருக்கிறார்கள்.

24-தேதி.

பெல்கரேடுக்குப் பக்கத்தில் யுத்தம் பலமாக நடக்கிறது.

25-தேதி.

ப்ரெஞ்ச் துருப்புகள் ஸ்ட்ரம்னிட்ஸாவுக்குத் தெற்கில் பல்கேரியர்களைத் தாக்கி நாபோவா என்னுமிடத்தைப் பிடித்துக்கொண்டன. நேசதுருப்புகள் டிடியாகாச்சில் இறங்கியிருக்கின்றன. அவைகள் ஸாலோனிகா அட்ரியானோபின் ரெயில்வேயைக் கெடுக்கப் போகின்றனவாம்.

'கோபன்' என்னும் யுத்தக்கப்பல் வார்னாவுக்குப் போயிருக்கிறதாம்.

உஸ்கப் பட்டணத்தை பல்கேரியர்கள் பிடித்திருக்கிறார்கள்.

26-தேதி.

ஆஸ்ட்ரியர்கள் டான்யூப் நதியை ஆர்ஸோவா பட்டணத்தில் கடந்துவிட்டதால் அவர்கள் தாராளமாய் பல்கேரியாவுக்குள் போக முடியுமென்று புகாரஸ்டியிலுள்ள லண்டன் டைம்ஸ் நிருபர் தெரிவிக்கிறார்.

ஸெர்வியாவின் மேற்கில் எதிரிகள் விஷிக்ராடுக்குப் பக்கத்தில் ட்ரினாநதியைத் தாண்டியிருக்கிறார்களாம். ஸெர்வியர்கள் க்னியாவாட்ஸுக்குப் பக்கத்தில் பின்வாங்கிப் போயிருக்கிறார்கள். பல்கேரியர்கள் உஸ்கபைப் பிடித்திருக்கிறார்கள்.

27-தேதி.

ஸெர்வியர்கள் குப்ருலு என்னும் ஊரைத் திருப்பிப் பிடித்திருக்கிறார்கள்.

ப்ரிட்டிஷ் துருப்புகள் ப்ரெஞ்ச் துருப்புகளோடு சேர்ந்து க்ரீஸுக்குப் பக்கமாக ஸெர்வியாவின் எல்லைப்ப்ரதேசத்தில் யுத்தம் செய்துகொண் டிருக்கின்றனவென்று பார்லிமெண்டில் தெரிவிக்கப்பட்டது. லெப்டினண்ட் ஜெனரல் ஸர் பனாயான் மேஹான் என்பவர் ஸெர்வியாவிலுள்ள ப்ரிட்டிஷ் துருப்புகளுக்குத் தலைவராக இருக்கிறார்.

ரஷ்யககப்பல்படை இன்று பல்கேரியாவைச்சேர்ந்த வார்னா, பர்காஸ் என்னும் துறைமுகங்களைத் தாக்கின ஆஸ்ட்ரியர்கள் தாங்கள் விஷிக்ராடிலிருந்து கிழக்கு நோக்கிப் போய்க்கொண் டிருப்பதாகவும், ஸெர்வியாவின் வடமேற்கில் வாலிவோவைப் பிடித்துவிட்டதாகவும் சொல்லுகிறார்கள்.

28-தேதி.

ஸெர்வியாவின் வடகிழக்குமூலை எதிரியின் வசமிருப்பதாகத் தெரிகிறது. ஆஸ்ட்ரோ ஜெர்மன் துருப்புகளும் பல்கேரியத் துருப்புகளும் இவ்விடத்தில் ஒன்று சேர்ந்துகொண்டதாக ஜெர்மானியர்கள் தெரிவிக்கிறார்கள்.

ஆஸ்ட்ரோ ஜெர்மன் துருப்புகள் பெல்க்ரேடுக்கு 40-மைல் தெற்கே வந்திருக்கின்றன.

ஸெர்வியர்கள் குப்ருபுலுவைப் பிடித்ததன்மேல் இஷ்டிபியை நோக்கிப் போய்க்கொண்டிருக்கிறார்களாம்.

29-தேதி.

ரஷ்யக் கப்பல்படை வார்னாவை மறுபடியும் தாக்கிற்று. எதிரியின் ஸப்மரீன் ஒன்று பிடிபட்டது.

ஆஸ்ட்ரோ ஜெர்மன் துருப்புகள் க்ருகுரிவாட்ஸ என்னும் ஊருக்கு 15-மைல் பக்கத்தில் வந்துவிட்டன. ஆஸ்ட்ரிய ஸைன்யங்கள் விர்க்கெம்ராடிலிருந்து கிழக்குநோக்கிப் போய்க்கொண்டிருக்கின்றன. பல்கேரியர்கள் க்னியாஷிவாட்ஸைப் பிடித்திருக்கிறார்கள்.

30-தேதி.

ரஷ்யர் துருப்புகள் ஒடெஸ்ஸாவிலிருந்து கருங்கடல் வழியாகப் பல்கேரியாவுக்குப் போகப் புறப்பட்டுக் கொண்டிருக்கிறார்களாம். பல்கேரியர்கள் குப்ருலுவைத் திரும்பிப் பிடித்திருக்கிறார்களாம்.

31-தேதி.

ஸெர்வியத் துருப்புகள் பிரட்டுக்குப் பின்னால் பின்வாங்கிப்போயிருக்கின்றன.

## ப்ரான்ஸிலும் பெல்ஜியத்திலும் யுத்தம்.

1-தேதி.

ப்ரெஞ்ச் பீரங்கிப்படையும் ப்ரிட்டிஷ் கப்பல் படையும் பெல்ஜியத்தின் கடற்கரையிலுள்ள ஜெர்மன் பீரங்கிப்படைகளைத் தாக்கின.

5-தேதி.

வெஸ்டெண்டிலுள்ள ஜெர்மன் பீரங்கிகளை ப்ரெஞ்சுக்காரர்களுடைய பெரிய பீரங்கிப்படையும், ப்ரிட்டிஷ் கப்பல் படையும் தாக்கின.

இங்க்லீஷ்காரர்கள் முன்பு பிடித்திருந்த ஹோஹன்

ஸால்லர் ரிடௌட் என்னும் அரணில் பெரும்பாகத்தை ஜெர்மானியர்கள் திரும்ப பிடித்திருக்கிறார்கள்.

7-தேதி.

ப்ரெஞ்ச் துருப்புகள் சாம்பேனிலுள்ள டாஹூர் என்னும் க்ராமத்தைப் பிடித்திருப்பதோடு டாஹூர் குன்றுக்கும் போயிருக்கின்றன.

9-தேதி.

ப்ரெஞ்ச் துருப்புகள் டாஹூர் க்ராமத்துக்குத் தென் கிழக்கே ரொம்ப முன் சென்றிருக்கின்றன.

12-தேதி.

லென்ஸ் போர்முகத்தில் ஜெர்மானியர்கள் ப்ரிட்டிஷ் துருப்புகளை பலமாய்த்தாக்கியும் பின் தள்ளப்பட்டார்கள்.

14-தேதி.

கிவன்சி காட்டில் ஜெர்மானியர்கள் சில ப்ரெஞ்ச் கிடங்குகளைப்பிடித்தார்கள். டாஹூர் க்ராமத்துக்குத் தெற்கில் ப்ரெஞ்ச துருப்புகள் முன் சென்று கொண்டிருக்கின்றன.

18-தேதி.

ப்ரெஞ்ச் துருப்புகள் சற்றுமுன் சென்றிருக்கின்றன. அவைகள் ஹார்ட்மான்ஸ்வீலர்காப் என்னுமிடத்து மலையையும் வாஸ்ஜிலில் ஒரு கோட்டையையும் பிடித்திருக்கின்றன.

20-தேதி.

ஜெர்மானியர்கள் புது ஸைன்யங்களுடன் ஹால்லுச்சில் ப்ரிட்டிஷாரை பலமாகத்தாக்கினார்கள். ரீம்ஸுக்குக் கிழக்கில் ஜெர்மானியர்கள் பலமாகத்தாக்கி முன் சென்றும் கடைசியில் பின் தள்ளப்பட்டார்கள்.

21-தேதி.

மேற்கு போர்க்களத்தில் பீரங்கியுத்தம் நடந்தது. ரீம்ஸுக்குக் கிழக்கில் ஜெர்மானியர்கள் நேசத்துருப்புகளை பலமாகத் தாக்கினார்கள்.

22-தேதி.

ஜார்ஜ் அரசர் போர்க்களத்திலுள்ள ஸைன்யத்தைப் பார்வையிடுவதற்காக ப்ரான்ஸுக்குப் போயிருக்கிறார். அவர் நேசத் துருப்புகளையும் பார்க்க உத்தேசித்திருக்கிறாராம்.

26-தேதி.

ப்ரெஞ்ச்துருப்புகள் சாம்பேன் ப்ரதேசத்தில் மெஸ்வில் என்னும் இடத்துக்கு வடக்கில் ஒரு பெரிய ஜெர்மன் பாதுகாப்பு வேலையைப் பிடித்தன.

28-தேதி.

ஜார்ஜ் அரசர் ப்ரான்ஸில் ப்ரிட்டிஷ் ஸைன்யங்களைப்பார்வையிடுகையில், அவர் ஏறியிருந்த குதிரை மிரண்டது; அரசர் கீழேவிழுந்து காயமடைந்தார். அவருடைய காயங்கள் குணமடைந்து வருகின்றனவென்று தெரியவருகிறது.

30-தேதி.

டாஹூருக்குப் பக்கத்தில் ஜெர்மானியர்களுடைய வசத்திலிருக்கும் ஒரு பெரிய அரணைப்பிடிப்பதற்காக ப்ரெஞ்ச்சுக்காரர்கள் பலமாக யுத்தம்செய்து வருகிறார்கள். அவர்கள் சில ஜெர்மன் கிடங்குகளைப் பிடித்தார்கள்.

## ரஷ்யாவுக்கும், ஆஸ்ட்ரியா, ஜெர்மனி இவைகளுக்கும் யுத்தம்.

1-தேதி.

வில்னுவுக்குக் கிழக்கிலும் ஸ்மார்கனைச் சுற்றிலும் யுத்தம் நடக்கிறது. ரஷ்யர்கள் லக்கை விட்டுவிட்டுப் போய்விட்டார்கள்.

2-தேதி.

ட்வின்ஸ்குக்கு 36-மைல் தென்கிழக்கிலுள்ள வெனிலாவிட்சி யென்னும் ஊரை ரஷ்யர்கள் பிடித்திருக்கிறார்கள்.

4-தேதி.

ரஷ்யர்கள் ஆஸ்ட்ரோ ஜெர்மன் துருப்புகள் தாக்கி முன் செல்லுவதைத் தடுத்து, தாங்களே அவர்களைத் தாக்க ஆரம்பித்திருக்கிறார்கள்.

5-தேதி.

ட்வின்ஸ்குக்கு 10-மைல் தென்கிழக்கில் ஒரு பலமான யுத்தம் நடந்தது. கோவல்-ஸார்னி ரெயில்வே ஸ்டிர்நதியைக் கடக்குமிடத்தில் ரஷ்யர்கள் ஜெர்மானியர்களைப் பின்னுக்குத் தள்ளியிருக்கிறார்கள்.

8-தேதி.

ட்வின்ஸ்குக்கு 12-மைல் வடமேற்கில் நடந்த யுத்தத்தில் ஜெர்மானியர்கள் ரஷ்யர்களுடைய கிடங்குகளைப் பிடித்திருக்கிறார்கள். ரஷ்யர்கள் ஸ்டிர் நதியின் இடது கரையில் ஒரு க்ராமத்தைப்பிடித்து ஆஸ்ட்ரோ-ஜெர்மன் துருப்புகளைத் துரத்தியடித்தார்கள்.

11-தேதி.

ட்வின்ஸ்குக்கு வடமேற்கில் யுத்தம் பலமாக நடக்

கிறது. எதிரிகள் ஸ்டிர் நதியைத் தாண்டிக் கிழக்குக் கரைக்கு வந்துவிட்டார்கள்.

13-தேதி.

ஜெர்மானியர்கள் ட்விின்ஸுக்கு 14-மைல் வடமேற்கில் சில அகழ்களைப் பிடித்தார்கள். கிழக்கு காலீஷ்யாவில் ட்ரெம்பௌலாவுக்கு மேற்கில் ரஷ்யர்கள் ஜெர்மானியர்களைத் தோற்கடித்து ஸ்ட்ரிபா நதிக்கப்பால் துரத்தி 2000-பேர்களைக் கைதுசெய்தார்கள்.

15-தேதி.

ட்வின்ஸுக்கு வடமேற்கில் பலமான யுத்தம் நடக்கிறது. ஸ்டிர் நதிக்கு மேற்கிலும் ப்ரிபெட்டுக்கு தெற்கிலும் உள்ள ஒரு க்ராமத்தை ரஷ்யர்கள் பிடித்தார்கள். காலீஷ்யாவில் ஸ்டிர் நதியின் இருகரையிலும் பலமான யுத்தம் நடக்கிறது.

18-தேதி.

ரிகாவுக்கு 21-மைல் தெற்கிலுள்ள ரெயில்வேயுக்குப் பக்கத்திலும் ட்வின்ஸுக்கு வடமேற்கிலும் பலமாக யுத்தம் நடக்கிறது. பால்டிக்கடலில் ஒரு ப்ரிட்டிஷ் ஸப்மரீன் கப்பல் 5-ஜெர்மன் ஸ்டீமான் கப்பல்களை மூழ்கடித்து இன்னொன்றைத் தரை தட்டும்படி செய்தது.

21-தேதி.

ரிகாவுக்கு 12-மைல் தென்மேற்கிலும் ட்வின்ஸுக்கு 10-மைல் தென்மேற்கிலும் யுத்தம் நடக்கிறது. ஸ்டிர் நதியின் மேற்குக்கரையில் ரஷ்யர்கள் எதிரிகளைத் தோற்கடித்துத் துரத்தினார்கள்.

22-தேதி.

ரிகாவுக்குப் பக்கத்தில் ஜெர்மானியர்கள் ட்வினா நதியின் வலதுகரையைப் பிடித்திருக்கிறார்களாம். போர்முகத்தின் தென்பாகத்தில் ரஷ்யத்துருப்புகள் ஏராளமாய் வந்து தாக்கினதால் ஜெர்மானியர்கள் பின்வாங்கினார்கள்.

23-தேதி.

கிழக்கு காலீஷ்யாவில் ரஷ்யர்கள் டார்னுபோலுக்கு வடக்கில் எதிரிகள்வசமிருந்த சில இடங்களைப் பிடித்ததோடு 7000-எதிரி ஸோல்ஜர்களையும் கைதிசெய்திருக்கிறார்கள்.

26-தேதி.

ட்வின்ஸைச் சுற்றிலும் பலமானயுத்தம் நடக்கிறது. அதற்கு 12-மைல் வடமேற்கிலுள்ள இல்லக்ஸ்ட் என்னுமிடத்தை ஜர்மானியர்கள் பிடித்திருக்கிறார்கள்.

28-ந்தேதி.

ட்வின்ஸுக்கு வடமேற்கில் ஜெர்மானியர்கள் ரஷ்யர்களை பலமாகத் தாக்கியும் பின் தள்ளப்பட்டார்கள். ஸ்டிர்நதிக்குப்பக்கத்தில் ஜெர்மானியர்கள் முன் செல்லுவதை ரஷ்யர்கள் தடுத்துவிட்டார்கள்.

## பொது வர்த்தமானம்.

அக்டோபர்மீ 6-ந்தேதி.

ஆல்ப்ஸ் மலை ப்ரதேசங்களிலும் கார்ஸோ பீடபூமியிலும் சிறு சண்டைகள் நடந்தனவென்று இட்டாலியர்கள் தெரிவிக்கிறார்கள்.

11-ந்தேதி

பால்டிக் கடலில் ஒரு ப்ரிட்டிஷ் ஸப்மரீன் கப்பல் ஒரு ஜெர்மன் கப்பலை மூழ்கடித்துவிட்டது.

13-தேதி.

காமரூன்ஸ் ப்ரதேசத்திலுள்ள வும்பிகாஸ் என்னுமிடத்தை ப்ரிட்டிஷ் படைகள் பிடித்திருக்கின்றன.

ப்ரான்ஸின் அன்ய தேச வ்யவஹார மந்த்ரியாகிய மான்ஸியே டெல்காஸெ தமது உத்யோகத்தை ராஜிநாமா கொடுத்துவிட்டார். ப்ரான்ஸின் ப்ரதம மந்த்ரியாகிய மா. ரெனெ விவியானி தமது ப்ரதம மந்த்ரி உத்யோகத்தோடு, அன்யதேச வ்யவஹார மந்த்ரி வேலையையும் கவனித்து வருவார்.

ஆஸ்ட்ரியர்கள் கார்ஸோ பீடபூமியைத் தாக்கினார்கள், அதில் இருகக்ஷியாரும் பீரங்கி யுத்தம் பலமாகச் செய்தார்கள். கடைசியில் ஆஸ்ட்ரியர்கள் பின் தள்ளப்பட்டார்கள்,

15-தேதி.

பால்டிக் கடலில் ஒரு ப்ரிட்டிஷ் ஸப்மரீன் கப்பல் 2-ஜெர்மன் டிஸ்ட்ராயர் கப்பல்களை மூழ்கடித்தது.

19-தேதி

ஒரு ஜெர்மன் டார்பிடோ கப்பல் பால்டிக் கடலில் ஒரு ஸப்மரீன் மோதி மூழ்கிவிட்டதாகத் தெரிகிறது.

21-ந் தேதி.

டைரோல் - ட்ரெண்டினோ ப்ரதேசத்தில் இட்டாலியர்கள் ரொம்ப முன் சென்று கொண்டிருக்கிறார்கள்.

இஸான்ஸோ நதிப்ரதேசத்திலும் கார்ஸோ பீட பூமியிலும் பீரங்கியுத்தம் நடக்கிறது.

23-ந் தேதி.

டைரோல் ட்ரெண்டினோ ப்ரதேசத்தில் பலமாக யுத்தம் நடக்கிறது. டாவோன் பள்ளத்தாக்கில் இட்டாலியர்கள் நன்றாய்ப் பாதுகாக்கக் கூடிய ஒரு இடத்தைப் பிடித்திருக்கிறார்கள். கார்ஸோபீட பூமியில் அவர்கள் அநேக இடங்களில் எதிரிகளைத் தோற்கடித்தார்கள்.

25-தேதி.

பால்டிக்கடலில் லிபாவுக்குப் பக்கத்தில் ஒரு ப்ரிட்டிஷ் ஸப்மரீன் கப்பல் ஒரு ஜெர்மன் ஸப்மரீனை மூழ்கடித்தது.

26-தேதி.

கார்டா ப்ரதேசத்திலும் அடீஜ் பள்ளத்தாக்கிலும் இட்டாலியர்கள் முன்சென்று கொண்டிருக்கிறார்கள்.

இட்டாலியாகள் எதிரிகளைத் தாக்கிக்கொண்டிருக்கிறார்கள். லெட்ரோ பள்ளத்தாக்கில் அநேக இடங்களை அவர்கள் பிடித்திருக்கிறார்கள். இஸான்ஸோ போர் முகத்தில் கடுமையான பீரங்கியுத்தம் நடக்கிறது.

28-ந்தேதி.

ஆர்கில் என்னும ப்ரிட்டிஷ் க்ரூஸர் ஸ்காட்லண்டின் கிழக்குக்கரையில் தரைதட்டிப்போயிற்று.

ப்ரான்ஸின் மந்த்ராலோசனை ஸபை ராஜீநாமாக் கொடுத்துவிட்டது. புதுஸபையொன்று ஏற்படுத்தப்படும்.

30-ந்தேதி.

பரான்ஸில் புது மந்த்ராலோசனை ஸபை கூடியிருக்கிறது. மா. ப்ரயாண்ட் ப்ரதமமந்த்ரியாயும், அன்ய தேசவ்யவஹார மந்த்ரியாயும் இருக்கிறார். மா. விவியானி நீதியிலாகா மந்த்ரியாகிறார். பாரிஸின் ராணுவ கவர்னராயிருந்த மா. காலியனி யுத்த மந்த்ரியாகிறார்.

ஜபபான, மற்ற நேசவாசுகளோடு சேராமல் தனியாக எதிரிகளோடு ஸமாதானம செய்யாதென்று லண்டனிலுள்ள ஜப்பான் தூதர் தெரிவித்திருக்கிறார்.

இட்டாலியர்கள் ட்ரெண்டினோ ப்ரதேசத்திலும் இஸான்ஸோ நதியின் மேல்பாகத்திலும் முன்சென்று கொண்டிருக்கிறார்கள்.

# SEASON

## காலஸ்திதி

---

**Rainfall.**

மழை.—1915ஆ எப்ரல்மீ 1உ யிலிருந்து 1915ஆ நவம்பர்மீ 5உ வரையில் பெய்த மழையின் அளவும், இந்தக் காலத்தில் ஸராஸரியில் பெய்திருக்கவேண்டிய மழையின் அளவும், கீழே அங்குலம் வெண்டுகளாகக் குறிக்கப்பட்டிருக்கின்றன.

| மழை பெய்த ஊரின் பெயர். | பெய்த மழை. அங்குலம். | பெய்திருக்க வேண்டிய மழை. அங்குலம். |
|---|---|---|
| கோபால்பூர் | 43·79 | 40 57 |
| வால்டேர் | 43 76 | 32·21 |
| காக்கிநாடா | 33·24 | 33 60 |
| மஸூலிப்பட்டணம் | 40·51 | 35·33 |
| நெல்லூர் | 13·50 | 23 15 |
| மதராஸ் | 26·20 | 31·89 |
| கூடலூர் | 13 41 | 31·69 |
| நாகபட்டணம் | 13·20 | 27.63 |
| பாமபன் | 13 36 | 16·95 |
| கொழும்பு | 63·11 | 59·07 |
| திருவனந்தபுரம் | 72 02 | 53 47 |
| கொச்சி | 113 79 | 104·40 |
| கள்ளிக்கோட்டை | 107·81 | 111·43 |
| மங்களூர் | 98·45 | 124 50 |
| மெர்க்காரா | 106·94 | 123 09 |
| ஐதராபாத் | 51 41 | 29·67 |
| பல்லாரி | 25 65 | 18.23 |
| கானூல் | 19·46 | 25·49 |
| கடப்பை | 19 56 | 27 57 |
| ஹாஸ்ஸான் | 29·36 | 32 57 |
| பெங்களூர் | 31·51 | 32·25 |
| கொடைக்கானல் | 34 93 | 45·07 |
| உதகமண்டலம் | 53·90 | 47·21 |
| கோயம்புத்தூர் | 16 22 | 16·88 |
| வேலூர் | 29 60 | 35·46 |
| சேலம் | 37 33 | 35·44 |
| திருச்சிநாபள்ளி | 22 26 | 24·58 |
| புதுக்கோட்டை | 26·25 | 26·25 |
| மதுரை. | 29 66 | 27·76 |
| திருநெல்வேலி | 13 96 | 14 69 |

# Calendar—பஞ்சாங்கம்.

| அம்ருதாதி | உதயலக் | அஹஸ | துலு | இங் | தமி | வாரம் | கலி-5017, சாலி-1838, கொல்லம்-1091, பஸலி-1325, இங்கி-1915-நவம்பர்-டிசம்பர் } 49-ராக்ஷஸ ஐப்பசி கார்த்திகைமீ { கார்த்திகம்-மார்க்கசிரம, தக்ஷிணாயனம்-சரத்ருது ஹிஜரி-1334 மொஹரம்-ஸபர்மீ |
|---|---|---|---|---|---|---|---|
| யோக | நா வி | நா வி | உ | உ | உ | | |
| மஅ | 5 26 | 2846 | 8 | 16 | 1 | செ | தச-24-25, பூட்-37-48, ஹா-49-16, வணி-55-6, விருச்சிகதசமீதி, விஷ்ணுபதிபுண்யகாலம், ஸமார்க்கம், கரிநாள் |
| சிஉ | 15 | 45 | 9 | 17 | 2 | பு | ஏகா-26-6, உட்-41-7, வஜ்-48-3, பவ-57-19, தி-3-0, ஸர்வ-கைசிக-ஏகாதசி, பீஷ்மபஞ்சகவிரதாதி |
| சிஅ | 5 4 | 44 | 10 | 18 | 3 | வி | த்வா-28-56, ரே-45-27, வித்-47-36, பால-28-56, தி-13-11, பரதோஷம், மன்வாதி, துளஸீவிவாஹம், ப்ரபோதோத்ஸவம், சாதுர்மாஸ்யவிரதபூர்த்தி |
| அசி | 4 53 | 43 | 11 | 19 விருச்சிகம் | 4 | வெ | த்ர-32-31, அசு-50-37, வ்ய-47-49, கவு-0-29, ரா-10-58, வயசிரா, விஷ்ணுவைகுண்டசதுர்த்தசி |
| சிஅ | 42 | 42 | 12 | 20 | 5 | ச | சசி-37-0, பர-56-32, வரீ-48-37, கர-4-41, தி-16-55, சிவவைகுண்டசதுர்த்தசி, பரணிதீபம் |
| சி | 31 | 41 | 13 | 21 | 6 | ஞா | ○-42-13, கிரு-60-0, பரி-49-58, பத்-9-32, ரா-1-3, மன்வாதி, ஆகாமாவை, கிருத்திகை, ஸர்வாலயதீபம் |
| மஅ | 20 | 40 | 14 | 22 | 7 | தி | பா-48-6, கிரு-3-8, சிவ-51-46, பால-15-5, ரா-19-11, கார்த்திகபகுள, இஷ்டி |
| அசி | 4 9 | 39 | 15 | 23 | 8 | செ | த்வி-54-29, ரோ-10-18, சித்-53-57, தை-21-15, தி-26-3, சாபாயன-20-52, அருன்யசயன விரதம் |
| சி | 3 58 | 38 | 16 | 24 | 9 | பு | த்ரி-60-0, மிரு-17-53, சாத-56-19, வணி-27-47, ரா-12-57, த்ரிதினஸ்ப்ருக |
| மஅ | 47 | 37 | 17 | 25 | 10 | வி | த்ரி-1-7, திரு-25-36, சுப-58-39, பவ-34-26, ரா-30-48, ஸங்கடசதுர்த்தி, கரிநாள் |
| சிஉ | 36 | 37 | 18 | 26 | 11 | வெ | சது-7-42, புன-33-6, சுப-60-0, கவு-40-48, சே-3-25, ரா-26-54, இராமா |
| சிம | 25 | 36 | 19 | 27 | 12 | ச | பஞ-13-45, பூச-39-58, சுப-0-39, கர-46-26, ஷஷ்டீதி, இவாமா.. |
| சிம | 14 | 35 | 20 | 28 | 13 | ஞா | ஷஷ்-18-51, ஆயி-45-41, பரா-2-0, பத்-50-49, தி-15-13, அதிதி, அப-அந்தம்-22-52 |
| | 3 3 | 34 | 21 | 29 | 14 | தி | ஸப்-22-24, மக-49-48, மா-2-17, பால-53-30, தி-17-58, ஸபதமீதி, அப-ஆதி-17-8, வைசிரா, காலபைரவாஷ்டமீ |
| சிஅ | 2 52 | 33 | 22 | 30 | 15 | செ | அஷ்-24-6, பூர-51-58, வை-1-15, விஷ்-58-37, தை-54-8, தி-10-45 |
| அம | 41 | 32 | 23 | 1 | 16 | பு | நவ-23-39, உத்-52-0, ப்ரீ-54-16, வணி-52-34, தி-10-13, நவமீதி |
| சி | 29 | 32 | 24 | 2 டிசம்பர் | 17 | வி | தச-20-59, ஹஸ்-49-56, ஆயு-48-13, பவ-48-51, தி-12-31, திதித்வயம், இராமா, கரிநாள் |
| சி | 18 | 31 | 25 | 3 | 18 | வெ | ஏகா-16-14, சித்-45-55, ஸவு-40-35, கவு-43-9, தி-8-46, ரா-30-13, த்வாதசிதி, ஸர்வஏகாதசி, இவாமா |
| அசி | 2 7 | 31 | 26 | 4 | 19 | ச | த்வா-9-41, சுவா-40-17, சோ-31-36, கர-35-48, சே-2-44, ரா-24-16, சனிப்ரதோஷம |
| உம | 1 56 | 30 | 27 | 5 | 20 | ஞா | த்ர-1-39, சசி-52-37, விசா-33-27, அதி-21-37, பத்-27-14, ரா-13-44, மாஸசிவராத்ரீ, அவம |
| சி | 45 | 29 | 28 | 6 | 21 | தி | ●-43-3, அனு-25-56, சுக-10-54, கிரு-59-53, சது-17-53, ரா-9-37, ஸர்வஅமா, பிண்டபிதிரு, ப்ரதக்ஷிணம் |
| உஅ | 34 | 29 | 29 | 7 | 22 | செ | ப்ர-33-24, கேட்-18-9, சூல-48-56, கிம்-8-0, பால-52-43, ரா-7-5, மார்க்கசிரசுத்த, இஷ்டி |
| மஅ | 23 | 28 | 30 | 8 | 23 | பு | த்வி-24-12, மூல-10-38, கண்-38-25, தை-49-51, தி-7-7, ரா-3-18, த்விதியாதி, சந்திரதர்சனம் [சதுர்த்திவிரதம் |
| சி | 12 | 28 | 1 | 9 | 24 | வி | த்ரி-15-48, பூரா-3-49, உரா-58-11, வ்ரு-28-43, வணி-42-2, தி-21-4, திதித்வயம், த்ரிதியைக்குருதபவ்யாப்தி, |
| மசி | 1 1 | 27 | 2 | 10 | 25 | வெ | சது-8-38, சிர-54-0, துரு-20-6, பவ-55-37, தி-7-23, பஞ்சமீதி, சிரவணஉபவாஸம், நாகபஞ்சமீ |
| சிஅ | 0 50 | 27 | 3 ஸபார் | 11 | 26 | ச | பஞ்-3-1, ஷஷ்-59-9, அவி-51-33, வ்யா-12-45, கவு-30-51, தி-3-28, ஷஷ்டியுபவாஸம், சமபாஷஷ்டீ, அவம |
| சி | 39 | 27 | 4 | 12 | 27 | ஞா | ஸப-57-9, சத-50-53, ஹர்-6-49, கர-27-54, தி-9-10, மிதாஸப்தமீ, சூர்யவிரதம் |
| சி | 28 | 26 | 5 | 13 | 28 | தி | அஷ்-57-0, பூட்-52-3, வஜ-2-21, வித்-59-20, பத்-26-52, தி-7-2 |
| அசி | 17 | 26 | 6 | 14 | 29 | செ | நவ-58-33, உட்-54-51, வ்ய-57-36, பால-27-33, தி-17-0, விருச்சிகநவமீதி, வ்யசிரா, கல்பாதி |
| உம | 0 6 | 2826 | 7 | 15 | 30 | பு | தச-60-0, ரே-59-8, வரீ-57-1, தை-29-54, தி-26-50, சாபரவி-31-30, விருச்சிககுன்யதி, சாபதசமீதி, ஷடசீதி புண்யகாலம், த்ரிதினஸ்ப்ருக் |

| | | | |
|---|---|---|---|
| | | | சு |
| குரு | 9-சிம்-செ 11-விரு-பு | | செ கே |
| ரா | 11-2னு-சு 30-தனு-பு | | |
| | ரா-சு | பு | |